இலங்கை துறைமுக அதிகாரசபை









# ஆண்டறிக்கை
# 2014

## எமது தொலைநோக்கு

### “பட்டுப்பாதையின் கடல்சார் சேவை வழங்கலின் தலைசிறந்தவர் எனும் நிலையினை பெறுதல்

இலங்கை துறைமுகங்களின் எதிர்கால யுகம் தொடர்பில் கவனித்துப் பார்க்கையில் சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்களை விரிவுபடுத்தும் சர்வதேச வர்த்தக உருவாக்கத்தை எதிர்பார்த்து இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் உன்னத கொள்கலன் கேந்திரத்தளம் எனும் கருத்திலிருந்து விசேட உலக சேவை வழங்கலின் கேந்திரத் தளமாக நகர்த்திச் செல்கின்றது. இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படுதலில் தேசிய மற்றும் சர்வதேச சிறந்த தேர்ச்சியினை மேலும் முன்னெடுத்துச் செல்வதுடன் சகல தகவலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளும் சிக்கலான வழங்கல் சேவையை வலுப்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

## எமது பணிக்கூற்று

### “நிலைபேறான சூழலினுள் சர்வதேச மட்டத்திலான கடல்சார் சேவைகளை வழங்குதல்”

இலங்கையில் உலக வினியோக கேந்திரத் துறைமுகம் உருவாக்கும் எண்ணம் வலியுறுத்தப்பட்டு விசேட கடலக பிரவேசம் கொண்ட ஆழமான கடல் துறைமுகமொன்று ஏற்படுத்தப்படுவதோடு வழங்கல் சேவைகளை ஒன்றிணைக்கும் பல்பரிமாண வழங்கல் தொகுதியொன்றினையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது. இக்கடல் துறைமுகமானது பாரியளவிலான கப்பல்கள் உட்புகக் கூடிய முறையில் விசேட முனையங்களைக் கொண்ட கையாளல்களின் இலகுவான இடமாக இருக்கும்.

துறைமுகத்தின் எதிர்கால வளர்ச்சி மற்றும் பிராந்திய அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்டு நகர வரையறைகளிலிருந்து விடுபட்ட நவீன துறைமுகமொன்றின் மூலம் நீண்டகால பரிமாணம் உறுதிப்படுத்தலின் ஊடாக உலக பிரபல்ய கைத்தொழில் மற்றும் வழங்கல் வலயம் உருவாக்கப்படுவதன் மீது துறைமுக கடல்சார் கைத்தொழில் மற்றும் வழங்கல் தொகுதிகளின் பிரதான செயற்பாட்டு முறையொன்றை ஏற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. உன்னத தர நிலைகளை அனுசரித்து பொருளாதார ரீதியாக வினைத்திறன் மிகுந்த சிறந்த விரிவான அனுகூலங்களை மேலும் உறுதிப்படுத்துவதன் மூலம் துறைமுக பாவனையாளர்கள் போன்று பங்காளர்களுக்கும் துறைமுக சேவைகள் வழங்குதல் உறுதி செய்யப்படும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கங்கள் | 3 |
| நிறுவனத்தினூடான நோக்கங்கள் | 4 |
| தலைவரின் மீளாய்வு | 5 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 8 |
| நிதிசார் முக்கிய விடயங்கள் | 11 |
| எங்கள் அமைச்சர்கள் | 12 |
| பணிப்பாளர் சபை | 13 |
| முகாமைக் குழுவும் கணக்காய்வுக் குழுவும் | 18 |
| வர்த்தக அபிவிருத்தி | 20 |
| நிர்வாக தொழிற்பாடு | 21 |
| இயக்க மீளாய்வு | 24 |
| நிதி மீளாய்வு | 73 |
| ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் | 77 |
| மனித மூலதனம் | 78 |
| ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை | 80 |
| துறைமுக புள்ளி விபரங்கள் | 85 |
| முக்கிய நிகழ்வுகள் | 90 |
| நிதி அறிக்கைகள் | 95 |
| பணிப்பாளர் சபையின் அறிக்கை | 96 |
| நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை | 98 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 99 |
| சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை | 100 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 101 |
| நிதி நிலைமை தொடர்பான அறிக்கை | 102 |
| விபரமான வருமான அறிக்கை | 103 |
| திணிவு மாற்றம் மீதான அறிக்கை | 104 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 105 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 106 |
| வரைபட மீளாய்வு | 140 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 143 |
| அமைப்பு விதி தொடர்பான தகவல்கள் | 155 |

## நோக்கங்கள்

**2020 இல்....**

1. தலைசிறந்த கடல்சார் சேவைகள் வழங்கும் மத்திய நிலையம்.
2. 200 மில்லியன் தொன் கப்பற்சரக்குகளைக் கையாளல்.
3. அமெரிக்க டொலர் 01 பில்லியன் வருமானம் பெறுதல்
4. துறைமுகங்களினுள் அமெரிக்க டொலர் 10 பில்லியனுக்கான முதலீடுகள்.
5. தேசிய வருமானத்தின் பிரதான பங்காளியாகுதல்.
6. பசுமை மிகு சூழல்நேய துறைமுக இயக்குனராகுதல்.

## அடைந்து கொள்ளலிலான மூலோபாயங்கள்

1. கொழும்பு துறைமுகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சிறப்பு அமைப்புகளினது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
2. கடல்சார் சிறப்பு மத்திய நிலையமெனும் கொழும்புத் துறைமுகத்தின் நிலைபாட்டினை உறுதிப்படுத்துதல்.
3. குறித்த பிரிவுசார்ந்த விசேட சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
4. மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை சர்வதேச நிலையிலான சேவைகள், கைத்தொழில் மற்றும் கொள்கலன் கையாளல் துறைமுகமாக அபிவிருத்தி செய்தல்.
5. கப்பற்சரக்குகள் போன்று துறைமுக பாவனையாளர்களின் ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுதல்.
6. முக்கிய மூலோபாய அமைவிடமாக உலகில் பிரபல்யம் பெறுதல்.
7. திட்டமிடப்பட்ட மீளமைப்பு மற்றும் நிருவாக நடைமுறைகளை மீள் திட்டமிடுதல்.
8. உயர் நிலையிலான நிதி முகாமைத் தொகுதிகளை நடைமுறைப்படுத்துதல்.
9. காபன் பரிமாணம் குறைக்கப்படுதல்.
10. கொண்டுள்ள வளம் மற்றும் போட்டி மிகுந்த பயன்தகு நிலைமைகளுக்கேற்ப ஏனைய பிராந்திய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.
11. வர்த்தக நடவடிக்கைகளை பன்முகப்படுத்துதல்.
12. எண்ணெய் மற்றும் வாயு வசதிகளுக்கான ஏற்பாடுகள்.
13. கப்பலோட்டம் நோக்கமாகக் கொண்ட செயற்திறன்மிகு சேவைகள்
14. கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள்.

- இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் மிகவும் புதிய இயக்க வசதிகளை அபிவிருத்தி செய்தலும், இடைவிடாது முன்னெடுத்துச் செல்லப்படுதலும்.
- பயனான வகையிலும் வினைத்திறனுடனும் துறைமுக சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
- ஆகுசெலவு பயனளிக்கக் கூடிய வினைத்திறனுடனும் மற்றும் நம்பிக்கை மிகு சேவைகள் வழங்குவதன் மூலம் போட்டித்தன்மையூடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மிகவும் சிறந்த நற்பயன்களை பெற்றுக்கொடுத்தல்.
- கப்பல்கள், கப்பல் சரக்குகள், துறைமுக பாவனையாளர்கள் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
- துறைமுக வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் உற்சாகமூட்டும் சிறந்த சேவை சூழலை உருவாக்குதல்.
- அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்களுக்கு பொது திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்கான பங்களிப்பு வழங்குதல்.
- கப்பல்களை தாமதப்படுத்தாது நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு, உயர் வினைத்திறன் பேணல்.
- அதிகளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை மேம்படுத்துதல்
- துறைமுக பாவனையாளர்களுக்கு உயர் சேவைகளை வழங்கி வர்த்தக துறைமுகங்களில் இலாபகரமான இயக்கச் செயற்பாட்டு முறையை முன்னெடுத்துச் செல்லுதல் இதனூடாக நம்பிக்கைமிகு வினைத்திறனுடன் கூடிய இயக்குனர் என்ற நற்பெயரை வளர்த்துக் கொள்தல்.
- துறைமுக வர்த்தகம் மற்றும் சுங்கப் பிணை நடவடிக்கைகள் உட்பட மீள் கப்பல் ஏற்றும் சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கொள்கலன் கையாளுதல் தொடர்பிலான போட்டித்தன்மையுடன் கூடிய உயர் சேவைகளை வழங்குதல்.
- கடலை அண்மித்த பிரதேசங்களின் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக தேவைப்படும் துறைமுக வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- மனித வலு தேவைப்பாடுகள் மற்றும் ஆளணி மதிப்பிடுதல் உட்பட இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான விடயங்களை மேம்படுத்துதல், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்கப்படும் பங்களிப்பை கவனத்திற் கொண்டு சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வதற்கு ஊக்குவிக்கப்படும். இதனால் எழும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படுவதற்கு மஹபொல பயிற்சி நிலையம் மேலதிக பயிற்சிகளையும், மீள் பயிற்சியளித்தலையும் மேற்கொள்ளல்.
- நீரில் மேற்கொள்ளப்படும் சேவைகள், எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைகள், நன்னீர் வழங்குதல் மற்றும் கொள்கலன்கள் புதுப்பித்தல் போன்ற துறைமுக செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகளை வழங்குவதன் ஊடாக பன்முகப்படுத்துதல்.
- வினைத்திறன் மிகு வரி, மிகவும் சிறந்த நிறுவக முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் உறுதியான ஆகுசெலவு கட்டுப்பாடு போன்றவற்றுடனான முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட நிதி சீர்திருத்த செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துதல்.

2014 ஆண்டின் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையினை நான் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இலாபம் கிடைக்கப்பெறும் நிலைமை தொடர்ச்சியாகப் பேணப்பட்டிருக்கின்றமை தைரியமூட்டும் விடயமென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஜயகொள்கலன் முனையம் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையம் நீண்ட வரலாற்றை கொண்டிருப்பதோடு துறைமுக அதிகாரசபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் இம்முனையங்களினால் பிரதான பங்களிப்பு வழங்குகின்றன. கொழும்பு சர்வதெச கொள்கலன் முனையம் (CICT) அதன் முதலாவது பூரணமான இயக்க ஆண்டினுள் வழங்கிய பங்களிப்பு பாராட்டத்தக்கதாக இருப்பதோடு தெற்காசிய நுழைவாயில் முனையத்தினாலும் (SAGT) இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானத்தில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. இந்நிலைமை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சாத்தியவளத்துக்கு சான்று பகர்கின்றது. எனவே சிறந்த முகாமைத்துவ முறைகள் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபை சிறந்த நிறுவனமொன்றாகும் என்பது எனது நம்பிக்கையாகும். எமது நிறுவனம் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை தொனிப்பொருளாக கொண்டு செயற்படுகின்றது . துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை கௌரவ அமைச்சின் முன்னணி தலைமைத்துவத்துடன் நேர்மை மற்றும் படைப்பாற்றல் சிறப்பாக ஒன்றுசேர்த்தல் புலப்படும் பணிப்பாளர் சபை இலங்கை துறைமுக அதிகாரசபையினை மிகவும் உயர்ந்த நிலையை அடையப்பெறுவதனையும் உயர் மட்டத்தில் கிடைக்கப்பெற வேண்டிய சர்வதேச அங்கீகரிப்பையும் உறுதி செய்யும்

2014 ஆண்டில் ஜய கொள்கலன் முனையம் நோக்கி புதிய பிரதான ஐந்து கப்பல் சேவைகளும் இரண்டு ஊட்டக் கப்பல் சேவைகளும் வருகை தந்துள்ளதோடு நான்கு முனைய சேவை ஒப்பந்தங்களும் (TSA) கைச்சாத்திடப்பட்டுள்ளன. பெறுமதியான வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வது மாத்திரமன்றி புதிய வர்த்தகங்கள் கவரப்படுதலிலும் சேவை செயற்திறன் மேம்படுத்தப்படுவதிலும் நாம் முயற்சி எடுக்கின்றோம். அதேபோன்று நிறுவனம் தொடர்பில் தமது உயர் பங்களிப்பை வழங்கக் கூடியவாறு எமது பணியாளர்களுக்கும் ஊழியர் படையணியினருக்கும் சிறந்த சேவை நிலைமைகளை ஏற்படுத்துவது எமது கொள்கையாகும்.

**செயலாற்றுகை**

ஆண்டுகளின் வளர்ச்சிகள் ஆராயப்படும் போது 2014 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் முனையங்களினால் கையாளப்பட்ட ஒட்டுமொத்த கொள்கலன் பரிமாணம் 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2.3% வளர்ச்சி பதிவாகியுள்ளது. மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 2013 ஆண்டில் இருபது சம அலகுகள் 1,779,882 இருந்து 1,882,052 இருபது சம அலகுகள் வரை 5.7% னால் வளர்ச்சியடைந்துள்ளது.

பதிவாகிய உயர் பரிமாணம் அதாவது 2,559,339 இருபது சம அலகுகளை அடைந்து கொள்வதில் புதிய உட்கட்டமைப்பு வசதிகளும் உபகரணங்களும் பங்களிப்புச் செய்துள்ளதோடு இது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட்ட ஆகக் கூடிய கொள்கலன் கையாளல் பரிமாணம் ஆகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு துறைமுகத்தினால் இருபது சம அலகுகள் கையாளப்பட்டதனால் 52% சந்தைப் பங்குகள் பெறப்பட்டுள்ளதோடு 2014 ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்குரிய SAGT மற்றும் CICT யின் பங்களிப்பு முறையே 34% மற்றும் 14% ஆகும்.

கொழும்பு துறைமுக வரலாற்றில் ஆகக்கூடிய வருடாந்த கொள்கலன் பரிமாணம் 2014 ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கையாளப்பட்டுள்ள ஒட்டுமொத்த பரிமாணம் 4,907,915 இருபது சம அலகுகளாக இருந்ததோடு இது 14% வளர்ச்சியாகும். கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தில் ஆழமான நங்கூரத்தளங்கள் இருக்கின்றமை இதற்கான காரணமாகும். இந்த போக்குத்தன்மை எதிர்காலத்திலும் தொடர்ச்சியாக இருக்குமென நாம் எதிர்பாரக்கின்றோம்.

**நிதி**

2014 ஆண்டின் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானம் 37,491.6 மில்லியன் ஆகும் இது 2013 ஆண்டின் வருமானமான ரூபா 34,723.6 மில்லியனுடன் ஒப்பிடும் போது 8% வளர்ச்சியாகும். முன்னர்

குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) மற்றும் தெற்காசிய நுழைவாயில் முனையக் (SAGT) கம்பனிகளினது பங்களிப்புகள் அதிகாரசபையின் வருமான வளரச்சிக்கு தாக்கமேற்படுத்திய பிரதான காரணியாக அமைந்தது.

2014 ஆண்டில் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் கட்டம் 1 மற்றும் 11 தொடர்பில் பெறப்பட்டுள்ள மொத்த கடன் தொகை டொலர் 1 பில்லியனினால் அதிகரிக்கப்பெற்றுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்திற்காக பெறப்பட்டுள்ள கடன் தொகை அமெரிக்க டொலர் 80 மில்லியன் ஆகும். இது 1200 மீற்றர் நீளமான முனையத்தின் சிவில் வேலைகளி 35% நிறைவு செய்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

**அபிவிருத்தி திட்டங்கள்**

இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் முறையாக அமைந்துள்ள கடல் மற்றும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்து மேம்படுத்தி பேணிச் செல்லப்பட வேண்டியதன் முக்கியத்துவம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த செய்திட்டத்தின் கட்டம் 1 கீழ் 400 மீற்றர் நீளம் மற்றும் 18 மீற்றர் ஆழமான நங்கூரத்தளம் உள்ளிட்டதான கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிழக்கு கொள்கலன் முனையம் பசுமை துறைமுக தொழில்நுட்ப பயன்பாடுகளுடன் பாரிய அளவிலான கப்பல்களின் தேவைக்கேற்பவாறான வசதிகளையும் மற்றும் கென்ட்ரி பாரம்தூக்கிகளையும் இப் புதிய முனையம் கொண்டிருக்கும்.

16,600 கொள்கலன் பரிமாணம் கொண்ட MCS நிவுயோக் எனும் அதிக பாரிய கொள்கலன் கப்பல் கொழும்பு தெற்கு கொள்கலன் முனையத்தில் கையாளப்பட்டது. இவ்வாறான பரிமாணத்தைக் கொண்ட கப்பல் கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

கொள்கலன் கையாளல் அளவு தீவிரமாக அதிகரித்தலோடு கொழும்பு துறைமுக உள்ளக பாதைகளின் விரிவாக்கல் பணிகளும் அதற்கு இணையாக மேற்கொள்ளப்பட்டன.

காலி முகத்திடல் முன்னால் அமைந்துள்ள 233 கடல் ஹெக்டயார் பிரதேசம் நிரப்பப்படும் நோக்கில் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செய்திட்டம் 2014 செப்டெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் செய்திட்டத்தின் மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பரிந்துரைகள் கிடைக்கப்பெறும் வரை குறித்த செய்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் அதிகரிக்கப்பெறும் கிராக்கிகளுக்கு ஏற்பவாறு கப்பற்சரக்கு கிராமம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் சாத்தியம் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.

நேவீஸ் (NAVIS) கணனித் தொகுதியூடாக சிட்டைகளுக்கான கொடுப்பனவு தயாரித்தலின் வசதிகள் விரிவாக்கப்பட்டு அனைத்து கொடுப்பனவு நடவடிக்கைகளும் நிதிப் பிரிவு ஊடாக மேற்கொள்ளக் கூடியவாறு பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. துறைமுகப் பாவனையாளர்களின் அதிகரித்த வேண்டுகோளின் மீது தன்னியக்க கொடுப்பனவு வசதிகள் மேறகொள்ளப்படுவதற்கு தனியார் வங்கிகள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் இரண்டாம் கட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் 50% முடிவடைந்துள்ளன. மேலும் செயற்கை தீவினை அமைக்கும் பணிகளில் 75% நிறைவடைந்துள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பூரண உரித்துடைய மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனியினால் பெறப்பட்ட 100 டொலர் மில்லியன் கடன் தொகை பயன்படுத்துதலின் மூலம் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் மற்றும் எண்ணெய் களஞ்சியப்படுத்தும் வசதிகளும் 2014 யூன் மாதம் நிறைவு செய்யப்பட்டன. அதேபோன்று சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி பங்களிப்புடன் காலி துறைமுகம் வணிக மற்றும் உல்லாசத் துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான பெருமளவிலான நிலப் பிரதேசங்களைக் கவனத்திற்கொண்டு மிகவும் விரிவான அபிவிருத்தி திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் பல நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

**மனிதவள அபிவிருத்தி**

பணியாளர்களின் நலன்புரி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அதன் மேம்பாடுகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நவீன உபகரணங்களுடனான புதிய சமையலறையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு பணியாளர்களின் உணவுகளினது தரமும் உயர்த்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான ஊழியர் படையினை பேணிச் செல்லும் நோக்கில் தொற்று மற்றும் தொற்றாத நோய்கள் தொடர்பிலான அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள், நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்குதல் மற்றும் அதற்கான பரிகாரங்கள் போன்ற பணிகள் வைத்தியப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**முடிவு**

வலயத்தில் கடல்சார் கேந்திரத்தளமாக உருவாக்கும் நோக்கில் தொழில்சார்ந்த வகையிலும் உலக நடப்புகளுக்கேற்பவும் இலங்கை துறைமுக அதிகாரசபையை முன்னெடுத்துச் செல்வது எமது இலக்காக உள்ளது. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரினால் வழங்கப்பட்ட ஒத்தாசை மற்றும் பெறுமதியான வழிகாட்டல்கள் சார்பிலும் அமைச்சின் செயலாளர், இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவர், பணிப்பாளர்கள், பணிப்பாளர் சபையின் முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பிலும் நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதேபோன்று அதிகாரிகள், உயர்மட்ட நிலையின் ஆளணியினர், ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் போன்றவற்றினால் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பு சார்பிலும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உலகில் சிறந்த மத்திய துறைமுக தளமாக ஆக்கும் முயற்சிகளில் எமது பாவனையாளர்/வாடிக்கையாளர்களினால் எமக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான உதவி மற்றும் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை தொடர்பிலும் நான் நன்றி கூர்கின்றேன்.



**கலாநிதி லக்தாஸ் பனாகொட**
**தலைவர்**

**வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 3,667 | 3,742 | 2.0 |
| திருகோணமலை துறைமுகம் | 134 | 127 | -5.2 |
| காலி துறைமுகம் | 36 | 60 | 66.7 |
| காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை, காரைநகர் | 48 | 34 | -29.2 |
| மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் | 139 | 335 | 141.0 |
| **மொத்தம்** | **4,024** | **4,298** | **6.8** |

**கொள்கலன் கையாளல் (இருபது சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்**

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)** | | | |
| இறக்குமதி | 337,357 | 324,085 | -3.9 |
| ஏற்றுமதி | 339,580 | 319,232 | -6.0 |
| மாற்றியேற்றல் | 1,779,882 | 1,882,057 | 5.7 |
| மீள் அடுக்குதல் | 45,044 | 33,965 | -24.6 |
| **மொத்தம்** | **2,501,863** | **2,559,339** | **2.3** |
| **சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் (SAGT)** | | | |
| இறக்குமதி | 171,552 | 167,815 | -2.2 |
| ஏற்றுமதி | 169,958 | 169,539 | -0.2 |
| மாற்றியேற்றல் | 1,385,552 | 1,298,434 | -6.3 |
| மீள் அடுக்குதல் | 19,740 | 26,152 | 32.5 |
| **மொத்தம்** | **1,746,802** | **1,661,940** | **-4.9** |
| **கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)** | | | |
| இறக்குமதி | 7,193 | 75,680 | - |
| ஏற்றுமதி | 6,337 | 70,634 | - |
| மாற்றியேற்றல் | 42,683 | 519,219 | - |
| மீள் அடுக்குதல் | 1,328 | 21,103 | - |
| **மொத்தம்** | **57,541** | **686,636** | **-** |
| **கொழும்பு துறைமுகம்** | | | |
| இறக்குமதி | 516,102 | 567,580 | 10.0 |
| ஏற்றுமதி | 515,875 | 559,405 | 8.4 |
| மாற்றியேற்றல் | 3,208,117 | 3,699,710 | 15.3 |
| மீள் அடுக்குதல் | 66,112 | 81,220 | 22.9 |
| **மொத்தம்** | **4,306,206** | **4,907,915** | **14.0** |

கப்பற் சரக்குகள் கையாளல் (சகல துறைமுகங்களினதும்)

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| மொத்த கப்பற் சரக்குகள் கையாளல் (மெ.தொ.மி) | 66.3 | 74.4 | 12.2 |

கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற்சரக்குகள் இ.து.அ.ச (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 16,787 | 17,082 | 1.8 |
| பிரித்த மொத்தம் | 354 | 596 | 68.4 |
| உலர் மொத்தம் | 2,657 | 2,441 | -8.1 |
| திரவ மொத்தம் | 4,084 | 4,357 | 6.7 |
| **மொத்தம்** | **23,882** | **24,476** | **2.5** |

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற்சரக்குகள் இ.து.அ.ச (ஆயிரம் தொன்களில்

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் %) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 15,113 | 15,450 | 2.2 |
| பிரித்த மொத்தம் | 10 | 6 | -40.0 |
| உலர் மொத்தம் | 0 | 3 | - |
| திரவ மொத்தம் | 181 | 63 | -65.2 |
| **மொத்தம்** | **15,304** | **15,522** | **1.4** |

கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் இ.து.அ.ச (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 31,900 | 32,532 | 2.0 |
| பிரித்த மொத்தம் | 364 | 602 | 65.4 |
| உலர் மொத்தம் | 2,657 | 2,444 | -8.0 |
| திரவ மொத்தம் | 4,265 | 4,420 | 3.6 |
| **மொத்தம்** | **39,186** | **39,998** | **2.1** |

திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இறக்கப்பட்டது** | 2,276 | 2,621 | 15.2 |
| **ஏற்றப்பட்டது** | 159 | 127 | -20.1 |
| **மொத்தம்** | **2,435** | **2,748** | **12.9** |

காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 200 | 394 | 97.0 |
| ஏற்றப்பட்டது | 7 | 0 | -100.0 |
| மொத்தம் | 207 | 394 | 90.3 |

காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 49 | 21 | -57.1 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | - |
| மொத்தம் | 49 | 21 | -57.1 |

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2013 | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 90 | 316 | 251.1 |
| ஏற்றப்பட்டது | 29 | 158 | 444.8 |
| மொத்தம் | 119 | 474 | 298.3 |

மொத்த ஊழியர் தொகை

| விபரம் | 2013 | 2014 |
|---|---|---|
| கொழும்புத் துறைமுகம் | 8,988 | 8,701 |
| திருகோணமலைத் துறைமுகம் | 426 | 419 |
| காலி துறைமுகம் | 378 | 373 |
| மொத்தம் | 9,792 | 9,493 |

**சகல துறைமுகங்களும்**

ரூபா மில்லியன்

| விபரம் | 2013 மீள்குறிப்பிடப்பட்ட | 2014 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் செலவினம்** | | | |
| மொத்த வருமானம் | 34,723.6 | 37.491.6 | 8 |
| மொத்த செலவினம் | (26,712.6) | (26,529.6) | 1 |
| **வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் அந்நிய செலாவணி (நட்டம் / கிடைக்கப்பெறுதல்களுக்கு முன்னரான இலாப /(நட்டம்)** | **8,011.0** | **10,962.0** | **37** |
| **வெளிநாட்டு கடன் மீதான வட்டி** | (3,921.4) | (3,638.8) | 7 |
| அந்நிய செலாவணி (நட்டம்)/ கிடைக்கப்பெறுதல்கள் | (2,517.5) | 1,573.5 | 163 |
| வரிக்கு முன்னரான மற்றும் அந்நிய செலாவணி (நட்டம்)/கிடைக்கப்பெறுதல்களின் பின்னரான இலாப/(நட்டம்) | **1,572.0** | **8,896.7** | **466.0** |
| **வரிகள்** | | | |
| கருதும் பங்கிலாப வரி | (0.8) | - | 100.0 |
| **வரிகளுக்கான ஏற்பாடுகளுக்குப் பின் தூய இலாப/(நட்டம்)** | **1,571.2** | **8,896.7** | **466.0** |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 248,581.9 | 286,617.9 | 15 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 51,306.9 | 45,883.2 | (11) |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 20,447.2 | 21,273.9 | (4) |
| மூலதன ஈடுபடுத்துதல்கள் | 7,591.4 | 7,591.4 | 0.0 |
| ஒதுக்கீடுகளும் ஏற்பாடுகளும் | 72,579.7 | 81,557.6 | 12 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 199,270.5 | 222,078.3 | (11) |
| **விகிதாசாரம்** | | | |
| வருமானத்திற்கு கையாளல்கள் மீதான இலாபங்கள் | 13.1 | 31.6 | |
| வருடாந்த வருமான வளர்ச்சி | (4.5) | 8 | |
| மூலதன ஈடுபடுத்துதலின் மீதான இலாபம் | 5.7 | 13.3 | |

**அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்**
**இலங்கை ஜனாதிபதி**
**மற்றும்**
**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை**
**அமைச்சர்**

**கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன**
**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை**
**கருத்திட்ட அமைச்சர்**

**கௌரவ நிர்மல கொத்தலாவல**
**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை**
**கருத்திட்ட அமைச்சர்**

**கலாநிதி பிரியத் பீ விக்ரம**
**தலைவர்**

**பீஎச்டி(ஐ.இ), பட்டப் பின்படிப்பு (டிப்ளோமா), பொறியியல் பீ.எஸ்.சீ. (சிறப்பு), பட்டயம் பெற்ற பொறியியலாளர், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவன அங்கத்தவர்**

கலாநிதி பிரியத் பீ விக்ரம 2008 ஆண்டிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராக கடமையாற்றி வருகின்றார். இலங்கையில் கடல் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், இயக்கம் மேற்கொள்ளல் மற்றும் துறைமுகங்கள் சம்பந்தப்பட்ட சேவைகள் வழங்கப்படும் நோக்கில் 1979 இன் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இலங்கை துறைமுக அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் என்ற வகையில் இலங்கையின் கடல் துறைமுகங்களை நிருவகிக்கும் பொறுப்பு இவரிடம் வழங்கப்பட்டுள்ளதோடு பிரதான கடல் சார் தேசியமாக இலங்கையின் தோற்றம் மேம்படுத்தப்படுகையின் போது ஒவ்வொரு துறைமுகமும் தன்நிறைவு பெற்ற வர்த்தகங்களாகவும் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுத்து செல்வதனை உறுதிப்படுத்துவதும் இவரின் பொறுப்பாகும்.

கலாநிதி விக்ரம மொறட்டுவ பல்கலைக்கழத்தில் இயந்திரவியல் தொடர்பில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அமெரிக்க பல்கலைக்கழகத்தினால் இயக்க முகாமைத்துவம் தொடர்பிலான கலாநிதிப்பட்டம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக இந்நாட்டில் இரண்டு பாரிய துறைமுக அபிவிருத்தி திட்டங்களை நிர்மாணிப்பதில் தலைமை வகித்து செயற்படுகின்றார். இதில் முதலாவது பசுமை துறைமுகமாக தென் மாகாணத்தில் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் இயக்க நடவடிக்கைகள் 2010 நவம்பர் 08 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டன. இரண்டாவது 2013 ஆகஸ்ட் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுகம் விரிவாக்கும் திட்டமாகும்.

கலாநிதி விக்ரம, ஜய கொள்கலன் முனைய தனியார் கம்பனி மற்றும் வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பனியின் தலைவராகவும் ஏனைய சில நிறுவனங்களின் பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான சகல துறைகளினதும் இவரின் செயலாற்றல் திறன் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2010 ஆம் ஆண்டில் ஹொங்கொங் அன்ட் சங்ஹய் கம்பனியினால் (HSBC) இவர் இலங்கையின் மிகவும் சிறந்த இளைஞராக தெரிவு செய்யப்பட்டார். இலங்கையின் நிர்மாணத் துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பிலான இவரின் பங்களிப்பிற்காக 2011 ஆம் ஆண்டில் சர்வதேச லயன் கழகத்தினால் மிகவும் சிறந்த பிரஜை யாக தெரிவு செய்யப்பட்டார். 2011 ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு மற்றும் இந்திய உபகண்டத்தில் கடல்சார் வர்த்தகத்தின் இளம் நபருக்கான விருதினையும் பெற்றுக் கொண்டார். அத்தோடு ஐக்கிய அமெரிக்காவில் நடை பெற்ற கப்பலோட்ட சேவையின் கடல்சார் வர்த்தகத்தின் இளம் நபருக்கான "விருதும் 2013 ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி விக்ரம, 2013 இல் இருந்து 2015 காலப்பகுதியினுள் துறைமுகங்களுக்கான சர்வதேச சங்கத்தின் 3 ஆவது தலைவராக ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டு அமெரிக்காவின் லொஸ் என்ஜலிசில் நடைபெற்ற துறைமுகங்களுக்கான சர்வதேச சங்கத்தின் உலக மகாநாட்டின் போது இவர் உத்தியோகபூர்வமாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். துறைமுகங்களுக்கான சர்வதேச சங்கத்தின் உப தலைவராக நியமிகப்பட்ட முதலாவது இலங்கையர் கலாநிதி விக்ரம ஆவார்.

## திரு. இந்திக கருணாஜீவ
## உப தலைவர்

**சொலிசிட்டர் (ஐ.இ) சட்ட முதுமாணி (வேர்விக்)**
**சட்டத்தரணி**

திரு கருணாஜீவ, 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று இவர் இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

திரு கருணாஜீவ, கொழும்பு 07, றோயல் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். சட்டக் கல்லூரியில் தனது கல்வியினைப் பூர்த்தி செய்து 2000 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றின் சட்டத்தரணியாக இவர் தனது பணியினைத் தொடர்ந்தார்.

திரு கருணாஜீவ சர்வதேச சட்டம் தொடர்பான முதுமாணிப் பட்டப் படிப்பினை ஐக்கிய இராச்சியத்தின் வேர்விக் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2003 ஆம் ஆண்டில் அதில் சிறப்புப் பட்டதாரியானார். இவர் விசேடமாக குற்றவியல் மற்றும் ஆக்கவுரிமைச் சொத்துக்கள் தொடர்பிலான வழக்குகளின் போது இலங்கை நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகக் கடமையாற்றியுள்ளார்.

இவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் சொலிசிட்டருமாவார்.

2006 யூலை மாதத்திலிருந்து 2010 மே மாதம் வரை ஐக்கிய இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவராலயத்தின் அமைச்சர் ஆலோசகராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

## கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல
## முகாமைப் பணிப்பாளர்

**கடலக அதிபர், எம்பீஏ, எம்என்ஐ, எம்சீஐஎல்ரீ**

1975 ஆண்டில் கெப்டன் கெப்பிட்டிபொல கடெட் அலுவலராக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொள்கலன், பொதுவான கப்பற் சரக்குகள், தொகை பிரிப்பு சரக்குக் கப்பல்கள், எண்ணெய் மற்றும் வாயு தாங்கிகள் உட்பட பல்வேறு வகையான கப்பல்களை செலுத்தியுள்ளார்.

1985 ஆம் ஆண்டில் இவர் கடலக விஞ்ஞானம் மற்றும் கப்பலோட்டம் தொடர்பிலான தனது முதுமாணிப் பட்டத்தினை அவுஸ்திரேலியாவின் மெல்போன் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டார். ஐக்கிய இராஜ்ஜியத்தின் செப்ஸ்டோவ் ஷிப்பிங் (Chepstow & Shipping) மொன்டிகாலொ, வீ சிப்ஸ் ஜேர்மனியின் அரென்கீல், கொரியாவின் பேன் ஓசன் போன்ற பல்வேறு கப்பல் சேவைகளிலும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் கெப்டனாகவும் கப்பல் போக்குவரத்தில் ஈடுபட்டதன் பின்னர் 1990 ஆம் ஆண்டில் இவர் மாலுமியாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் இணைந்து கொண்டார்.

கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி ஆகிய சகல துறைமுகங்களில் மாலுமியாக கடமையாற்றியதன் பின்னர் 1999 ஆம் ஆண்டில் சகல துறைமுகங்களினதும் ஹாபர் மாஸ்டராக இவர் பதவியுயர்வு பெற்றார்.

சிரேஷ்ட முகாமைத்துவத்தின் வேண்டுகோளின் மீது பல்வேறு கால கட்டங்களில் தனது ஹாபர் மாஸ்டர் பதவிக்கு மேலதிகமாக கடலக துறையுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கல் செயற்பாட்டினுள் குறிப்பிடத்தக்க பணிகளையும் ஆற்றினார்.

2005 ஆண்டில் இவர் பணிப்பாளராக (துறைமுக இயக்கம் )நியமிக்கப்பட்டு 2006 ஆண்டில் மேலதிக முகாமைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர் தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

கெப்டன் கெப்பெட்டிபொல, வ/ப ஜய கொள்கலன் முனையம், வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய, கம்பெனி, (CICT) சவுத் ஏசியா கேட்வே ரெமினல்ஸ் (SAGT), வ/ப மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி போன்றவற்றில் , பணிப்பாளராக இருப்பதோடு ஐக்கிய இராஜ்ஜியத்தின் கடல் மைல் நிறுவனத்தின் (இலங்கைக் கிளை) முன்னாள் தலைவருமாவார். மேலும் சேவைகள் வழங்கல் மற்றும் பட்டய போக்குவரத்து நிறுவனத்தின் அங்கத்தவரொருவருமான இவர் பெற்றோலிய கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவராக 2007/2010 ஆண்டுகளில் கடமையாற்றியுள்ளார்.

கெப்டன் கெப்பிட்டிபொல நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் டெக் அலுவலர்களின் பரிசோதகராகவும் கடமையாற்றுகின்றார்.

### டாக்டர் சஞ்சய சேதர செனரத்
### நிறைவேற்றுப் பணிப்பாளர்

டாக்டர் சஞ்சய சேதர செனரத் மாத்தறை ராஹுல வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். பாடசாலை பருவத்தினுள் சனாதிபதி சாரணராகவும், பாடசாலை நிற வெற்றியாளராகவும், தேசிய நிற வெற்றியாளராகவும் பாடசாலையின் பிரதான மாணவத் தலைவராகவும் பெற்ற பயிற்சியானது இவரின் வயது வந்த வாழ்க்கைக்கு மிகவும் துணை புரிந்தது. அதன் பின்னணியில் மாத்தறை ராஹுல வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவராக இவர் நியமிக்கப்படுவதற்கு அவகாசம் கிடைத்தது.

உயர்தரப் பரீட்சையின் பின்னர் சட்டக் கல்லூரியில் இணைந்தார். சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கையில் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசில் கிடைக்கப்பெற்ற இவர் அங்கு வைத்தியப் பட்டத்தினையும் ரஷ்ய மொழி கற்பித்தல் தொடர்பான பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

வைத்தியப் பட்டம் பெற்றுக் கொண்டதன் பின்னர் இவர் மாத்தறை பெரிய ஆஸ்பத்திரியில் வைத்திய அலுவலராகக் கடமையாற்றினார்.

அதன் பின்னர் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர வர்த்தக முகாமைத்துவ கல்வி நிலையத்தில் வர்த்தக முகாமைத்துவம் மற்றும் நிதி நிர்வாகம் பற்றியதிலான பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார்.

#### ஏனைய சாதனைகள்

ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச மாணவர் சங்க செயலாளராக நியமிக்கப்படுதல் மற்றும் மிகவும் பிரபல்யமான மாணவராக இருத்தல் (வெளிநாட்டு மாணவர் பிரிவு - 1995)

வர்த்தக முகாமைத்துவம் பற்றியதில் பரந்த சர்வதேச விளக்காற்றல் கொண்ட இவர் இலங்கையில் பல வெளிநாட்டு செலாவணி முதலீட்டு வர்த்தகங்களை நிறுவியுள்ளார். பல் கூட்டு வர்த்தகங்களை வெற்றிகரமாக நடாத்தி வருவதுடன் பிரதானமாக இலங்கையின் தென் பிரதேசத்தில் பல சமூக நலன்புரி திட்டங்களையும் மேற்கொண்டுள்ளார்.

இவர் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பின்னர் அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். அதன்

பின்னர் காலித் துறைமுக கண்காணிப்பு பணிப்பாளராகவும், கொழும்பு துறைமுக ஒன்றிணைந்த காணி கூட்டு அபிவிருத்தித் திட்டத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இலங்கையின் பூகோளரீதியாக இருக்கும் அனுகூலமிகு அமைவினைப் பயன்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையின் முன்னேற்றத்திற்காக உலகம் பூராகவுமுள்ள வர்த்தக சந்தர்ப்பங்களை இலங்கை நோக்கி வரவழைப்பதற்கான ஆய்வு ரீதியான பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

### திரு அனுராத விஜயக்கோன்
### பணிப்பாளர்

**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் மேலதிகச் செயலாளர்**

திரு அனுராத விஜேகோன் 1990 ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு இலங்கை நிர்வாக சேவையில் (1 ஆம் தரம்) அங்கத்துவம் பெற்றார். இவர் 2009 ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகக் கல்வி தொடர்பான முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

திரு விஜேகோன் உற்பத்தித்திறன் விருத்தி செய்தல், மனிதவள முகாமைத்துவம், சமூக ஒருங்கிணைப்பு, அபிவிருத்தியின் பங்களிப்பு செயற்பாடு, பாலினம் மற்றும் அபிவிருத்தி கிராமிய அபிவிருத்தி முகாமைத்துவம் மற்றும் வீடுசார்ந்த செயற்பாடுகளின் குடும்ப அபிவிருத்தி, தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் மீள் நிறுவும் செயற்பாடு போன்ற துறைகளின் பயிற்றுவிப்பாளராகவும் போதனாசிரியராகவும் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பணியாற்றியுள்ளார்.

திரு அனுராத விஜேகோன் 2013.04.01 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபையின் பனிப்பாளர் சபையின் அங்கத்தவரொருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### திரு ஆர் சேமசிங்க
### பணிப்பாளர்

**பணிப்பாளர் நாயகம் - வர்த்தக முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்,
நிதி திட்டமிடல் அமைச்சு**

ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்திலிருந்து அபிவிருத்தி கற்கைகள் பற்றியதான இளமாணி பட்டத்தினையும் நோர்வேயின் விவசாய பல்கலைக்கழகத்திலிருந்து வளங்கள் முகாமைத்துவம் பற்றியதான இளமாணி பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார். மேலும் இவர் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் நான்கு வருட மோட்டார் வாகன பொறியியல் பாடநெறியினையும் பின்பற்றியுள்ளார்.

இவர் 1984 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து சிரேஷ்ட மட்டங்களில் பதவிகளை வகித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடமையாற்றியுள்ளார். இவர் நிதி திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தெங்கு அபிவிருத்தி சபை உட்பட பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவராகவும் சில காலம் பணியாற்றியுள்ளார்.

இவர் சுற்றாடல் முகாமைத்துவத் துறையில் தேர்ச்சி பெற்றுள்ளதால் இலங்கையின் நிலம் அழிவடைதலுக்கெதிரான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின் மீதான சுற்றாடல் மற்றும் மீளெழும் வலு சக்தி அமைச்சினால் (MOE & RE) ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலம் அழிவடைதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழுவின் அங்கத்தவரொருவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு ஜகத் பீ விஜேவீர**
**பணிப்பாளர்**

**சுங்க பணிப்பாளர் நாயகம்**

திரு.ஜகத் பீ. விஜேவீர 2012 ஆண்டில் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். தற்போது இவர் சுங்க பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றுவதோடு இதற்கு முன்னர் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகவும் கடமையாற்றியுள்ளார்.

களனிய பல்கலைக்கழக நுண்கலை சிறப்புப் பட்டதாரியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பிலான இரு பட்டங்களையும் பெற்றுள்ளார்.

2006 இருந்து 2010 ஆண்டு வரை இவர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக சேவையில் ஈடுபட்டுள்ளதோடு 1987 ஆண்டிலிருந்து இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றி வருகின்றார்.

**திரு. கபில லியனகமகே**
**பணிப்பாளர் சபை செயலாளர்**

**சட்ட ஆலோசகர் - இலங்கை துறைமுக அதிகாரசபை**

## முகாமைக் குழு

கலாநிதி பிரியத் பீ விக்ரம
**தலைவர்**

திரு இந்திக கருணாஜீவ
**உப தலைவர்**

கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல
**முகாமைப் பணிப்பாளர்**

டாக்டர் சஞ்ஞய சேதர செனரத்
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு ஜே கே பீ குருகுலசூரிய
**மேலதிக முகாமைப் பணிப்பாளர்**

திருமதி ஷிராணி வன்னியாராச்சி
**பணிப்பாளர் (நிதி)**

திரு ஏ டி ரீ குணசேகர
**பணிப்பாளர் (தொழில்நுட்பம்)**

திரு டீ டப்ளியூ அத்தபத்து
**பணிப்பாளர் (சேவை வழங்கல்)**

மேஜர் ஜெனரல் எஸ் ஜீ கருணாரத்ன
**பணிப்பாளர் (பாதுகாப்பு)**

திரு டீ யூ டப்ளியூ டி சொய்ஸா
பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)

திரு பீ ஏ ஏ ஹேவாகீகன
**பணிப்பாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)**

திரு கே ஏ அன்சார்
**பிரதான பயிற்சி முகாமையாளர்**

திருமதி டி ஜீ ஐ சீ லொகுஹேவகே
**பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு)**

கெப்டன் ஆர் ஏ ஜயவிக்ரம
**ஹாபர் மாஸ்டர்**

திரு எல் பிரேமசிறி டி சில்வா
**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

டாக்டர் (திருமதி) டி ராஜகாந்தன்
**பிரதான மருத்துவ அலுவலர்**

திரு எல் எச் ஆர் சேபால
**பிரதான மனிதவள முகாமையாளர்**

திரு ஈ ஏ ரீ எதிரிசூரிய
**பிரதான பொறியியலாளர் (இயந்திர பொறி)**

திரு ஏ ஏ எஸ். ஆர். அபேசிறிவர்தன
**பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)**

திரு டப்ளியூ என் அல்சன்
**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)**

திரு டி ஏ ஜே ஐ பேரேரா
**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**

திரு உபுல் ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி)**

திரு ஆர் எம் ஏ எஸ் ரத்னாயக்க
**பிரதான முகாமையாளர் (நிர்வாகம்)**

திரு டப்ளியூ எம் டீ பி விஜேகோன்
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம் -1)**

திரு எச் ஏ என் எஸ். பர்னாந்து
**பிரதான முகாமையாளர் (மின்சாரம் - II)**

திரு எச் எம் யூ பி கலகொட
**பிரதான முகாமையாளர் (தகவல் முறைமை)**

திரு விஜித அபேசுந்தர
**பிரதான பொறியியலாளர்** (வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)

திரு பி எம் எஸ் சோமரத்ன
**பிரதான பொறியியலாளர் (சிவில்)**

திரு டப்ளியூ என் ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (கொள்கலன் கையாளல்)**

திரு ஜீ எச் டி தர்மரத்ன
**பிரதான பொறியியலாளர் (இயந்திர வேலைகள்)**

திரு ஜீ வி ரி நாணாயக்கார
**பிரதான பொறியியலாளர் (கடலகம்)**

திருமதி அபர்னா திலகரத்ன
**பிரதான சட்ட அலுவலர்**

**கணக்காய்வுக் குழு**

திரு ஆர் சேமசிங்க
**தலைவர்**

திரு ஜகத் பீ விஜேவீர
**அங்கத்தவர்**

திருமதி ஷிராணி வன்னியாராச்சி
**அங்கத்தவர்**

திரு ஏ டி ரீ குணசேகர
**அங்கத்தவர்**

திரு டி யூ டப்ளியூ டி சொய்சா
**அங்கத்தவர்**

திரு எல் பிரேமசிறி டி சில்வா
**செயலாளர்**

2014 ஆண்டின் செயற்பாடுகள் மற்றும் பிரதான அடையப் பெறுதல்கள் பின்வருமாறு

2014 ஆண்டில் பின்வரும் புதிய பிரதான கப்பல் சேவைகள் கவரப்பட்டன.

**பிரதான ஐந்து கப்பல் சேவைகள்**

- SIMATEC – CCG – E/B
- SIMATEC – CCG – W
- CIX – China India Express E/B – APL/OOCL/Emirates
- MSC – Far East West Africa Service E/B
- OEL – MEL Middle East Lanka Service W/B

**இரண்டு ஊட்டக் கப்பல் சேவைகள்**

- SIMATEC – Tuticorin
- Shipping Corporation of India – Feeder Colombo/Myanma Yangon

**நான்கு முனைய சேவை ஒப்பந்தங்கள் (TSA) கைச்சாத்திடப்பட்டன.**

**இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் முனையங்களில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகி இருந்தன;**

- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 5.7% னால் அதிகரித்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்ட முனையங்களின் பரிமாணம் 2.3% னால் அதிகரித்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள ஆகக் கூடிய கொள்கலன் பரிமாணம் 2,559,339 இருபது சம அலகுகளாகும்.

**கொழும்பு துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகின;**

- உள்நாட்டு கொள்கலன் கையாளல் பரிமாணம் 9.2% னால் அதிகரித்துள்ளது.
- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 15.3% னால் அதிகரித்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தில் ஒட்டுமொத்த வளர்ச்சி 14% னால் அதிகரித்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தின் கையாளப்பட்ட ஒட்டுமொத்த தொன் அளவு 11.5% னால் வளர்ச்சியடைந்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த ஒட்டுமொத்த கப்பல்களின் எண்ணிக்கை 2.0% னால் வளர்ச்சியடைந்துள்ளது.

**மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகின;**

- கையாளப்பட்ட ஒட்டுமொத்த ரோ ரோ கப்பல்களின் எண்ணிக்கை 253 ஆகும். (2013 - 134 கப்பல்கள்).
- உள்நாட்டு வாகனக் கையாளல் அலகுகள் 37,923 ஆகும். (2013 – 26,458 அலகுகள்).
- மீள் ஏற்றுமதி வாகனக் கையாளல் 160,502 அலகுகளாகும். (2013 – 198,425 அலகுகள்).
- சந்தைப்பங்கு (மீள் ஏற்றுமதி 80.9% மற்றும் உள்நாடு 19.1%).

இலங்கை துறைமுக அதிகாரசபை, 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

- கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல் பணிகள், தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல்,பெற்றோலியம்,பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும், களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனை குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்

  ஏதாவது விசேட துறைமுகங்களினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்

- விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகள் இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறேதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும், புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி பராமரித்து செல்லப்படுவதற்காகவும் அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும் போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல், மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான, கட்டணங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்,

- சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக விசேட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சித்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 9 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

**2014 இல் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

**திருமதி அபர்னா திலகரத்ன** 2014.11.05 ஆம் திகதியிலிருந்து பிரதான சட்ட அலுவலராக நியமிக்கப்பட்டார்.

**இலங்கை கப்பல் முகவர்களின் சங்கம்**

கப்பல் முகவர்களினது சங்கத்தினால் (CASA) துறைமுகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் தமது உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுவுடன் ஆண்டினுள் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. துறைமுக பாவனையாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கும், புரிந்துணர்வு, சுமூக உறவு பேணப்படுவதற்கும், அதன் ஊடாக வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் அக்கலந்துரையாடல்கள் வழி வகுத்துள்ளன.

**ஒழுக்காற்று விதிமுறைகளுக்கெதிரான மேன்முறையீட்டுக் குழுக்கள்**

தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு எதிராக ஊழியர்களினால் தலைவர்/பணிப்பாளர் சபையிடம் 33 மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக ஏற்படுத்தப்பட்ட மேன்முறையீட்டுச் சபைகளின் கவனத்திற்கு 05 முறையீடுகள் கொண்டு வரப்பட்டன. இம்மேன்முறையீடுகளில் 08 அங்கீகரிக்கப்பட்டதோடு (16) மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. 09 மேன்முறையீடுகளின் பணிகள் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளன.

**வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் புலமைப் பரிசில் சந்தர்ப்பங்கள்**

மீளாய்வுக்குட்படும் வருடத்தினுள் அதிகாரசபையின் சிரேஷ்ட மற்றும் நடுத்தர முகாமைத்துவப் பதவிகள் வகிக்கும் 101 பேர் அலுவலர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு பயிற்சிப் பாடநெறிகள் பின்பற்றப்படுவதற்கும், இலங்கைக்கு வெளியேயுள்ள சர்வதேச அமைப்புகளினால் நடாத்தப்பட்ட சம்மேளனங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பில் கலந்து கொள்ளப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

இதற்குப் புறம்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10 ஊழியர்கள் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக வெளிநாடு சென்றனர்.

**தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்**

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் போன்று நிறுவனத்தின் தோற்றப்பாட்டினை மேம்படுத்துவதற்கும் துறைமுகத்துடன் தொடர்புபட்ட உள்நாடு மற்றும் வெளிநாட்டுத் தரப்பினர்களுக்கிடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்துவதற்கும் தொடர்பாடல் பொதுசன உறவுகள் பகுதி 2004 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள துறைமுக அபிவிருத்தித் திட்டங்களை கவனத்திற்கொண்டு அதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக பிரபல்யப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையில் சிறந்த தொடர்பாடல் விருத்தி செய்யப்படும் பிரதான நோக்கம் வெற்றிகொள்ளப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கிடையில் “தீர்த்த” எனும் மாதாந்த பத்திரிகையின் இலவச வினியோகம் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. விளையாட்டுக்கள், நுண்கலைகள், தத்துவம் போன்ற சமூக ஆர்வம் கொண்ட விடயங்களினுள் துறைமுக ஊழியர்களின் விசேட திறன்கள் இனங்காணப்பட உதவுவதோடு செயற்திறன் மற்றும் வினைத்திறன் மேற்கொண்டு மேம்படுத்தப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் காலத்துக்கேற்ற நடைமுறைச் சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பில் துறைமுக ஊழியர்கள் அறிவுறுத்தப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பாவனைக்காக பதிப்பு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரண்டு தரவுகளிலான ஆவண காப்பகமொன்று, தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் நடாத்திச் செல்லப்படுகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான உள்நாட்டு பத்திரிகைகளிலும் அநேகமான சஞ்சிகைகளின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியாகிய சகல விடயங்கள் கணனிமயப்படுத்தப்பட்டும் மூலப் பிரதிகளாகவும் இப்பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு ஒளிப்பதிவு நிகழ்ச்சிகளுக்குத் தேவைப்படும் அதேபோன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடந்த மற்றும் நிகழ்கால சகல ஒளிப்பதிவு நிகழ்ச்சிகள் எதிர்கால பாவனைகளுக்காக நவீன இலத்திரனியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு கலைக்கூடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபை சார்பிலான சகல ஆவண ரீதியான அறிக்கைகளின் மென் மற்றும் வன் பிரதிகள் (கணனிமயப்படுத்தப்பட்ட) நூல் நிலையமொன்றும் இப்பிரிவில் உள்ளது.

2014 ஆண்டினுள் கொழும்பு மற்றும் கொழும்பு பிரதேசத்திற்கு வெளயே நடாத்தப்பட்ட பல கண்காட்சிகளில் இலங்கையின் கடல்சார் துறையின் மேம்பாட்டிற்கான சந்தர்ப்பம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றது. 2014 ஆம் ஆண்டில் குளியாப்பிட்டியில் நடாத்தப்பட்ட தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சியில் தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்திய சிறந்த கண்காட்சிக் கூடத்துக்கான விருதினை இலங்கை துறைமுக அதிகாரசபை பெற்றுக்கொண்டது. 2014 ஆண்டில் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் முனையம் திறந்து வைக்கப்படும் போது உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்கள் பிரதிநிதிப்படுத்துவதற்கு அதற்கான அழைப்பு மற்றும் ஏற்பாடு செய்யும் போது தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் முக்கிய பணியாற்றப்பட்டது. சர்வதேச அரங்கில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தோற்றப்பாட்டை உயர்த்தும் நோக்கில் அர்ப்பணிப்புடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக சகல முக்கிய சந்தர்ப்பங்களையும் பிரதிநிதிப்படுத்துதல் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் விழா நிகழ்ச்சி ஏற்பாடுகளின் முக்கிய பணிகளும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியினால் நிறைவேற்றப்பட்டன. பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் மேலதிக பிரசுரங்கள் அச்சிடும் பணிகளின் திட்டமிடல்,ஒருங்கமைப்பு வேலைகளும் இப்பகுதியினால் மேற்கொள்ளப்பட்டன.

காலத்திற்கு காலம் இலங்கை துறைமுக அதிகார சபை பற்றியதான பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட பாதிப்பான அறிக்கைகளை தவிர்ப்பதற்கும் மீளாவிற்குட்படும் ஆண்டினுள் நடைபெற்ற அனைத்து முக்கிய சம்பவங்கள் தொடர்பிலும் இலத்திரனியல் மற்றும் அச்சக ஊடயங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு பத்திரிகைகள் ஊடாக கருத்துக்கள் தெரிவிப்பதற்கும் இலங்கை துறைமுக அதிகார சபையின் தோற்றப்பாடு மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்துதலின் பிரசாரம் தொடர்பிலான படமாக்கப்பட்ட பதிப்புத் தகவல்களையும் அறிவித்தல்களையும் சகல வெளி ஊடக நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான இலங்கை துறைமுக அதிகார சபையின் அதிகாரமுள்ள ஒரேயோரு பகுதி தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவு பகுதியாகும்.

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியின் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளுக்கமைய இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களையும் சந்தர்ப்பங்களையும் வெற்றி கொள்வதற்கும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியின் பணிகள் இலகு படுத்துவதற்கும் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கும், மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் மற்றும் அதன் பயன்கள் தொடர்பிலும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் நேர் காணல்களும் நடாத்தப்படுகின்றன. தாய் நாட்டில் எதிர்கால சுபிட்சத்தை ஏற்படுத்துவதற்கு பிராந்திய செய்தியாளர்களுக்கு குறித்த பாரிய திட்டம் அறிவுறுத்தப்படுவதிலும் இத்திட்டத்தின் வெற்றிக்கான விரிவான பிரசாரம் வழங்கப்படுவதற்காகவும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியினால் பல வேலை நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

# இயக்க மீளாய்வு

# இயக்கம்

2014 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களின் வருடாந்த கொள்கலன் கையாளல் பரிமாணம் 2.3% இனால் அதிகரிக்கப்பட முடிந்ததோடு இது 2013 ஆண்டின் பரிமாணத்துடன் ஒப்பிடப்படும் போது 57,476 இருபது சம அலகுகளின் வளர்ச்சியாகும். உள்நாட்டு கொள்கலன் கையாளல் பரிமாணம் 33,620 இருபது சம அலகுகளினால் குறைந்து மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 102,175 இருபது சம அலகுகளினால் அதிகரித்துள்ளது. கொழும்பு துறைமுகத்துக்கு கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களின் வருகையானது 3,142 (2013 ஆண்டு) இருந்து 3,239 (2014 ஆண்டு) வரை வளர்ச்சியடைந்துள்ளதோடு இது 2% அதிகரிப்பாகும். வரலாற்றில் இதுவரை பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய வருடாந்த கொள்கலன் கையாளல் பரிமாணம் 2014 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் பதிவாகியுள்ளது. முன்னர் கையாளப்பட்ட பரிமாணமான 4,306,206 இருபது சம அலகுகளைப் பார்க்கிலும் கையாளப்பட்ட மொத்த பரிமாணம் 4,907,915 இருபது சம அலகுகளாகும். இது 14% அதிகரிப்பை காட்டுகின்றது. தெற்காசிய நுழைவு வாசல் முனையம் (SAGT), கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) போன்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்த வெற்றிகளை அடையக்கூடியதாக இருந்தன. கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் கீழ் ஆழத்தில் கூடிய மூன்று கொள்கலன் முனையங்கள் நிர்மாணிப்பதற்காக சுமார் 6.5 கிலோமீட்டர் நீளம் கொண்ட அலைதாங்கிகள் அமைக்கப்பட்டதன் மூலம் நில உரித்தாளராக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய முதலீடு காரணமாக கொழும்பு துறைமுகத்தில் ஆழத்தில் கூடிய கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) அமைத்தல் நனவாக மாறியது.

2013 ஆண்டில் கையாளப்பட்ட கப்பற்சரக்கு 207,000 தொன்னுடன் ஒப்பிடும்போது காலி துறைமுகத்தில் கப்பற்சரக்கு 394,000 தொன் கையாளலின் 90.3% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்ற காலப்பகுதியில் வருகை தந்த 36 கப்பல்களுடன் ஒப்பிடும் போது வந்த கப்பல்களின் எண்ணிக்கை 60 ஆகும். திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட 2.43 மில்லியன் தொன்னுடன் ஒப்பிடப்படுகையில் 2.74 மில்லியன் தொன் கையாளப்பட்டுள்ளது. இது 12.9% வளர்ச்சியாகும்.

நேரடியாக ஒப்படைக்கப்படும் மோட்டார் வாகனங்களை ஏற்றிவரும் கப்பல்களைத் தவிர்ந்த எனைய மோட்டார் வாகனங்களைக் கொண்டு செல்லும் கப்பல்கள் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் நோக்கி திசை திருப்பப்பட்டதன் பின்னர் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் 2013 ஆண்டின் 64,522 மோட்டார் வாகனங்களுடன் ஒப்படும் போது 198,425 மோட்டார் வாகனங்கள் கையாளலின் மூலம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகமானது தெற்காசியாவின் வளர்ந்து வரும் மோட்டார் வாகனங்கள் மீள் ஏற்றுமதி செய்யும் கேந்திரத்தளமாக மாறிய கையாளப்பட்ட உள்நாட்டு 11,465 வாகனங்கள் மூலம் அதாவது 43% னாலும் மீள் ஏற்றுமதியின் 122,438 மோட்டார் வண்டிகளினதும் 3.2% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

மீள் ஏற்றுமதி வாகனங்களின் வருடாந்த தொன் அளவு 2014 ஆண்டில் அனைத்து துறைமுகங்களிலும் 66.29 மில்லியனிலிருந்து 74.43 தொன் மில்லியன் வரை 12.3% அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருந்தது.

உற்பத்தித்திறன் மேம்படுத்தும் முக்கிய காரணியான முனையத்தினுள் தடையின்றி செயற்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு 2014 ஆண்டில் ஜய கொள்கலன் முனையத்தின் தளங்களின் புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. பணியாளர்களின் புத்தூக்க உளப்பாங்கினை ஏற்படுத்துவதற்கு உற்பத்தித்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்பு திட்டம் அறிமுகப்படுத்தலின் மூலம் ஊக்குவிப்பு திட்டம் மாற்றம் செய்யப்பட்டது. அனைத்து பணியாளர் பிரிவுகளுக்கிடையிலும் தொடர்ச்சியான தொழில்சார் விருத்தியினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பயிற்சி நிலையத்தின் உதவியோடு பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

தடுப்பு செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் நிர்வாகம் தொடர்பில் அறிவூட்டல் நிகழ்ச்சி வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு அனுபவம் பெற்ற காப்பு உத்தியோகத்தரொருவர்

ஆட்சேர்க்கப்பட்டதன் மூலம் ஜய கொள்கலன் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களுக்கான பாதுகாப்புப் பிரிவொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் தலைமைத்துவ மற்றும் தொடர்பாடல் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு கொள்கலன் முனையத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் டோஸ்ட்மாஸ்டர்கள் சங்கம் (Toastmasters Club) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் அறவீட்டுக் கட்டணங்களுக்கு மின்னஞ்சல் ஆவண வசதிகள் செய்யப்பட்டுள்ளதோடு கப்பலோட்டத்துறையினருக்கு ஒரே நிலையத்தில் சேவைகளை வழங்கும் நோக்கில் ஏற்றுமதி அலுவலகம் இலங்கை சுங்க ஏற்றுமதி பரீட்சிப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## சேவைகள் வழங்கல்

பூரண கொள்கலன் ஏற்றுதல்கள் (FCL,) குறைநிறைவான கொள்கலன் ஏற்றுதல்கள் (LCL), தொகைபிரிப்பு, பொதியிடப்பட்டவை மற்றும் மோட்டார் வண்டிகள் அடங்கலாக துறைமுகத்துக்கு கொண்டு வரப்படும் அனைத்து கப்பற்சரக்குகளின் வினியோகம், வாடிக்கையாளர்களுக்கு கப்பலோட்ட மற்றும் கப்பற்சரக்குகள் சார்ந்த சேவைகளை வழங்குவது சேவைகள் வழங்கும் பகுதியின் பணியாகும்.

முன்னர் போன்று 24 மணித்தியாலம் பூராக வழங்குதலின் மூலம் 2014 ஆண்டினுள் குறைநிறைவான கொள்கலன்களின் 281,297 இருபது சம அலகுகள் சேவை நிலையம் ஊடாக வினியோகிக்கப்பட்டன. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்துவதற்கும் ஆவண நடவடிக்கைகளுக்கு செலவாகும் காலம் குறைக்கப்படுவதற்கும் குறைநிறைவான கொள்கலன்கள் தொடர்பிலான நேவீஸ் கப்பற் சரக்கு மொடியூல் வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் குறை நிறைவான கொள்கலன்கள் இருபது சம அலகுகள் 24,330 கையாளப்பட்டன. இதில் 6,826 இருபது சம அலகுகள் (பொதுவான/ ஆபத்தான) கப்பற்சரக்குகள் தரையிறக்கும் பேலியகொட கப்பற்சரக்கு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டதோடு உள்நாட்டு, மீள் ஏற்றுமதி, பல்நாட்டு கப்பற்சரக்குகளின் திரட்டும் கையாளல் (MCC) மற்றும் விசேட கப்பற் சரக்குகளுக்கு துறைமுகத்தினுள் களஞ்சியசாலைகளில் இடவசதி வழங்கப்பட்டன. குறைநிறைவான தரையிறக்கல்கள் மூலம் ரூபா 162.2 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. பல்நாட்டு கப்பற் சரக்குகளின் திரட்டுதலினால் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 156.3 மில்லியன் ஆகும். இதற்கு மேலதிகமாக வெற்று கொள்கலன்களுக்கான கட்டணங்கள் மற்றும் கொள்கலன்களின் நிலைமை மாற்றப்பட்டதன் காரணமாக ரூபா 2.9 மில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த ஆண்டினுள் சரக்குகள் அகற்றிச் செல்லும் நிறுவனங்களுக்கான 80 புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 887 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதன் ஊடாக மொத்தமாக 967 அனுமதிப்பத்திரங்களுக்கு ரூபா 14.5 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. “ஏ” மற்றும் “பீ” வகையின் வாப்பு இலிகிதர்களுக்கான வாப்பு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதனாலும் புதுப்பிக்கப்பட்டதனாலும் ரூபா 7.6 மில்லியன் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட “ஏ” மற்றும் “பீ” வகையின் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை முறையே 2,389 மற்றும் 326 ஆகும்.

கொள்கலன் நிலைய இல. V கொண்ட களஞ்சியசாலை புதுப்பிக்கப்பட்டதனால் வாடகை செலுத்தப்படும் மற்றும் துறைமுக கப்பற்சரக்கு வர்த்தகங்களுக்கான களஞ்சியசாலையின் வசதிகள் அதிகரிக்கப்பட்டு வாடகை செலுத்தப்படும் மற்றும் துறைமுக கப்பற்சரக்கு வர்த்தகங்களுக்கான கிராக்கி அதிகரிக்கப்பெற்றதன் ஊடாக 39.7 மில்லியன் ரூபா பூரண வருமானம் பெறப்பட்டுள்ளது. ஆண்டினுள் சேவை வழங்கும் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளூடாக ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா 383.6 மில்லியன் ஆகும்.

கைவிடப்பட்டிருந்த கப்பற்சரக்குகள் அகற்றப்படுவதற்கான பகிரங்க விலைகோரல் மற்றும் ஏலவிற்பனை மூலம் 74.3 மில்லியன் ரூபா பூரணமான தொகை ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ உசாத்துணை சேவைக் கம்பனியினால் கழிவு இரும்பு, பயன்படுத்தப்பட்ட எண்ணெய் மற்றும் பழைய டயர்கள் விற்கப்பட்டதனால் 23.2 மில்லியன் ரூபா மேலதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அகற்றப்பட்ட மேலதிகப் பொருட்கள் பகிரங்க விலைகோரலில் விற்கப்பட்டதனால் 13.1 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது. .

2014 ஆண்டினுள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் கப்பற்சரக்கு பெறுபவர்களினால் கைவிடப்பட்ட வாடகைக் கட்டணங்கள் தொடர்பிலான 32 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. இதில் 08 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு 16 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய விண்ணப்பங்கள் தொடர்பில் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன.

சேவைகள் வழங்கும் பிரிவினால் ஆற்றப்படும் சேவையின் தரம் விருத்தி செய்யும் நோக்கில் குறைநிறைவான கொள்கலன்கள் வினியோகிப்பதற்கு கப்பற்சரக்கு கையாளல் மொடியூல் தொகுதி (நேவீஸ்) நடைமுறைப்படுத்தப்பட்டது. நிறைவான கொள்கலன்களுக்கும் குறித்த தொகுதி நடைமுறைபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நிதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முக்கிய பணியினை மேற்கொள்ளும் நிதிப் பகுதியினால் 2014 ஆண்டிலும் முக்கிய வெற்றிகள் ஈட்டப்பட்டன. 2014 ஆண்டில் நிதிப் பகுதியினால் ஈட்டப்பட்ட வெற்றிகள் பின்வருமாறு.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொழில்முயற்சி வள திட்டத்தின் (ERP) புதிய இரண்டு உப மொடியூல்கள் நிதிப் பகுதியினால் 2014 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

நிதிப் பகுதியினால் 2014.12.31 ஆம் திகதி நிலையான சொத்துக்களுக்கான மொடியூல் அறிமுகப்படுத்தப்பட்டு அதனூடாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் கணக்கிடப்பட முடிந்துள்ளன. சொத்தொன்றின் நிலைபேறான ஆயுள் சுற்றினுள் அனைத்து செயற்பாடுகளும் இந்த மொடியூல் ஊடாக அடையாளம் காணப்பட முடியும்.

செலுத்தப்பட வேண்டிய கணக்குகளின் மொடியூல் 2014.04.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெளிவாரி செலுத்துதல்கள் முறைப்படுத்தப்படுகின்றன.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி குறைநிறைவான கொள்கலன்களின் விநியோகம் தொடர்பான சிட்டைகளின் கொடுப்பனவு மற்றும் செலுத்துதல்கள் இணைத்தளம் மூலம் வங்கியூடாக வாடிக்கையாளர்களுக்கு நிறைவேற்றக் கூடியவாறு குறித்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மின்னஞ்சல் கொடுப்பனவு வசதிகள் ஆரம்ப காலத்தில் இலங்கை வங்கிக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த மின்னஞ்சல் கொடுப்பனவு வசதிகள் 2014 ஆண்டில் சம்பத் வங்கி வரை நீடிக்கப்பட்டுள்ளன.

## கப்பலோட்டம்

### வழிகாட்டிச் சேவை

மீளாய்வாண்டினுள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த சகல வகையிலான கப்பல்களுக்கும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் வழிகாட்டிச் சேவைகள் வழங்கப்பட்டன.

| கப்பல்களின் வகை | கப்பல்களின் எண்ணிக்கை | வருகை தந்த நோக்கம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொள்கலன் | 3,239 | எண்ணெய் பெறுதல் | 25 |
| மரபு முறையான | 28 | பழுதுபார்த்தல் | 38 |
| உலர் மொத்தம் | 189 | பயணிகள் | 36 |
| எண்ணெய் தாங்கி | 134 | ஏனைய சேவைகள் | 10 |
| றோல் ஒன் றோல் ஒப் | 32 | | |
| ஏனைய சரக்கு | 11 | | |
| **மொத்தம்** | | 3,742 | |

**பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவு**

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவினால் மீளாய்வாண்டினுள் கப்பல்களுக்கான தொடர்ச்சியான மற்றும் செயற்திறனான இழுவைக்கல சேவைகள் வழங்கப்படுதலின் ஊடாக சிறப்பான பணியாற்றப்பட்டது. இதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- இழுவைக் கலங்களின் தட்டுக்கள் (DECK) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் வேலைகளை நிறைவேற்றுதல்.
- கப்பல்கள் கட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பாரிய கயிறுகளினால் இழுவைக் கலங்களுக்கான கயிறுகளும் விரிப்புகளும் செய்தல், இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கென்வஸிலான திரைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள்

கப்பல்களின் நகர்வுகளுக்காக போதுமானளவு இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டதோடு அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒரு இழுவைக் கலம் எதிர்பார்ப்பு சேவையில் வைக்கப்பட்டது.

**இழுவைக் கலங்களின் உதவியூடான கப்பல்களின் மொத்த நகர்வுகள்**

நங்கூரமிடும் இழுவைக் கலங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த நகர்வுகள் 19,682 ஆகும். விபரங்கள் பின்வருமாறு;

| கலத்தின் பெயர் | மொத்தம் |
|---|---|
| எம்ரீ நந்தமித்ர (55BP) | 3,422 |
| எம்ரீ சுரணிமல (65BP) | 4,104 |
| எம்ரீ கோடைம்பர (65BP) | 3,169 |
| எம்ரீ விஜயபாகு | 2,123 |
| எம்ரீ பரண – II | 3,307 |
| எம்ரீ ஐராவன | 1,835 |
| ஓஸன் என்டர்பிரைஸஸ் கலம் (2014.07.28 ஆம் திகதியிலிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது) | 1,722 |

**திருகோணமலை**

- எம்ரீ.சிங்கபாகு
- எம்ரீ நீலமஹ

**காலி**

- எம்.ரீ.கஞ்சதேவ

**காங்கேசன்துறை**

- எம்ரீ தீர

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்\ துறைமுகம்**

- எம்ரீ வேலுசுமன

**கடற் பயணங்கள்**

- மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் 02 கென்ட்ரி பாரம் தூக்கிகளை தரையிறக்குவதற்கு உதவுவதற்காக 2014.06.22 ஆம் திகதி எம் ரீ விஜயபாகு கலம் கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டைக்கு பயணித்து மீண்டும் 2014.07.02 ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தது.

**பயிற்சி நடவடிக்கைகள்**

மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் ஆண்டு பூராகவும் அவ்வப்போது நடாத்தப்பட்ட ஆரம்ப தீ அணைப்பு மற்றும் அடிப்படை முதலுதவி பாடநெறிகளுக்கு கப்பலோட்டக் குழு உறுப்பினர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

**ஈட்டப்பெற்ற வருமானம்**

| ஆண்டு | ரூ.மி |
|---|---|
| 2013 உண்மையான | 357.715 |
| 2014 திருத்தப்பட்ட | 367.075 |
| 2015 திட்டமிடப்பட்ட | 387.460 |

**பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு**

**ஆளணியினர்**

அனைத்து இழுவைக் கலங்கள், வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் இயக்கம் மற்றும் பழுதுபார்ப்பு தேவைகளுக்கேற்பவாறு போதுமானளவு பணியாளர்கள் 2014 ஆண்டில் இருந்தனர். கலங்களின் நகர்த்தல்களுக்கு வழிகாட்டி மற்றும் இயக்கங்களுக்குத் தேவையான கலங்களின் அன்றாட ஈடுபடுத்தல்களுக்கு மேலதிகமாக இப்பிரிவின் ஆளணியினரால் வழமையான பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. முகாமைத்துவத்தின் சிபாரிசு மீது பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு வழமையான பணிகளை மேற்கொள்வதற்கு தயாரான நிலையில் இருக்கும்.

**துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு (PFB)**

உள்நாட்டு தீகாப்பு நியமங்களைப் பராமரித்து பேணி தீ அல்லது வேறு அவசர நிலைமைகளின் பாதிப்பான தாக்கங்களைக் கட்டுப்படுத்தி 2014 ஆண்டினுள் தீ அணைப்பு பிரிவினால் செயற்திறனான அவசர சேவைகள் வழங்கப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் அவசர சந்தர்ப்பங்களின்

போது செயற்படும் துறைமுக தீ அணைப்பு பிரிவினால் எண்ணெய் மூலம் கடல் மாசடைவு மற்றும் ஆபத்தான பொருட்களுடன் தொடர்புபடும் விபத்துக்களை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2014 ஆண்டினுள் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன.**

| | |
|---|---|
| தீயணைப்பு அழைப்புக்கள் | 14 |
| கடற்படையின் ஒத்திகைகள் | 03 |
| அவசர அழைப்புக்கள் | 34 |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 115 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 32 |
| கப்பல்களில் வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 57 |
| ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளல்களுக்கான காத்திருத்தல் சேவை | 12 |
| பாலங்கள்/ குதங்கள் போன்றவை கழுவுவதற்கான நீர் வினியோகம் | 76 |
| தண்ணீரை வெளியேற்றுதல் | 01 |
| எண்ணெய் மூலம் மாசடைதலின் கட்டுப்பாட்டுப் பணிகள் | 117 |
| எண்ணெய் தாங்கிகளுக்கான பரீட்சிப்பு விஜயம் | 143 |

**தீ காப்பு நடவடிக்கைகள்**

அனைத்து துறைமுகங்களினதும் சகல கட்டடங்கள் / பாரம்தூக்கிகள் / கலங்கள் / பிறைம்மூவர் வண்டிகள் தொடர்பான தீ காப்பு பரிட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**பயிற்சி நடவடிக்கைகள்**

| | |
|---|---|
| ஆளணி பயிற்சிப் பட்டறைகள் | 21 |
| வெளிநபர்கள் பரீட்சயமாக்கப்படும் விஜயங்கள் | 01 |
| கொக்ஸன் பயிற்சிப் பாடநெறி | 06 |
| டெக் தரப்படுத்தல், பயிலுநர்களுக்கான தீயணைப்புப் பயிற்சி | 03 |
| துறைமுக பயிலுனர்களுக்கான ஒருநாள் ஆரம்ப தீயணைப்புப் பயிற்சி | 25 |
| தீயணைப்புப் படையின் ஆளணியினருக்கான மீள் தீயணைப்புப் பயிற்சி | 08 |
| மா.ரு.ம.ரா துறைமுகத்திற்கு ஆடசேர்ப்புச் செய்யப்பட்ட தீயணைப்பாளருக்கான பயிற்சி | 01 |

- ✦ கொழும்பு டொக்யாட் கம்பனி மற்றும் டப்ளியூ.எஸ்.பீ.சீ கம்பனியினால் வலு வத்தையொன்றின் தீ மாதிரியொன்று ஏற்படுத்தப்பட்டு ஒன்றிணைந்த தீ அணைப்பு ஒத்திகையொன்று மேற்கொள்ளப்பட்டது.
- ✦ கொழும்பு தீ அணைப்பு படையுடன் எண்ணெய் களஞ்சியத் தொகுதியில் தீ மாதிரியொன்று ஏற்படுத்தப்பட்டு ஒன்றிணைந்த தீ அணைப்பு ஒத்திகையொன்று மேற்கொள்ளப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் ஈட்டப்பட்ட வருமானம் பின்வருமாறு

| விபரம் | அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 180,642 | |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 24,300 | |
| ஆபத்தான கப்பற்சரக்குகளுக்கான காத்திருத்தல் சேவை | 5,780 | |
| பரீட்சிப்பு விஜயங்களுக்கான கட்டணங்கள் | 8,260 | |
| வெப்ப வேலைகளுக்கான கட்டணங்கள் | 16,033 | |
| தீ அணைப்பு | 2,160 | 123,000 |
| எண்ணெய் மாசடைவு கட்டுப்பாட்டிற்கான அறவீடுகள் | 183,162 | 506,250 |
| **மொத்த வருமானம்** | **420,337** | **629,250** |

**துறைமுக காப்பு பிரிவு**

சகல துறைமுகங்களிலும் மேற்கொள்ளப்படும் ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்படுகையிலான பாதுகாப்பு அணுகு முறைகளை சகல நேரங்களிலும் அவதானித்து உரிய முறையில் பேணுவது இப்பிரிவின் பணியாகும்.

துறைமுக தீயணைப்புப் படையின் உதவியோடு சில இரசாயன சிதறல்கள் மற்றும் தீ விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. ஆபத்தான சரக்குக் குதங்கள் மற்றும் கொள்கலன் அடங்கலான குதங்களின் பரீட்சிப்புகள் பருவ காலங்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

வெப்ப வேலைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட தளங்களில் பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டு அனுமதி வழங்கப்படாத வெப்ப வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டன.கடல் மாசடைதல் தொடர்பிலான பரீட்சிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. தனிநபர் மற்றும் கடல்சார் விபத்துகள் தொடர்பில் ஆராயப்பட்டு பகுப்பாய்வுகளும் செய்யப்பட்டன.

- 2014 ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தினால் 265,149 மெட்ரிக் தொன் ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்பட்டன.
- ஆபத்தான கப்பற்சரக்குகளைக் கொண்ட 28,990 கொள்கலன்களின் மாற்றியேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- இயக்கப் பகுதியின் ஊழியர்களுக்கு துறைமுகத்தினுள் ஆபத்தான கப்பல் சரக்குகளைக் கையாளல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- எளிதில் வெடிக்கக்கூடிய (GPIE) 444,840 மெட்ரிக் தொன் பொருட்களும், வெடிக்கக் கூடிய (GPIAE/IIE) 12,096 மெட்ரிக் தொன் பொருட்களும் கையாளப்பட்டன.
- ஜய கொள்கலன் முனைய ஊழியர்கள் மற்றும் கப்பலோட்டப் பகுதியின் நங்கூரமிடல் குழுவினரினதும் தனிநபர் பாதுகாப்பு விசேடமாக உபகரணப் பாவனை தொடர்பில் உதவி துறைமுக காப்பு பரீட்சகர்களின் உதவியோடு மேற்பார்வை செய்யப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்திற்கு 199 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் வருகை தந்ததோடு இறக்கப்பட்ட கப்பற்சரக்குகள் பின்வருமாறு;

| சரக்கு வகை | அளவு மெ.தொ |
|---|---|
| திரவ பெற்றோலிய வாயு | 185,748.305 |
| வாயு எண்ணெய்/ ஜெட்A1/ கெஸொலைன்/ கெரொசின் | 2,500,481.193 |
| மசகு எண்ணெய் | 1,384,854.536 |
| எரிபொருள் | 487,231.679 |
| உராய்வு நீக்கி எண்ணெய் | 12,348.790 |

**கரையோர வெளிச்ச வீட்டு சேவைப் பிரிவு**

சர்வதேச கப்பல் வழிகளை நோக்கிய மேற்கு மற்றும் தெற்கு கரையோரம் நெடுகே அமைந்துள்ள வெளிச்சவீடுகள் முறையாக பராமரிக்கப்பட்டன.

**கால்வாய்களில் அமைந்துள்ள வெளிச்ச மிதப்பிகள்**

வெளிச்ச மிதப்பிகள் அடிக்கடி பரீட்சிக்கப்பட்டு பராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டத்துடன் கொழும்பு துறைமுகத்தின் தென்கிழக்கு பிரவேசம் மாற்ற வேண்டியேற்பட்டு புதிய பிரவேசக் கால்வாய் வேறாக்கப்படுவதற்கு புதிய மிதப்பித் தொகுதியொன்றும் நிறுவப்பட்டுள்ளது. CASA, SLAVO, LASO மற்றும் ஐக்கிய இராச்சிய நீரியல் அளவைப் பிரிவினால் கிடைக்கப்பெற்ற சுற்றுநிருபங்களுக்கேற்ப எச்சரிக்கைகளும் செய்யப்பட்டன.

**வருமானம் – வெளிச்சவீட்டுக் கட்டணம்**

| | 2012 உண்மையான | 2013 உண்மையான | 2014 திட்டமிடப்பட்ட |
|---|---|---|---|
| ஒன்று சேர்ந்த மொத்தம் | ரூபா. 32,354,138 | ரூபா. 31,962,948 | ரூபா. 34,912,737 |

**துறைமுக கலப் பிரிவு**

கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களுக்கான வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்கள் வழங்கல், கப்பல்களைக் கட்டி வைக்கும் பணியில் குழுக்களை ஈடுபடுத்துதல் துறைமுக கலப் பிரிவின் முக்கிய பணியாகும்.மேலும் பல்வேறு வேலைக் குழுக்களை தீவு மற்றும் தென் மேற்கு அலைதாங்கிகளுக்கு போக்குவரத்து செய்தல், துறைமுக நீர்ப் பகுதி சுத்தமாக வைத்திருத்தல், ஜிராப் மிதவை பாரமுயர்த்திகளினால் அதிக பாரம்தூக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் பராமரித்தல்களும் தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்டன.

**நீரியல் அளவைப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல துறைமுகங்களினதும் நீரியல் அளவையாளர்கள் போன்று துறைமுகத்தின் சம்பந்தப்பட்ட பகுதியினால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோளிற்கமைய நில அளவையாளர்கள் அனைத்து காணிகளின் அளவீட்டுப் பணிகளிலும் பங்கேற்றனர்.

- ✦ உட்புகு கால்வாயின் ஆழம் அளவீடு செய்தல்
- ✦ தென் துறைமுகத்தின் ஆழம் அளவீடு செய்தல்
- ✦ பிரதான நுழைவாயின் ஆழம் அளவீடு செய்தல்
- ✦ உள்ளக துறைமுகத் தடாகத்தினதும் நங்கூரத்தளத்தினதும் ஆழம் அளவீடு செய்தல்
- ✦ துறைமுக நகரப் பிரதேசத்தின் ஆழம் அளவீடு செய்தல்
- ✦ உட்புகு கால்வாயின் மிதப்பி அமைவிடங்களை அளவீடு செய்தல்
- ✦ கொழும்பு துறைமுக படத்தின் மீளாய்வுப் பணிகள்

- கட்டுப்பாட்டு முனையினை அளவீடு செய்தல் (தொடர்ச்சியாக)
- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் திட்டத்தின் அளவீடு மற்றும் மட்ட நோக்குதல்
- துறைமுக அணுகு பாதை விரிவாக்கலின் மத்திய கோடு அடையாளமிடுதல் மற்றும் மட்ட நோக்குதல்
- ஐக்கிய கொள்கலன் முனைய மீளமைப்பின் நீரியல் மற்றும் காணி அளவீடு செய்தல்
- குத்தகை உடன்பாட்டின் ஆய்வுப் பணிகள்
- இளவளரசர் விஜய துறைமேடையின் வெளிச்ச வீட்டின் சமிக்கைகளை ஒழுங்குபடுத்தல்

**காலி துறைமுகம்**

- வெளிநபர்கள் அத்துமீறி கைப்பற்றியுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் ரூமஸ்ஸலவில் அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்தல்
- காலி துறைமுகம் தொடர்பான வழக்கின் எல்லைகளை அளவீடு செய்யும் ஆய்வுகள்

**திருகோணமலை துறைமுகம்**

- சிங்கபுறையில் அத்துமீறி கைப்பற்றப்பட்ட காணிகளின் நில அளவைகள்
- குத்தகை திட்டம் தயார் செய்தலிலான ஆய்வுகள்
- பிரதேச செயலகத்தில் காணி பாவனை தொடர்பிலான கூட்டத்தின் போது அங்கத்தவரொருவராக கலந்து கொள்ளல்
- பர்மா முகாம் பிரதேசத்தில் புதிய கட்டிடத்துக்கான பொறியியல் ஆய்வுகள்

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம்**

- காணிகளைப் கைப்பற்றுதல் மற்றும் மீள் குடியேற்றம் நடைமுறையின் கட்டம் 11 க்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் குழுவின் அங்கத்தவரொருவராக கலந்துகொள்ளல்.
- நஷ்டஈடு தொடர்பில் கலந்துரையாடும் குழுவின் ஹம்பாந்தோட்டை கட்டம் 11 இன் காணிகளைக் கைப்பற்றிக் கொள்ளலின் நேர்முகப் பரீட்சையில் அங்கத்தவரொருவராக கலந்து கொள்ளல்.
- பிரவேச மற்றும் கால்வாயின் நீரியல் ஆய்வுப் பணிகள்
- செயற்கைத் தீவின் தாக்கம் ஆராயப்படுவதற்காக கடற்கரையில் 03 கி. மீற்றர் தூரம் மாதாந்தம் பரீட்சிப்புக்களுக்கு உட்படுத்தல்
- முதலீட்டளார்களின் காணிகளுக்கான குத்தகை வாடகைத் திட்டம் தயாரிப்பதற்கான ஆய்வுகள்
- கட்டம் 11 இன் கீழ் மீள் குடியேற்றப்படுதலின் போது நில அளவைத் திணைக்களத்தின் மேற்பார்வையுடனான அளவீட்டுப் பணிகள்
- துறைமுக கைத்தொழில் வலயத்துக்கான இடம் காட்டும் திசை கருவித் தொகுதியின் (DGPS) பயன்பாட்டில் முழுப் பிரதேசத்துக்குமான மாதிரி வரைபடம் தயாரித்தல்
- திட்ட பொறியியலாளர்களினால் வழங்கப்பட்ட ஏனைய தொடர்புபடும் ஆய்வு வேலைகள்
- கிரிந்த காணியின் எல்லைகளை வகுத்தல்

**கடல் மைல் பிரிவு**

கப்பல்களுக்கு பொருள் வழங்குவோர், லாஞ்ச் இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய பழுதுபார்த்தல் வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் தோய்ந்த நீர், குப்பைகள் அகற்றுவதற்கான வசதி மேற்கொள்பவர்களின் வருடாந்த பதிவும், அனுமதிப்பத்திரங்கள் வழங்கலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

| அனுமதிப்பத்திரத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை | வருமானம் ரூபா |
|---|---|---|
| கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம் | 151 | 4,810,908.28 |
| டொக்யார்ட் அனுமதிப்பத்திரம் | 74 | 1,346,225.61 |
| அளவை அனுமதிப்பத்திரம் | 39 | 979,875.54 |
| கப்பல்களுக்கான பொருள்கள் வழங்குவோரின் அனுமதிப்பத்திரம் | 90 | 3,262,514.65 |
| படகு அனுமதிப்பத்திரம் | 49 | 1,517,688.78 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரம் | 47 | 141,710.68 |
| **மொத்தம்** | 12,058,923.54 | |

# திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

**கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்**

கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் - துறைமுக உட்கட்டமைப்பு வேலைகள் பின்வருமாறு இரண்டு கட்டங்களில் பூர்த்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**அலைதாங்கி நிர்மாணித்தல்**

- அலைதாங்கிகள் நிர்மாணித்தல், புதிய துறைமுகத் தடாகத்துக்கான அகழ்தல், கப்பலோட்ட நுழைவு கால்வாய் தோண்டுதல் , மசகு எண்ணெய் குழாய் வழி மீள் பதித்தல் போன்ற துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள்.
- முனையங்கள் நிர்மாணித்தல் மற்றும் ஏனைய தொடர்புபடும் சேவைகள்.

**துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் வேலைகள்**

தரம், தன்மை, சுற்றாடல் மற்றும் சமூக விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஆகுசெலவு மற்றும் கால வரையறையினுள் குறித்த செய்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**முனையங்கள் நிர்மாணித்தல்**

**தென் கொள்கலன் முனையம் (SCT)**

உத்தேச கொழும்பு தென் துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் முதலாவது முனையமாக நிர்மாணித்து கையாளல் மேற்கொண்டு ஒப்படைக்கும் (BOT) அடிப்படையின் மீது தென் கொள்கலன் முனையம் நிர்மாணிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| அபிவிருத்தியாளர் | : | வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையக் கம்பெனி (CICT) |
| அமுல்படுத்தப்படும் திகதி | : | 2011.12.01 |
| நி.கை. ஒ.ஒப்பந்த (BOT) காலம் | : | 35 வருடம் |

**செய்திட்டத்தின் பாகங்கள்**

| | | |
|---|---|---|
| துறைமேடைச் சுவரின் நீளம் | : | 1200 மீட்டர் |
| நங்கூரத்தளங்களின் எண்ணிக்கை | : | 3-4 |
| நீரின் ஆழம் | : | 18 மீட்டர் |
| கொள்ளளவு | : | 2.4 மில்லியன் இருபது சம அலகுகள் |
| செய்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஆகு செலவு | : | 500 அமெரிக்க டொலர் மில்லியன் |
| நிர்மாணம் நிறைவு செய்யப்படும் திகதி | : | 2014 ஏப்ரல் |

தரம், தன்மை, சுற்றாடல் மற்றும் சமூக விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஆகுசெலவு மற்றும் கால வரையறையினுள் குறித்த செய்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. கையாளல் நடவடிக்கைகள் 2013 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு முழு முனையத்தினதும் கையாளல் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) – கட்டம் I**

கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தியின் பிரதான செய்திட்டத்தில் 18 மீட்டர் ஆழமான 03 கொள்கலன் நங்கூரத்தளங்களையுடைய 1200 மீட்டர் நீளமான துறைமேடையினை கிழக்கு கொள்கலன் முனையம் கொண்டிருக்கும். கொழும்பு துறைமுகத்திலுள்ள கொள்கலன் கையாளல் பரிமாணத்தின் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி செய்திட்டத்தின் முதலாவது கட்டமாக தனி நங்கூரத்தளமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு பணிகளின் பிரதான விடயங்கள்**

- பூர்வாங்க தோண்டுதல் மற்றும் நிரப்புவதற்கான தோண்டுதல்.
- 440 மீட்டர் நீளமான மேடைச் சுவர் அமைத்தல், 30 மீட்டர் நீளமான பீலித் தொகுதி, 20 மீட்டர் அகலமாக பின்னோக்கி செல்லக் கூடிய பிரதேசம், 20 நிரல்களைக் கொண்ட பாதை, தடுப்புச் சுவர் மூடு சுவர் கொண்ட வெற்றிடமான பிரதேசத்தையும் கொண்டிருக்கும்.
- பக்க பாரந்தூக்கிகளுக்கான பீலி மற்றும் சுவர்.
- புனரமைக்கப்பட்ட நிலத்தில் கொள்கலன் முனையம் - அடுக்கும் 12 உலர் வழிகள், குறிரூட்டப்பட்ட கொள்கலன்கள் வைக்கப்படும் வழி, முனையம் சுற்றில் அமைந்துள்ள 30 மீட்டர் அகலமான பாதை மற்றும் முனைய ட்ரக் வண்டிகள் நிறுத்துவதற்கான பகுதியையும் இது கொண்டிருக்கும்.
- வளைவான மூடு சுவர்.
- சேவைகள் மற்றும் உபயோகங்கள் - நுழையும் மற்றும் வெளியேறும் வாசல், எரிபொருள் நிரப்பும் நிலையம், மின்சார வினியோக உப நிலையங்கள், கழிவு நீர் சுத்தகரிப்பு இயந்திர சாலை மற்றும் தீயணைப்பு சேவையும் இதனுள் உள்ளடங்கும். நீர் சேமிப்பு மற்றும் வினியோக வலையமைப்பு, புயல் காற்று நீர் வெளியேறும் தொகுதியும் முனையத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய முன்னேற்றம்**

பௌதீக ரீதியான முன்னேற்றம் - 72.8 %
நிதி சார்ந்த முன்னேற்றம் - 61.30%

பிரதான உட்கட்டமைப்பு வசதிகளின் பணிகள் விபரமாக பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| இல | பணிகள் | 2014 டிசம்பர் வரையிலான முன்னேற்றம் (%) |
|---|---|---|
| 1 | தோண்டுதல் மற்றும் நிரப்புதல் | 97 |
| 2 | துறைமேடைச் சுவர் | 99 |
| 3 | தரைநோக்கியுள்ள பாரம்தூக்கியின் உத்திரம் | 85.7 |
| 4 | வளைவான சுவர் (கிழக்குப் பக்கமான ஓரம்) | 78.7 |
| 5 | கொள்கலன் முனையம்,பாதை மற்றும் தார் படலம் இடும் வேலைகள் | 4.0 |
| 6 | சேவைகள் | 47.0 |
| 7 | மின்சாரம் | 29.7 |

**கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம்**

**அறிமுகம்**

இலங்கையின் தலைநகரமான கொழும்பு பெறுமதியில் கூடிய பல சொத்துக்கள் நிறைந்த தெற்காசிய வலயத்தில் துரித அபிவிருத்தி பெற்று வரும் நகரமொன்றாகும். இந்திய சமுத்திரத்திலிருந்து பார்வையைத் செலுத்தும் போது கொழும்பு நகரம் மிகவும் வெளிச்சமான முறையில் தோற்றமளிக்கும். கொழும்பு நகரத்தின் காணிகள் நிரப்பப்படுதலுடன் செயற்கை துறைமுக நகரம் நிர்மாணிக்கும் பணிகளும் திட்டமிடப்பட்டன.

கொழும்பு நகரத்தில் கொழும்பு துறைமுக நகரத்தின் நிர்மாணம் 1,337 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொண்ட முதலீடொன்றாகும். இது ஆசியாவின் வெளிச்சவீடாக கொழும்பு நகரத்தை ஆக்குவதற்காக நிர்மாணிக்கப்படவுள்ளது. இப்பாரிய செய்திட்டத்தின் மூலம் கொழும்பு நகரத்துக்கு அப்பால் நிரப்பப்பட்ட நிலப் பிரதேசம் கிடைக்கப்பெறும். புதிய நகரத்தின் தன்மை கொண்ட இத்தீவு சர்வதேச மட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், மர நிழல் கொண்ட உலாவுவதற்கான நடைபாதைகள், பொதுவான பொழுதுபோக்கு நடைபாதைகள், உல்லாசப் படகுகள் மற்றும் இணைந்த ஓய்வு விடுதிகள், திட்டமிடப்பட்ட வடிவமைப்புகளைக் கொண்ட ஹோட்டல்கள், ஆடம்பர வீட்டுத் தொகுதிகள் போன்ற வர்த்தக மற்றும் வாழ்க்கை முறையின் விசேட அம்சங்களைக் கொண்ட இடமாக இருக்கும்.

**செய்திட்டத்தின் அடிப்படை விபரங்கள்**

**திட்டத்தின் உள்ளடக்கம்**

கரையோர கடல் அடித்தளம் நிரப்புதல் மற்றும் 233 ஹெக்டயார் நிலப் பிரதேசம் அபிவிருத்தி செய்தல், இதில் 170 ஹெக்டயார் நிலம் விற்பனை செய்யக்கூடிய காணியாகவும் மீதியான 63 ஹெக்டயார் நிலம், காட்சிகாண் நீர் நிலைகள், பாதைகள் பொது பயன்பாட்டிற்கான பூங்காக்களையும் கொண்டிருக்கும்.

**செய்திட்டக் கம்பனி**

CHEC துறைமுக நகர கொழும்பு தனியார் கம்பனி/ சைனா கொமினியூகேசன் கன்ஸ்ரக்ஸன் கம்பனியின் (CCCC) பூரண உரித்துடைய துணைக் கம்பனி).

**நிர்மாண ஒப்பந்தக்காரர்**

வ/ப சைனா ஹாபர் இன்ஜினியரிங் தனியார் கம்பனி (CHEC).

**மதிப்பிடப்பட்டுள்ள ஆகுசெலவு**

1,337 அமெரிக்க டொலர் மில்லியன் ஆகும். இத்தொகை செய்திட்டக் கம்பனியினால் முதலீடு செய்யப்படுகின்றது.

**செய்திட்டம் அமுலாக்கப்படும் முறை**

**இந்த செய்திட்டம் இரண்டு கட்டங்களாக அமுல்படுத்தப்படும். கட்டம் I மற்றும் II**

**கட்டம்** I: அலைதாங்கி , நிரப்புதல்கள் மற்றும் விற்பனை செய்யக்கூடிய 75 ஹெக்டயர் நிலப் பிரதேசத்திற்குரிய உட்கட்டமைப்பு வசதிகள் முழுமையாக நிர்மாணிக்கப்படும் நடவடிக்கைகள்.

**கட்டம்** II: மீதி விற்பனை செய்யக்கூடிய காணிப் பிரதேசத்திலிருந்து 95 ஹெக்டயார் நிலத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

செய்திட்டம் அமுல்படுத்தப்படும் மொத்த காலப்பகுதி 08 வருடங்களாகும்.

**தற்போதைய நிலைமை**

- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பூர்வாங்க தொழில்நுட்ப சாத்தியவள ஆய்வு 2010 ஆகஸ்'ட் மாதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த செய்திட்டம் தொழில்நுட்ப ரீதியாக தகுந்ததென பரிந்துரைக்கப்பட்டது.
- நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நகல் செய்திட்டப் பிரேரணை 2010 அக்டோபர் மாதம் தயாரிக்கப்பட்டது.
- மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க தொழில்நுட்ப சாத்தியவள அறிக்கையின் அடிப்படையில் முதலாவது கட்டத்தின் சுற்றாடல் தாக்கம் பற்றிய மதிப்பீடு 2011 ஏப்ரல் மாதம் தயாரிக்கப்பட்டு இது கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள பாதுகாப்பு முகாமைத்துவ திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.
- கற்பனையின் உருவதோற்ற திட்டப் பிரேரணை வ/ப சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனியினால் 2011 ஏப்ரல் மாதம் முன்வைக்கப்பட்டது
- கற்பனையின் உருவதோற்ற திட்டப் பிரேரணை அமைச்சரவையினால் நியமிக்கப்பெற்ற நிலையான மீளாய்வுக் குழுவிடம் (SCAPC) சமர்ப்பிக்கப்பட்டு விரமான திட்டப் பிரேரணை பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரம் 2011 ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டது.
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கலந்துரையாடல் குழுவிற்கு உதவுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) 2011 நவம்பர் மாதம் நியமிக்கப்பட்டது.
- தொல்பொருளியல் திணைக்களத்தினால் தொல்பொருளியல் தொடர்பான தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது தொல்பொருளியல் தடை நீக்கல் அங்கீகாரம் 2012 பெப்ரவரி மாதம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. தொல்பொருள் திணைக்களத்தினால் இந்த செய்திட்டத்துக்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டது.
- இலங்கை துறைமுக அதிகாரசபைக்காக மணல் பெற்றுக்கொள்ளும் மணல் அகழப்படும் குழிப் பிரதேசங்களின் பூர்வாங்க சுற்றாடல் சோதனை (IEE) மற்றும் மணல் தோண்டும் அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் ஆய்வு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினால் 2012 யூலை மாதம் நிறைவு செய்யப்பட்டது. பூகோளவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தினால் மணல் தோண்டும் அறிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டு பூர்வாங்க சுற்றாடல் பரீட்சிப்பு செயற்பாடு முடிவடையும் தறுவாயில் உள்ளது.
- செய்திட்டத்தின் சுருக்க திட்ட வடிவம் 2012 செப்டெம்பர் மாதம் தயார் செய்யப்பட்டது.
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபை சைனா கொமியூனிகேசன் அன்ட் கன்ஸ்ரக்ஸன் கம்பனிக்கிடையிலான (CCCC) புரிந்துணர்வு ஒப்பந்தம் 2012 செப்டெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் திட்டப் பிரேரிப்பாளரான வ/ப சைனா கொமினியுகேஷன் அன்ட் கன்ஸ்ரக்ஸன் கம்பனிக்கிடையில் (நகல் உடன்படிக்கையின் அனுசரணையாளராகக் குறிப்பிடப்படும்) புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுதலோடு அவர்களின் பிரேரணை 2012 ஆகஸ்ட் மாதம் முன்வைக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை இதன் அடிப்படையில் அமைந்துள்ளது.
- வ/ப சைனா கொமியூனிகேசன் அன்ட் கன்ஸ்ரக்சன் கம்பனியூடாக வ/ப சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனியினால் (CHEC) விபரமான செய்திட்டப் பிரேரணை 2012 அக்டோபர்

மாதம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன்படி முதலாவது தொழில்நுட்ப மதிப்பீட்டறிக்கை 2013 மாதம் தயார் செய்யப்பட்டு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

- ✦ சலுகை அடிப்படையிலான உடன்படிக்கையிலும் ஏனைய உடன்படிக்கையிலும் அனைத்து தொழில்நுட்ப விடயங்கள் , நிபந்தனை மற்றும் விதிகள் தொடர்பில் செய்திட்ட பிரேரிப்பாளரோடு கலந்துரையாடப்படுவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வு குழு 2013 மார்ச் மாதம் அங்கீகாரம் வழங்கியது.
- ✦ திட்டப் பிரேரிப்பாளருடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாவது அறிக்கை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழுவிடம் 2013 யூலை மாதம் வழங்கப்பட்டது.
- ✦ அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று 2013 ஆகஸ்ட் மாதம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.
- ✦ அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக அமைச்சரவை பத்திரம் 2013 நவம்பர் மாதம் முன்வைக்கப்பட்டது.
- ✦ அமைச்சரவையின் தீர்மானம் 2014 சனவரி மாதம் வழங்கப்பட்டது
- ✦ 2014 சனவரி மாதம் வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கான இரண்டாவது அமைச்சரவை பத்திரம் 2014 செப்டெம்பர் மாதம் முன்வைக்கப்பட்டது.
- ✦ செய்திட்டத்துக்கான அமைச்சரவையின் தீர்மானம் 2014 செப்டெம்பர் மாதம் வழங்கப்பட்டது.
- ✦ இலங்கை அரசாங்கம் மற்றும் செய்திட்டக் கம்பனிக்கிடையில் (CHEC) துறைமுக நகர கொழும்பு தனியார் கம்பனி) 2014 செப்டெம்பர் மாதம் செய்திட்டம் ஆரம்பிக்கப்படுவதிலான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
- ✦ நிர்மாண நடவடிக்கைகள் 2014 செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
- ✦ கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்திடம் சுற்றாடல் முகாமைத்துவத் திட்டம் வழங்கப்பட்டு அவர்களின் அனுமதியும் வழங்கப்பட்டது.
- ✦ ஆரம்ப சுற்றின் தரவுகள் திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**காலி துறைமுக அபிவிருத்தித் திட்டம் - கட்டம் II**

மொத்த செய்திட்டத்தில் அலைதாங்கிகள் நிர்மாணித்தல், பிரவேச கால்வாய் தோண்டுதல் மற்றும் முனையம் முன்னாலான திருப்பும் தடாகம் தோண்டுதல் உள்ளடங்கும்.

'வடிவமைப்பு பணிகள் தொடர்பில் வ/ப ஒரியன்டல் கன்ஸல்டன் கம்பனியுடன் புதிய ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அலைதாங்கியின் நிர்மாண நடவடிக்கைகள் தற்போதிருக்கும் JICA நிதியில் நிர்மாணிக்கப்படுவதுடன் கட்டம் II இல் (அரச/தனியார் கூட்டு (PPP ) அடிப்படையின் பல்வித பணி நங்கூரத்தளமொன்று அபிவிருத்தி செய்யப்படும்.

அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் தொகை ஜப்பான் யென் 14,495 மில்லியன் ஆகும்.

**தற்போதைய நிலைமை**

வ/ப ஒரியன்டல் கன்ஸல்டன் கம்பனியினால் பிற்சேர்க்கையுடன் திட்ட அறிக்கையின் வரைவு மற்றும் திட்டப் பிரேரணையின் இறுதி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கேள்விலை ஆவணங்கள் I,II,III,IV, மற்றும் IV பாகங்களை கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

விலைகோரல் மதிப்பிடப்படும் பணிகள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பின்வரும் நிறுவனங்களிலிருந்து தேவையான அங்கீகாரங்கள் தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

- ✦ தேசிய மரபுரிமைகள் அமைச்சு
- ✦ தொல்பொருளியல் திணைக்களம்
- ✦ கரையோர பாதுகாப்புத் திணைக்களம்

நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு யுனெஸ்கோ நிறுவனத்தின் அங்கீகாரம் அவசியமாகும்.

காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் 2013 ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட திட்டம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் யுனெஸ்கோ நிறுவனத்தின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ நிறுவனத்தின் 38 ஆம் குழு அமர்வில் நகல் வரைவு தீர்மானத்திற்கான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உதவியுடன் குறித்த சுற்றாடல் தாக்கம் தொடர்பான அறிக்கையினைத் தயாரிக்கும் பணிகளை இலங்கை துறைமுக அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

**திருகோணமலை துறைமுக அபிவிருத்தி திட்டம்**

இலங்கையின் வட கிழக்கு பிரதேசங்களுக்கான பாரிய நகர வளர்ச்சி மத்திய நிலையமாக திருகோணமலையை அபிவிருத்தி செய்யப்படுவதில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய 3000 ஏக்கர் நிலம் பொருளாதாரம் வலுவூட்டப்படுவதற்கும் வளங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்கும் இதுவரை குறித்த நிலப் பிரதேசம் பயன்படுத்தப்படவில்லை.

திருகோணமலை துறைமுகத்தில் வர்த்தகங்களுக்கு “திருகோணமலை துறைமுக நகர அபிவிருத்தி செய்திட்டத்தின்” கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பிரேரணைகள் கோரப்பட்டுள்ளன. சீமெந்து, பெற்றோலிய இரசாயனங்கள், மீள் ஏற்றுமதி செய்தல், கப்பல்களை பழுதுபார்த்தல், கடல் உணவு பதப்படுத்துதல் போன்ற தொழில்துறைக்கு 09 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

பூர்வாங்க மதிப்பீட்டுப் பணிகள் நிறைவுபெற்று 05 பிரேரணைகள் அதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தன. நிதிசார்ந்த மதிப்பிடலின் பின்னர் 3 பிரேரணைகள் மீதியாக இருந்தன தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அதில் 02 பிரேணைகள் பரிந்துரைக்கப்பட்டு குறித்த தொழில்நுட்ப அறிக்கை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக்கான குழுவின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ளது..

**இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான உத்தேச பிரதான அலுவலகக் கட்டடம்**

பாவனையாளர்களின் சேவையின் தரம் மேம்படுத்தப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு வழிவகுக்கும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான அலுவலகக் கட்டடம் நிர்மாணிக்கப்படுவதற்கான திட்டமிடல் பணிகள் நடைபெற்று வருகின்றன

வ/ப சியெரா கன்ஸ்ரக்ஸன் தனியார் கம்பனியிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான உத்தேச பிரதான அலுவலகக் கட்டடம் அமைப்பதற்கான திட்டமிடுதல், நிர்மாணம் மற்றும் நிதி ஈடுபடுத்துதல் தொடர்பில் கோரப்படாத பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. உத்தேச கட்டடத்தின் தரைப் பிரதேசம் 31,000 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டது.

பிரதான அலுவலகக் கட்டடம் “சம்புத்த ஜயந்தி சைத்திய” அருகில் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**தற்போதைய முன்னேற்றம்**

| உரிய காலப்பகுதிக்கான இலக்குப் பணிகள் | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|
| தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விபரங்கள் | சியோரா நிறுவனத்திலிருந்து புதிதாக பிரேரணை பெற்றுக்கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வேண்டுகோள் விடுத்தது சியோரா நிறுவனத்தினால் புதிய பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. |
| கட்டடத்தின் நிர்மாணம் மற்றும் வடிவமைப்பு | இறுதியான தொழில்நுட்ப மற்றும் நிதிசார் பிரேரணைகள் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. |
| ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் நிர்மாண விபரங்களைத் தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்தல் | இறுதியான ஒப்பந்த ஆவணம் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் மீளாய்வுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. |
| நிதியுதவி | இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கடனுக்கான பயன்பாட்டுக் காலம் முடிவடைந்துள்ளதால் இலங்கை துறைமுக அதிகாரசபை குறித்த கடன் வசதியை ஹட்டன் நஷனல் வங்கியிலிருந்து பெறுவதற்கு திட்டமிட்டுள்ளது. |

தொழில்நுட்ப மற்றும் நிதிசார்ந்த பிரேரணைகளுக்கான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் உடன்பாடு தெரிவிக்கப்பட்டதன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தனது அவதானிப்புக்களை செய்திட்டத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

## தென் துறைமுக அபிவிருத்தி

**மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுக செய்திட்டம் கட்டம் 1 - பயன்பாட்டுச் சேவைகள்**

2011 டிசெம்பர் மாதம் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் முதலாவது கட்டத்தின் பணிகள் முடிவடைதலோடு மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய வேலைகளாக முதலாவது கட்டத்தின் பயன்பாட்டுச் சேவைகளின் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது கட்டத்தின் ஆகுசெலவு உயர்வடைதலை தடுப்பதற்கு கென்ட்ரி பாரம் தூக்கிகளைப் பொருத்துதல், இழுவைக் கலங்கள் மற்றும் ஏனைய சிவில் வேலைகளுக்காக 147 அமெரிக்க டொலர் மில்லியன் மேலதிக கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அதன்படி தீ அணைக்கும் டிரக் வண்டிகள் தவிரந்த கையாளல் உபகரணம் சம்பந்தப்பட்ட இடத்திற்கு வரவழைத்துக் கொள்ளும் வேலைகள் 2014 டிசெம்பர் மாதம் முடிவடைந்தன. தீ அணைக்கும் டிரக் வண்டி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரரினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கப்பலிலிருந்து கரை வரையிலான 02 கென்ட்ரி பாரம்தூக்கிகள், இறப்பர் டயர்கள் பொருத்தப்பட்ட 01 கென்ட்ரி பாரம்தூக்கி, 01 வழிகாட்டிக் கலம், 02 இழுவைக் கலங்கள், போக்லிப்ட் இயந்திரங்கள் மற்றும் ஏனைய அனைத்து கையாளல் உபரகணங்களும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பாரம்தூக்கிகள் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் நிறுவப்பட்டுள்ளன. இக்கட்டத்தின் நிர்மாண வேலைகள் முடிவடைந்து ஏனைய பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் - கட்டம்** – II

**செய்திட்டம் பின்வரும் நிர்மாணப் பணிகளைக் கொண்டதாக இருக்கும்**

- பிரதான கொள்கலன் நங்கூரத்தளம் - 83.8 மீட்டர் (ஆழம் 17 (மீட்டர்)
- ஊட்டக் கொள்கலன் நங்கூரத்தளம் - 460 மீட்டர் ஆழம் (12 மீட்டர்)
- பல்வித பணி கொள்கலன் நங்கூரத்தளம் - 838.8 மீட்டர் ஆழம் ( 17 மீட்டர்)
- பரிமாற்ற கொள்கலன் நங்கூரத்தளம் - 208 மீட்டர் ஆழம் (17 மீட்டர்)
- பொது சேவை கொள்கலன் முனையம்
- செயற்கைத் தீவு
- 16 இருந்து 17 மீட்டர் வரை துறைமுக தடாகம் ஆழமாகத் தோண்டுதல்
- 16 இருந்து 17 மீட்டர் வரை பிரவேச கால்வாய் ஆழமாக்குதல்
- நீர்த்தடுப்புக் கூடம்
- பாதைகள், முனையங்கள் மற்றும் கையாளல் வசதிகள்

ஆரம்ப ஒப்பந்தம் 2010 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு 2015 நவம்பர் 15 ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளது. நிர்மாணத்துக்கான மொத்த ஆரம்ப ஆகுசெலவு 808 அமெரிக்க டொலர் மில்லியன் ஆகும். ஆயினும் கடன் உடன்படிக்கை 2012 செப்டெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்டது. செய்திட்டத்தின் பணிகள் நடைபெற்று வரும் போது ஒப்பந்தக்காரரினால் மேலுமொரு கணிப்பீட்டுப் பத்திரம் முன்வைக்கப்பட்டு அதன்படி இரண்டாம் கட்டத்தின் ஆகுசெலவு 885 அமெரிக்க டொலர் மில்லியன் ஆக இருந்தது. இது தொடர்பில் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளரிடம் அவரின் பரிந்துரைக்கும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மீளாய்வுக்கும் அறிவிக்கப்பட்டது. அதன் பயனாக பணிப்பாளரினால் (அரச நிதி) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அவர்களின் மீளாய்வுகள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவிடம் முன்வைக்கப்பட்டன. இதன்படி ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ஆகுசெலவின் ஒப்பந்தத்தின் வேலைகளை நிறைவு செய்யும் நோக்கில் அனைத்து அங்கீகாரங்களுடன் செய்திட்டத்தின் உள்ளடக்கம் மாற்றுவதற்கு தீர்மாணிக்கப்பட்ட உள்ளடக்க வரையறையினுள் செய்திட்டத்தின் பணிகள் (ஆரம்ப கணிப்பீட்டுப் பத்திரத்திற்கமைய) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் பின்வருமாறு

| பணி | பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| நீர்த் தடுப்புக் கூடம் (தென்கிழக்கு) | 100% |
| நீர்த் தடுப்புக் கூடம் (தெற்கு) | 100% |
| புதிதாக தோண்டுதல் (மேற்றள மண் அகழ்தல்) | 95% |
| தடாகம் தோண்டுதல் (கடினமான தோண்டுதல்) | 76% |
| மேடைச் சுவர் நிர்மாணித்தல் (கேசன்) | 60% |
| புதிய எண்ணெய் முனையம் நிர்மாணித்தல் | 100% |
| துறைமுக தடாகம் ஆழமாக்குதல் | 100% |
| பொது சேவை முனையம் நிர்மாணித்தல் | 34% |
| அணுகு பாதை நிர்மாணித்தல் | 25% |
| பாதைகள் மற்றும் முனையங்கள் நிர்மாணித்தல் | 33% |
| செயற்கை தீவு நிர்மாணிக்கும் பணிகள் | 68% |
| உட்புகு கால்வாய் ஆழமாக்குதல் | 90% |
| துறைமுக இயக்க உபகரணங்களை நிறுவுதல் | 0% |

**மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் மற்றும் எண்ணெய் களஞ்சியத் தொகுதி**

**ஆரம்ப ஒப்பந்தத்தின் கீழ் குறித்த செய்திட்டம் பின்வரும் பிரதான நிர்மாணப் பணிகளை உள்ளடக்கியதாக இருக்கும் (76 அமெரிக்க டொலர் மில்லியன்)**

- 14 தாங்கிகள் நிர்மாணித்தல் (80,0000 கன மீட்டர் மொத்த கொள்ளளவு)
- இல: 01 இன் எண்ணெய் துறைமேடையில் ஏற்றும் 08 தண்டுகளை நிறுவுதல்
- வினியோகிக்கும் எண்ணெய் குழாய்களை நிர்மாணித்தல்
- இறைக்கும் நிலையம், கட்டுப்பாட்டு அறை, அலுவலகக் கட்டடங்களை நிர்மாணித்தல்

**பின்வரும் நிர்மாணப் பணிகள் மேலதிக கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன (20.87 அமெரிக்க டொலர் மில்லியன்)**

- 06 நிரல்களைக் கொண்ட நுழைவுப் பாதையை நிர்மாணித்தல்
- 02 நிரல்களைக் கொண்ட வழியை இணைக்கும் பாதையை நிர்மாணித்தல்
- 01 ஆம் துறைமேடையின் ஏற்றும் தண்டு மற்றும் 02 ஆம் துறைமேடையின் ஏற்றும் தண்டிற்கிடையில் குழாய்ப் பாதையை நிர்மாணித்தல்
- 02 ஆம் துறைமேடையில் 08 ஏற்றும் தண்டுகளை நிறுவுதல்
- துறைமுகத்தை சுற்றி 5.2 கி. மீற்றர் நீளமான வேலியை அமைத்தல்

**எண்ணெய் எரிபொருள் வகை மற்றும் தாங்கிகளின் கொள்ளளவுகள் பின்வருமாறு**

| விபரம் | தாங்கிகளின் எண்ணிக்கை | மொத்த கொள்ளளவு (கன மீட்டர்) |
|---|---|---|
| கப்பல்களுக்கான எண்ணெய் வழங்குதல் | 8 | 51,000 |
| விமானங்களுக்கான எரிபொருள் | 3 | 23,000 |
| திரவ பெற்றோலிய வாயு தாங்கிகள் | 3 | 6,000 |

குறித்த செய்திட்டத்தின் நிர்மாண வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இந்த மூன்று வசதிகளும் ஒப்படைப்புக்குப் பின்னரான பரீட்சிப்புகளும் முடிவு பெற்றுள்ளன. செய்திட்டத்தின் பிழைகளுக்கான பொறுப்பு வகிக்கும் காலம் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதன்படி ஒட்டுமொத்த வசதிகளையும் இலங்கை துறைமுக அதிகாரசபை தன்வசம் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது.

திரவ பெற்றோலிய கேஸ் களஞ்சியப்படுத்தும் வசதி வ/ப லிட்றோ கேஸ் லங்கா கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது. அனைத்து பரீட்சிப்பு நடவடிக்கைகளும் முடிவு பெற்றுள்ளதோடு வ/ப லிட்றோ கேஸ் லங்கா கம்பனியினால் பவுஸர் வண்டிகளில் நிரப்பும் கையாளல்கள் நடைபெற்று வருகின்றன.

இதற்கு மேலதிகமாக 2014 ஆண்டில் விமானங்களுக்கான எண்ணெய் தாங்கிகளை குத்தகைக்கு வழங்கும் உடன்பாடு தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. ஆயினும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதற்கு உடன்படவில்லை. அதனால் விமானங்களுக்கான எரிபொருள் தாங்கிகள் இன்னும் பயன்படுத்தப்படவில்லை.

மாகம்புர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் மற்றும் எண்ணெய் களஞ்சியப்படுத்தும் தனித்துவ உரிமை மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. எண்ணெய் வழங்கும் வசதிகளின் வர்த்தக கையாளல் பணிகள் 2014 யூன் மாதம் 22 ஆரம்பிக்கப்பட்டு தற்போது பணிகள் வெற்றிகரமாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி 2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையில் பயணித்த 133 கப்பல்களுக்கு 53,512 மெட்ரிக் தொன் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் ரோ ரோ கப்பல்கள் மற்றும் ஏனைய வசதிகள்**

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் அதன் ரோ ரோ கப்பல்களின் கையாளல்கள் 2012 யூன் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி 2014 டிசெம்பர் 31 வரை துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 428 ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் பதிவாகிய எண்ணிக்கை 69,638 ஆகும். ஏற்றுமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 09 ஆகவும் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட வாகனங்களின் எனண்ணிக்கை 204,063 ஆகவும் இருந்தன மொத்த கப்பற்சரக்குகளின் கையாளல் சிறிய அளவில் (கையாளப்பட்ட பரிமாணம் 15,286 மெட்ரிக் தொன்) மேற்கொள்ளப்படுவதோடு எதிர்காலத்தில் பாரியளவிலான கையாளல்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்துக்கான பிரேரணைகள் கோரல்**

ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரேரணைகள் கோரலில் 07 வெற்றிகர விலைதாரர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அவர்களின் பிரேரணைகளின் முதலீடுகள் 670 அமெரிக்க டொலர் மில்லியன் பெறுமதியைக் கொண்டதாகும். அவர்களின் பிரேரணைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு 03 பேர் உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டனர்.

முதலீட்டாளர்களின் அதிகரித்த கேள்வி காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பிரேரணைகள்கோரல் II ஆவது பிரேரணைகள் கோரலும் மேற்கொள்ளப்பட்டது. 10 விலைதாரர்களினால் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு II ஆவது பிரேரணைகள் கோரலின் கீழ் 05 முதலீட்டாளர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் பசுமை துறைமுகமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதனால் சகல முதலீட்டாளர்களும் தத்தமது திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுற்றாடல் தாக்கம் தொடர்பான விசேட அனுமதியை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். ஆயினும் ஒவ்வொரு முதலீட்டாளரினாலும் தனித்தனியே சுற்றாடலின் தாக்கம் ஆய்வு செய்யப்படுவதன் மூலம் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் கைத்தொழில் வலயத்துக்கு ஒட்டுமொத்த சுற்றாடல் தொடர்பிலான வெற்றிகரமான தாக்கத்தை ஏற்படுத்தாதென அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களை கருத்திலெடுத்து உத்தேச கைத்தொழில் வலயம் உள்ளடக்கப்படும்வாறு பூர்வாங்க சுற்றாடல் ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் பின்னர் பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு மேற்கொள்வது தொடர்பிலான வழிகாட்டும் விதிமுறைகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்டன.

அதன்படி பிரபல அரச நிறுவனங்களின் ஒன்றான மொரட்டுவை பல்கலைக்கழகம் பூர்வாங்க சுற்றாடல் ஆய்விற்கான ஆலோசகராக பெயரிடப்பட்டது. குறித்த ஆய்வு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் பசுமை துறைமுகம் எனும் நோக்கத்தை அடையும் பொருட்டு பூர்வாங்க சுற்றாடல் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படும் வழிகாட்டல்களை முதலீட்டாளர்கள் பின்பற்றுதல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக முதலீடுகளுக்கான II ஆவது பிரேணைகள்கோரல் தோடர்பிலான அமைச்சரவையிலிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தையும் விபரங்ளையும் சட்ட ரீதியான அவதானிப்புகளைப் பெறுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. சட்டமா அதிபர் தனது அவதானிப்புகளை அனுப்பி வைத்துள்ளதோடு அதற்கான தகுந்த நடவடிக்கைகளை இலங்கை துறைமுக அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கிடையில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட பூர்வாங்க சுற்றாடல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சில மீளாய்வுகளின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இந்த ஆய்விற்கான அங்கீகாரத்தை 2014 டிசெம்பர் 03 ஆம் திகதி வழங்கியுள்ளது.

அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட கம்பனிகளுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தும் செயற்பாடு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் துரிதப்படுத்தப்பட்டது. வர்த்தக உடன்படிக்கை தொடர்பிலான இறுதி கலந்துரையாடல்கள் அதன்படி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் 2014 டிசெம்பர் 18 ஆம் திகதி வ/ப லாப் டர்மினல்ஸ் தனியார் நிறுவனத்தோடு ( லாப் கேஸ் பீ. எல்.சீ) நடாத்தப்பட்டன.

**காணிகளை கைப்பற்றுதல் - மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் - இரண்டாம் கட்டம்**

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்துக்கான காணிகளைக் கைப்பற்றுதல்/ கொள்வனவு செய்யும் செயற்பாடு இரண்டாம் கட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் சுமார் 700.5 ஹெக்டயார் நிலம் கைப்பற்றப்படவுள்ளது. குறித்த செயற்பாடு காரணமாக 398 குடும்பங்கள் ஹம்பாந்தோட்டை நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்படுதல் வேண்டும்.

கைப்பற்றப்படும் காணிகளை அடையாளம் காணுதல் மற்றும் நஷ்டஈடு தொடர்பில் குடியிருப்பாளர்களுடனான கலந்துரையாடல்களின் மூலம் உடன்பாடு ஏற்படுத்தும் பணிகள் தற்போது முடிவடைந்து மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்துக்கான காணிகளைக் கைப்பற்றுதல்/ கொள்வனவு செய்வது தொடர்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அமைச்சரவை அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

| விபரம் | பரப்பளவு (ஹெக்டயார்) | நஷ்டஈடு (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| தனியார் காணிகள் | 42.5 | 1,109.65 |
| மகாவலி காணிகள் | 638.5 | 205 + |
| அரச காணிகள் | 19.5 | _ |

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்துக்கான வழங்குதல், கையாளல் மேற்கொள்ளல் மற்றும் ஒப்படைக்கும் செய்திட்டம்**

வழங்குதல், கையாளல் மேற்கொள்ளல் மற்றும் ஒப்படைக்கும் திட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபை, சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனி (CHEC) மற்றும் சைனா மர்சன்ட் ஹோல்டிங் (சர்வதேச) கம்பனி (CMHI) கூட்டு வர்த்தகம் ஊடாக, மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் கொள்கலன் முனையமொன்றை அபிவிருத்தி செய்து கையாளல் மேற்கொள்ளும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் "சலுகையடிப்படையிலான நகல் உடன்படிக்கை" மற்றும் "அடிப்படை வழிகாட்டல்கள் பற்றியதான உடன்படிக்கை " தொடர்பில் சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனி மற்றும் சைனா மர்சன்ட் ஹொல்டிங்ஸ் கம்பனியுடன் வழங்குதல் , கையாளல் மேற்கொள்ளல் மற்றும் ஒப்படைக்கும் செய்திட்டம் சார்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சைனா கூட்டு வர்த்தக (CHINA JV) நகல் உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பணிகள் நிறைவு செய்யப்படுதல் அவசியமாகும். எனவே அதை அவதானிப்பதற்காக சட்டப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த விடயம் தொடர்பிலான சட்டப் பகுதியின் அவதானிப்புகளையும் கருத்துத் தெரிவித்தல்களையும் அனுப்பி வைத்துள்ளது.

## சிவில்

துறைமுக பாவனையாளர்களுக்கு நட்பு ரீதியான சுற்றாடலை வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளையும் கட்டடங்களையும் திருப்திகரமான நிலையில் பேணிச் செல்வதில் சிவில் பராமரிப்பு பகுதி ஈடுபட்டுள்ளது. இதன் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக வருடம் பூராகவும் சிறந்த சேவை சுற்றாடல் பேணப்படுவதற்கு சிவில் பகுதியினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிவில் பொறியியல் பகுதியின் உள்ளடக்க விடயங்கள் தவிர்ந்த இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் விருப்பத்திற்கேற்ப சிறிய அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் முன்னேற்றம் திருப்திகரமான நிலையில் இருந்ததோடு வெளி ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த குறிப்பிடத்தக்க நிதித் தொகையை மீதப்படுத்த சிவில் பொறியியல் பகுதியினால் முடிந்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக "ஒண்றிணைந்த சமூக பொறுப்புக்களின்" கீழ் சில கருத்திட்டங்கள் சிவில் பொறியியல் பகுதியினால் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**பராமரிப்பு நடவடிக்கைகள்**

மின்சாரம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் தவிர்ந்த அனைத்து துறைமுகங்களினதும் கட்டடங்கள் துப்புரவு செய்வதிலிருந்து பராமரிப்பு வரை இதன் விடய உள்ளடக்கம் பரந்து செல்கின்றது. அதன் பொதுவான அன்றாட பராமரிப்புப் பணிகள் தெற்கு மற்றும் வடக்கு பிரிவுகளின் ஊழியர்களின் அர்ப்பணிப்புகளிலான சேவைகள் நடைபெறுவதோடு சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் ஏனைய பராமரிப்புப் பணிகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந் துறைமுகத்தினதும் ஏனைய துறைமுகங்களினதும் கடல் சார்ந்த நிர்மாணங்களும் அனைத்து வெளிச்சவீடுகளின் பராமரிப்புகளும் கடல் நிர்மாணப் பிரிவினாலும் தோண்டும் பிரிவினால் துறைமுகத்தின் ஆழமும் பராமரிக்கப்படுகின்றன. ஜய கொள்கலன் முனைய பராமரிப்புகள் ஜய கொள்கலன் பராமரிப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய நிர்மாணங்களினது பராமரிப்பு பணிகள் பிரதான வேலைக் கண்காணிப்பாளர் பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. துறைமுக அதிகாரசபையின் வீட்டுத் தொகுதியின் வசதிகள் வீட்டுப் பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**சிறிய அபிவிருத்தி நடவடிக்கைகள்**

துறைமுக பாதை விரிவாக்கல் திட்டத்தில் சேவை வழங்கலுக்காக ஒதுக்கப்பட்ட நிலப் பிரதேசத்தின் ஒரு பகுதி உள்ளக ஊழியர்களினால் நிர்மாணிக்கப்பட்டு பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதை நிர்மாண ஒப்பந்தக்காரரின் காலத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் உத்தேச பாதை விரிவாக்குதலுக்கு தேவையான அனைத்து வசதிகளும் பொறியியல் பகுதியினால் நிறைவேற்றப்பட்டன.

கொச்சிக்கடை உத்தேச புதிய சமையலறையின் புதுப்பித்தல் பணிகள் சர்வதேச தரத்திற்கேற்ப சிவில் பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டன. பராமரிப்பு பணிகளுக்கு மேலதிகமாக விசேடமாக தற்போது நடைபெற்று வரும் கிழக்கு கொள்கலன் முனைய செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் சிவில் பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மின்சாரம் மற்றும் இலத்திரனியல்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழுள்ள சகல துறைமுகங்களினதும் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறைகளின் வசதிகளை திட்டமிடுதல், முகாமைத்துவம், நடைமுறைப்படுத்தல், சகல பொறியியல் செய்திட்டங்களின் வசதிகளைப் பராமரித்தலில் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பகுதி பொறுப்பாகவுள்ளது

உலகில் ஏனைய சர்வதேச கேந்திர நிலையிலான துறைமுகங்களுக்கு சமனான முறையில் துறைமுக நடவடிக்கைகள் மற்றும் தொடர்புபடும் சேவைகளில் 95% நிறைவேற்றும் பணியில் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் துறைகளின் அனைத்து முக்கிய சேவைகள் பேணிச் செல்வதில் பிரதான பொறியியலாளர் மற்றும் இரண்டு பிரதி பொறியியலாளர்களின் கீழ் தகைமைபெற்ற தொழில்சார் மின்சார/தொடர்பாடல் பொறியியலாளர்களைக் கொண்ட குழு 24 மணித்தியாலம் பூராகவும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

உத்தேச கிழக்கு கொள்கலன் முனையத்தின் திட்டமிடுதல் மற்றும் நிர்மாணங்களுக்கு மின்சார / தொடர்பாடல் பொறியியலாளர்கள் அவர்களின் அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்

**மின்சார வலு பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- ✦ இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்படும் 11 கி.வோட் மின்சாரத்தை வினியோகித்தல், நிறுவப்பட்டுள்ள மொத்த கொள்ளளவு 18 மெகா வொட் ஆகும்.
- ✦ 11 கி.வொட் கொள்ளளவு கொண்ட உப நிலையங்களை நிறுவுதலின், பணிகளை ஆரம்பித்தல், தரத்தை உயர்த்துதல்.
- ✦ குறை விசை கொண்ட அனைத்து மின்சார நிறுவுதல்களின் மின்சார உதிரிகளினது பாதுகாப்பு மற்றும் பராமரிப்புகள்.
- ✦ சேறுவாரி மற்றும் இழுவைக் கலங்களினதும் ஏனைய மிதக்கும் கலங்களினதும் மின்சார உபகரணங்களின் பராமரிப்புகள்.
- ✦ கொள்கலன் கையாளல் பாரம் தூக்கிகளினது (கப்பலிலிருந்து கரை வரையிலான முனைய பாரம் தூக்கிகள் மின்சார உபகரணங்களைப் பராமரித்தல்.
- ✦ கொள்கலன் கையாளல் பாரம்தூக்கிகளினது (கப்பலிலிருந்து கரையில் பொருத்தப்பட்டுள்ள முனைய பாரம் தூக்கிகள்) மின்சார உபகரணங்களைப் பராமரித்தல்.
- ✦ மொத்தத் தொகை கப்பற் சரக்குகளை கையாளும் பாரம்தூக்கிகளைப் பராமரித்தல்.
- ✦ கொள்கலன் பாரம்தூக்கிகளினது மின்சார மோட்டார்கள் (AC மற்றும் DC) மற்றும் ஏனைய உபகரணங்களின் பராமரிப்புகள்.
- ✦ 11 கி.வொட் கொண்ட நிலத்திற்குக் கீழான மின்சாரக் கம்பி வலையமைப்பை நிறுவுதல், பராமரிப்பு மற்றும் அதன் பின்னரான பிழைகளை சீர் செய்தல்.
- ✦ குளிரூட்டல் தொகுதியின் திட்டமிடுதல், நிறுவுதல், பராமரித்தல்

**இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- ✦ அதியுயர் வானொலி அலைவரிசை கொண்ட (WIFI) வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள் (கடல் அலைவரிசை).
- ✦ கொள்கலன் முனையத்தில் 2.4 கெகா வொட் வை பை (2.4 GHZ WiFi) தரவு தொடர்பாடல் வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.
- ✦ கொள்கலன் முனையத்தில் வானொலி அலைவரிசைகளை அடையாளம் காணும் தொகுதியை (RFID) பராமரித்தல்.
- ✦ ஒளி நார் (optical fibre) வலையமைப்பு மற்றும் தரவு வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்.
- ✦ 2000 தொலைபேசி வழிகளைக் கொண்ட துறைமுக தொலைபேசி PABX தொகுதியின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்.
- ✦ ராடார், எதிரொலி மாணி (Echo Sounder) ,செய்மதியூடான தொடர்பாடல் சாதனம், இடம் காணும் திசை காட்டும் முறைமை (DGPS) அடிப்படையிலான அளவீட்டுத் தொகுதி உள்ளடங்கலான கப்பலோட்டத் தொகுதிகளின் பராமரிப்புகள்.
- ✦ CCTV நடமாட்டத் தொகுதிகளின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்.
- ✦ இருக்கும் ஒளியியல் பைபர் வலையமைப்பை நீடித்தல்.
- ✦ அதியுயர் அலைவரிசை (VHF) கொண்ட டுப்லெக்ஸ் (Duplex) கண்காணிப்பு காணொளிக்கு இடமளிக்கப்படுவதற்காக குரல் தொடர்பாடல் வசதிகளை (Voice Communication) வசதிகள் அதிகரித்தல்.

## ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் சிவில் பொறியியல் செய்திட்டங்களை முகாமைத்துவம் செய்வதும் அமைவுகளின் திட்டங்களைக் தயாரித்தலும்

ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பகுதியின் பிரதான பணியாகும். துறைமுக அதிகாரசபையின் இவ்வாறான செய்திட்டங்களான பிரதான வர்த்தக நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்கும் நங்கூரத்தளங்கள், மேடைகள், கட்டட அமைவுகள், கட்டடங்கள் மற்றும் பாதைகள் போன்ற துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் போன்றவற்றைக் காட்ட முடியும். மேலும் அனைத்து பிராந்திய துறைமுகங்கள் உள்ளிட்டதாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல பகுதிகளினதும் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திகளுக்குத் தேவையான அனைத்து வடிவமைப்புகளும் வரைதல் பணிகளும், இப்பகுதியினால் ஆற்றப்படுகின்றன. விலைகோரல் செயற்பாடு, ஆலோசனைச் சேவைகள், நிர்மாணங்களின் மேற்பார்வை மற்றும் அவ்வாறான செய்திட்டங்களின் தரக் கட்டுப்பாடுகள், உடன்படிக்கைகளின் முகாமைத்துவம் செய்திட்ட முகாமைத்துவத்தினுள் அடங்கும். 2014 வருடத்தில் இப்பகுதியினால் செயற்படுத்தப்பட்ட பிரதான பணிகள் பின்வருமாறு.

**துறைமுக உள்ளக பாதைகளை விரிவாக்குதல்**

கொழும்பு தெற்கு துறைமுக முனையம் முடிவடைதலுடன் ஏற்படும் பாதைகளின் நெரிசல்களுக்கான தீர்வாக கொழும்பு துறைமுக உள்ளக பாதைகளை விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக உள்ளக பாதை மற்றும் துறைமுக அணுகு வீதி விரிவாக்குவதற்கான திட்டமிடல்கள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2014 ஆண்டில் 170 மில்லியன் ரூபாவில் (நிதிசார் முன்னேற்றம்) பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. சேவைக் குழாய் வழியின் மேற்றளம் பதித்தல், பாதையின் அடையாளமிடுதல்கள் அடங்கலாக 0.75 கி. மீட்டர் வரை பாதை நிறைவு செய்யப்பட்டும் 2.5 கி. மீற்றர் அளவு இணைக்கும் படிவம் வரையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**காலி துறைமுகத்தில் உல்லாச படகுத்தளம் நிர்மாணித்தல்**

காலியில் அமைந்துள்ள வரலாற்று ரீதியான இடங்களுக்கு பெறுமதி சேர்க்கும் நோக்கில் நாட்டினுள் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் காலி துறைமுகம் சுற்றுலா துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. துறைமுகம் நோக்கி பெருந்தொகையிலான உல்லாசப் படகுகளை கவருவதற்கும் சுற்றுலாத் துறையின் மேம்பாடு தொடர்பில் அங்கிருக்கும் துறைமுக நிலத்தினுள் சம்பந்தப்பட்ட துணைச் சேவைகள் / வசதிகளுடன் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகள் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

160 மீட்டர் நீளத்துக்கு இரும்பு பட்டிகளை அடித்தளமிட்டு மேடைச் சுவர் அமைத்தல், 50 மீட்டர் நீளத்தில் கொங்கிறீட் கற்களைப் பரப்பி தடுப்புச் சுவர் அமைத்தல், முனையத்தில் கற்களை பரப்பி தார் இடுதல் உள்ளடங்கலான தேவைப்படும் சேவைகள், 95 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது..

62 மில்லியன் ரூபா ஆகுசெலவில் தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் துறைமுகத் தடாகம் 3.0 மீட்டர் வரை அகழ்தல் தொடர்பில் வெற்றிகர ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டு அதன் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஒலுவில் துறைமுக செய்திட்டம்**

**காணிகளைக் கைப்பற்றுதல் மற்றும் நஷ்டஈடு வழங்குதல்**

துறைமுக அபிவிருத்தி தொடர்பில் கைப்பற்றப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குதல் மற்றும் காணிகளை கைப்பற்றும் பணிகளை நிறைவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட பகுதிகளுடன் ஒத்துழைப்போடு இப்பகுதி பணிகளை மேற்கொள்கின்றது.

2014 ஆண்டில் உடன்பாட்டிற்கு வரப்பட்ட தொகையான ஒரு பார்ச்சஸூக்கு தலா ரூபா 30,000/= வீதம் 19 காணி 42.5 மில்லியன் ரூபா உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்டன.

**அபிவிருத்தி செய்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் விலைகோரல் ஆவணங்களினதும் கணிப்பீட்டு பத்திரங்களினதும் தயாரிப்புப் பணி முடிவடைந்துள்ளது.**

- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கும் செய்திட்டத்துக்கான விலைகோரல் பத்திரங்களை தயாரித்தல்.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் பேலியகொட கப்பற்சரக்கு முனையத்தை நிர்மாணிப்பதற்கு கொங்கிறீட் முன்வார்ப்பு பாகங்கள் / சீமெந்து கற்கள் உற்பத்தி செய்தல் மற்றும் வழங்குதல்.
- ஒலுவில் கடற்கரைப் பகுதியின் மண் தொடர்பிலான துணிக்கைகளின் நகர்வுகள் தொடர்பில் விரிவான ஆய்வை மேற்கொள்வதற்கு சர்வதேச ஆலோசனைகளைப் பெறுவதிலான விலைகோரல் ஆவணங்களை தயாரித்தல்.

**பின்வரும் திட்டமிடல்கள், வரைதல்கள் மற்றும் ஒப்படைப்புகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன**

- கொழும்பு துறைமுக உள்ளக பாதை 0+840 சங்கிலியிலிருந்து 1+260 சங்கிலி மற்றும் சங்கிலி 2+460 வரை விரிவாக்குவதற்கான வடிவமைப்பு
- தடைதாண்டும் வாசல்கள் மற்றும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் கப்பல்களுக்கான எண்ணெய் களஞ்சியத் தொகுதிக்கான வாசல் அமைவின் வடிவமைப்பு
- காலியில் மீன்பிடித் துறைமுகத்தின் உத்தேச புதிய துறைமேடையின் வடிவமைப்பு
- கொழும்பு 15, வோல்ஸ் ஒழுங்கையில் 69 ஆம் இலக்கத்தில் அமைந்திருக்கும் கொழும்பு எண்ணெய் களஞ்சியக் கட்டடத்துக்கான அமைவு ரீதியான கட்டிட வடிவமைப்பின் திட்டமிடுதல்கள்
- மின்சார உப நிலையம் III வேலைத்தளம் விரிவாக்குதலின் வடிவமைப்பு
- கொழும்பு துறைமுக பிரதேசங்களில் இருக்கும் உண்டிச்சாலைகளை மீளமைப்பதற்கான வரைதல்களை தயார் செய்தல்
- வழிகாட்டி நிலையத்தின் உத்தேச இறைக்கும் அறையின் வடிவமைப்பு
- புதிய இடத்துக்கு கொண்டு செல்லப்பட்ட இல: 07 இன் வலய பாதுகாப்புப் பிரிவின் ஓய்வறைக்கு சுருள் வடிவ ஏறுபடி அமைப்பதற்கான வடிவமைப்பு
- கொச்சிக்கடை பிரதேசத்தில் உத்தேச எரிபொருள் நிரப்பு நிலையத்தின் வடிவமைப்பு.
- சமர்ஹில் பிரதேசத்தில் உத்தேச எரிபொருள் நிரப்பு நிலையத்தின் வடிவமைப்பு.

**வளவுகள் மற்றும் பூகோள தகவல் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய அனைத்து அசையாத/ காணிகள் மற்றும் கட்டடங்களை முகாமைத்துவம் செய்தல் வளவுப் பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு நாடு பூராகவும் 8000 ஏக்கர் நிலப் பிரதேசங்கள் சொந்தமாகவுள்ளதுடன் இதில் 500 ஏக்கர் நிலம் கொழும்பு துறைமுகத்தினுள்ளும் சுற்றுப்புறத்திலும் அமைந்துள்ளது. சுமார் 75 இடங்கள் வெளி நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 2014 ஆண்டில் குத்தகை வாடகையாக 559.4 ரூபா மில்லியன் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஈட்டிக்கொள்ள முடிந்துள்ளது. .

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்களைப் பாதுகாக்கும் வகையில் கூடிய வாடகையுடனான 13 உடன்பாடுகள் வளவுப் பிரிவினால் ஏற்படுத்தப்பட்டன. இதற்கிடையில் 2012 ஆண்டின் புதிய சுற்றுநிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைக்கேற்ப வெற்றிடமான இலங்கை துறைமுக அதிகாரசபையின் வீடுகளை ஊழியர்களுக்கு ஒதுக்கி கொடுக்கக் கூடியதாக இருந்தது.

## கடலகம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து மிதக்கும் கலங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் இப்பகுதிக்குரிய பிரதான பொறுப்பாகும். கப்பலோட்டப் பணிகள், இயக்கம், சிவில் பொறியியல் பராமரிப்புகள் மற்றும் தமது கையாளல்களுக்கு பாதுகாப்புப் பிரிவிற்கு

போதுமானளவு மிதவைக் கலங்கள் வழங்குவதும் பாதுகாப்புப் பகுதியில் பயன்படுத்தப்படும் வெளியே பொருத்தப்படும் என்ஜின்களைக் கொண்ட படகுகளின் பராமரிப்பும் கடலகப் பகுதியின் பொறுப்பாகும்.

அதேபோன்று மொத்தத்தொகை கப்பற்சரக்குகளைக் கையாள்வதற்கு இப்பகுதிக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதும் இப்பிரிவின் பொறுப்புக்களில் அடங்கும். கேஸ் அடுப்புகள், சோறு சமைக்கும் அடுப்புகள், அலுமீனியப் பாத்திரங்கள் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் சமையலறையின் உபகரணங்களின் பராமரிப்புகளும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சறுக்கு வழிகளின் பராமரிப்புகளும் இயக்கங்களும் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன. கடலகப் பகுதி இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் இந்த ஆண்டினுள் இப்பிரிவுகளினால் அடையப்பெற்ற செயற்பாடுகள் பின்வருமாறு

**கடலகப் பிரிவு I - மீளமைக்கும் பொறியியல் பிரிவு**

துறைமுகத்தின் அனைத்து நங்கூரமிடல் பணிகளிலான இழுவைக் கலங்கள், “மேக” தீயணைப்புக் கலம், “சேருவில” பயணிகள் கலம் , இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேறுவாரிக் கலங்கள் மற்றும் வெளியே என்ஜின் பொருத்தப்படும் சகல கலங்களினது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்பில் கடலகப் பிரிவு 01 கீழுள்ள மீளமைக்கும் பொறியியல் பிரிவு பொறுப்பாகவுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் 05 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள், திருகோணமலை துறைமுகத்தின் 02 நங்கூரமிடலின் கலங்களும், காலி, காங்கேசன்துறை மற்றும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகங்களில் தலா 01 நங்கூரமிடல் பணிகளிலான கலங்களின் இயக்கங்களுக்கான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு இந்த மிதவைக் கலங்களுக்கான லொயிட் பதிவேட்டு வகையீடு சோதனை தேவைப்பாடுகளுக்கேற்ப இயந்திர உபகரணங்களின் பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டினுள் நீரின் கீழ் சேறுவாரும் “ஹங்ஸகாவா” மற்றும் சேறு உறிஞ்சும் “தியகொவுலா” எனும் கலங்கள் இப்பிரிவினால் சிறந்த கையாளல் நிலையில் பேணிச் செல்லப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்பு, கடலகம் மற்றும் சிவில் பொறியியல் பகுதிகளினால் பயன்படுத்தப்படும் என்ஜின் வெளியே பொருத்தப்படும் அனைத்து படகுகளினதும் பழுதுபார்த்தல் மற்றும் அன்றாட பராமரிப்பு பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாண்டினுள் “கோடயிம்பர” மற்றும் “தியகொவுலா” இழுவைக் கலங்கள் உலர் தடாகத்திற்கு எடுக்கப்படுவது உள்ளடங்கலான பிரதான பழுதுபார்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. தடாக சோதனைக்குப் பதிலாக நீரியல் சோதனை நடாத்தப்பட்டு அனைத்து கலங்களும் ஒரே வகையில் பேணப்பட்டன.

நீண்ட காலமாக செய்யப்பட வேண்டியிருந்த எம்.ரீ.ராஜா கலத்தின் பழுதுபார்ப்பு பணிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணியாளர்களின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டதோடு பிரதான என்ஜினினது பழுதுபார்ப்பு வேலையும் முடிவடையும் தறுவாயில் உள்ளது.

**பொறியியல் துறைமுக கலப் பிரிவு**

வழிகாட்டி லான்ச்கள், நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் மற்றும் பொதுவாக பயன்படுத்தப்படும் லான்ச்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகளுக்கு இப்பிரிவு பொறுப்பாக இருப்பதோடு கடலகப் பகுதியின் இயக்க தேவைப்பாடுகளை பொறியியல் துறைமுக கலப் பிரிவினால் நிறைவேற்றக் கூடியதாகவும் இருந்தன.

இவ்வாண்டினுள் “வழிகாட்டி 13” ,”வழிகாட்டி 12” போன்ற கலங்கள் பொறியியல் துறைமுக கலப் பிரிவினால் மீளமைக்கப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய அனைத்து வழிகாட்டி, நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் மற்றும் சறுக்கு வழி கலங்களினது அன்றாடம் செய்யப்பட வேண்டிய பராமரிப்புகள் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டதோடு “அசோக்க” கலத்திற்கான புதிய என்ஜின் மற்றும் உந்துகை தொகுதியும் பொருத்தப்பட்டன.

வழிகாட்டி லான்ச்கள், நங்கூரமிடல் பணிகளிலான கலங்களின் வகையீடு சோதனைப் பணிகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**கடலகப் பிரிவு II - கடலக நிர்மாணப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களினது சகல மரத்திலான மற்றும் பைபர் கிலாஸிலான பழுதுபார்த்தல்களுக்கு பிரதானமாக இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் லான்ச்களினதும், நீர்மூழ்கிப் படகுகளின் மோதல் தடுப்புகளினதும் மர வேலைகள் , கலங்களினது தண்டுப் பகுதிகளினது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து ஜீஆர்பீ படகுகளினதும் மரத்திலான தண்டுகளைக் கொண்ட லான்ச்களினது பைபரினால் மூடிய பாகங்களினதும், பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தன கடலகப் பகுதியினால் பயன்படுத்தப்படும் நங்கூரக் கலங்களின் மரத்திலான தளபாடங்களின் பழுதுபார்ப்புகள், ,அடைப்புப் பலகை (Paneling) வேலைகள் , மோதல் தடுப்புகளின் பழுதுபார்ப்புப் பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டினுள் எம்.ரீ. மஹசென் கலம் தொடர்புபடும் 600 தொன் சறுக்கு வழியிலும் 03 மற்றும் 02 சறுக்கு வழிகளிலும் மூன்று கையாளல்கள் மேற்கொள்ளப்பட்டன. பல சிறிய படகுகளினது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. நங்கூரமிடல் பணிகளிலான கலங்களினதும் லான்ச்களினதும் பிரதான பழுதுபார்ப்பு நடவடிக்கைகளும் இப்பிரிவினால் செய்து முடிக்கப்பட்டன.

**கப்பற்சரக்கு கலப் பிரிவு**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் இழுவைக் கலங்கள், மோட்டார் லான்ச்கள், தண்ணீர் வத்தைகள், தட்டு வத்தைகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு தொடர்பில் இம்முனையம் பொறுப்பு வகிக்கின்றது. அத்தோடு இக்கலங்களின் துருப்படிவுகள் அதிக விசையுடன் நீக்கப்பட்டு மை பூசும் வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இயக்கப்பகுதியின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள கலங்களின் தேவைப்பாடுகளை இம்முனையத்தினால் நிறைவேற்றக்கூடியதாக இருந்தன.

ஆண்டினுள் இயக்கப் பகுதி, கடலகம், பாதுகாப்பு மற்றும் பொறியியல் பகுதிகள், காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் மற்றும் ஏனைய வெளி நிறுவனங்களினால் வேண்டப்பட்ட பல்வேறு அளவிலான திரைச் சீலைகள் , கன்வஸ் மூடு சீலைகள் இப்பிரிவினால் செய்யப்பட்டு வழங்கப்பட்டன. கைவண்டிகள் , குப்பை வண்டி, தள்ளுவண்டிகளும் மற்றும் பல்வேறு வகையிலான வண்டிகளின் பழுதுபார்ப்புகளும் செய்யப்பட்டதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளினால் வேண்டப்பட்ட சமையலறை உபகரணங்கள், அலுமீனியப் பாத்திரங்கள், கைக் கருவிகளின் உற்பத்தி மற்றும் பழுதுபார்ப்புகளுக்கு மேலதிகமாக குழாய் உற்பத்தி மற்றும் சில பழுதுபார்ப்புகளும் இம்முனையத்தினால் நிறைவேற்றப்பட்டன.

**பேரை முனையம்**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கு கப்பற்சரக்கு வத்தைகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகள் இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். ஆண்டினுள் கப்பற்சரக்கு மற்றும் தண்ணீர் வத்தைகளின் உருக்கிலான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஜய கொள்கலன் முனையத்தின் டேலர்களின் துருப்படிவுகள் நீக்கப்பட்டு மை பூசப்பட்டன. ,.

**புதிய அபிவிருத்தி பணிகள்**

ஏனைய கடலக ஆளணிகளுடன் மீளமைக்கும் பிரிவை வேறு இடத்துக்கு கொண்டு செல்லப்படும் பணி நடைபெற்று வருகின்றது. பேரை முனையம் உட்துறைமுகத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றது. மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு புதிய நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் மற்றும் வழிகாட்டிக் கலங்களை பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடலகப் பொறியியல் பகுதியானது அவர்களின் சேவைகளை எதிர்பார்த்திருக்கும் அனைத்து பகுதிகளுக்கும் தேவையான சேவைகளை சிறப்பாக வழங்கியுள்ளது. இருக்கும் வரையறுக்கப்பட்ட வசதிகளோடு சகல ஆளணிகளினதும் ஊழியர்களினதும் அர்ப்பணிப்பு காரணமாக இப்பகுதியினால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களினது அனைத்து கையாளல் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்து அடையப்பெற்ற மேலமொரு வெற்றிகரமான ஆண்டொன்றாக இது அமைந்ததென்பதை நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

## இயந்திரப் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கப்பற்சரக்குகளின் கையாளல்களுக்கு உபகரணங்களை முறையாக பராமரித்தல் மற்றும் திட்டமிடுதல், கொள்கலன்களைக் கொண்ட மற்றும் மரபுரீதியான கப்பற் சரக்குகள் கையாள்வதற்கு மாதிப்பேற்படுத்தாத வண்ணம் இந்த உபகரணங்களை பொதுமான அளவில் வைத்துக்கொண்டு பேணிச் செல்வது இயந்திரப் உபகரணப் பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்பாகும்.

2014 ஆண்டில் உபகரணங்களின் சடுதியான அல்லது எதிர்பாராத தடங்கல்களுக்கு ஈடுகொடுப்பதற்கான அவசர தீர்வு வழங்கும் முறையுடனான திட்டமிடப்பட்ட சீர்செய்தலின் பராமரிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு பின்வரும் விடயங்கள் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் கையாளல் உபகரணங்கள் வெற்றிகரமாக பேணிச்செல்லப்பட்டன.

- கப்பலிலிருந்து கரை வரையிலான 23 கொள்கலன் பாரமுயர்த்திகள் (STS)
- இறப்பர் டயர்கள் பொருத்தப்பட்ட 67 கென்ட்ரி பாரமுயர்த்திகள் (RTG)
- பீலிகள் மீது நகரும் 04 கென்ட்ரி பாரமுயர்த்திகள் (RMG)
- கொள்கலன் கையாளும் 17 போக்லிப்ட் வண்டிகள்
- 115 போக்லிப்ட் டிரக் வண்டிகள் (2.5 தொன் இருந்து 10 தொன் வரை)
- 180 பிறைம்மூவர் வண்டிகள் மற்றும் முனைய டிரக்டர்கள்
- 200 டிரேலர்கள்
- 04 டறோபார் டிரக்டர்கள்
- நடமாடும் பாரமுயர்த்திகள், வாப்பு மின்சார, மிதவை மற்றும் மேலால் நகரும் பாரமுயர்த்திகள் மற்றும் எலிவேடர்ஸ் 78
- கப்பற்சரக்குகளின் கையாளல்களுக்கு தடையில்லாது மின்சாரம் வழங்குவதற்கு எதிர்பார்ப்பில் வைக்கப்படும் 04 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள்
- புகையிரத்தை வெவ்வேறு பாதைகளுக்கு நகர்த்தும் 03 புகையிரத வலு என்ஜின்கள்
- 685 மோட்டார் வண்டிகள் (பேரூந்து,லொறி,வேன், டபிள் கப், கார்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள்)

2014 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் உச்ச கொள்கலன் கையாளல் செயலாற்றுகையை அடையப்பெற்றது. திட்டமிடப்பட்ட உபகரணப் பராமரிப்பு வேலைத்திட்டத்தின் நேரடி பயனாக 90% உபகரணங்களைக் கொண்டிருந்தமை இந்த நிலை அடையப்பெற்ற காரணிகளில் ஒன்றாகும்.

**2014 ஆண்டினுள் இயந்திர பொறியியல் பகுதியின் பிரிவுகளினால் நிறைவு செய்யப்பட்ட பணிகளின் விபரம் பின்வருமாறு**

- திட்டமிடப்பட்ட பராமரிப்பு வேலைத்திட்டத்தின் அங்கமாக கப்பலிலிருந்து கரை வரையிலான பாரம்தூக்கிகள் , பீலிகளில் நகரும் கென்ட்ரி பாரம்தூக்கிகள் மற்றும் பரிமாற்ற பாரம்தூக்கிகள் தொடர்பிலான 101 பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

- என்ஜின்களினது நிலையை பரீட்சித்தல் மற்றும் 69 அமுக்க இயந்திரங்கள் உள்ளடங்கலாக திட்டமிடப்பட்ட பராமரிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் பிறைம்மூவர் வண்டிகள், முனைய ட்ரக் வண்டிகள், கொள்கலன்களை கையாளும் போக்லிப்ட் ட்ரக் வண்டிகளின் 104 பணிகள் நிறைவு செய்யப்பட்டன. மொத்தமாக 13 அவசர பராமரிப்பு வேலைகளும் நிறைவேற்றப்பட்டன.

- இயந்திர பொறியியல் பகுதியினால் போக்லிப்ட் ட்ரக் வண்டிகள், கட்டுமான இயந்திரங்கள், டிரேலர்கள் அனைத்து பாரம்தூக்கிகள் உள்ளடங்கலான இயந்திரங்கள் திருப்திகரமான முறையில் பேணிச் செல்லப்பட்டன அன்றாட பராமரிப்புகளும் 4,094 பழுதுபார்ப்பு வேலைகளும் இதனுள் அடங்கும்

- குழாம் வாகனங்களின் (பேரூந்து,லொறி,வேன், டபிள் கப், கார் முச்சக்கர மற்றும் மோட்டார் சைக்கிள்கள்) பராமரிப்புகள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் புகையிரத சன்டின் வலு என்ஜின்களினது பராமரிப்பு வரை இயந்திர பொறியியல் பகுதியின் பொறுப்புக்கள் பரந்து செல்கின்றன. இக்காலப் பகுதியினுள் நிறைவு செய்யப்பட்ட அன்றாட பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகளின் எண்ணிக்கை 6,124 ஆகும்.

- இப்பகுதியின் மேற்பார்வையில் கீழ் “சமர்ஹில்” பகுதியின் எண்ணெய்க் களஞ்சிய தொகுதியின் பணிகள் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டன.

## இயந்திர வேலைகள்

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து உருக்குப் பாகங்கள் பொருத்தும் பணிகளில் இயந்திர பொறியியல் பகுதி பொறுப்பாகவுள்ளது. ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களில் கொள்கலன்களைக் கையாளும் பாரம்தூக்கிகள், கொள்கலன்களைக் கொண்டு செல்லும் சிறிய டிரேலர்களுக்குரிய சகல அடிச்சட்டப் பாகங்களின் பழுதுபார்ப்புகள், நங்கூர பணிகளிலான கலங்கள், வழிகாட்டி, சேறுவாரி மற்றும் இழுவைக்கலங்களுக்குரிய அனைத்து பழுதுபார்ப்புப் பணிகள், இலங்கை துறைமுக அதிகார சபையின் ஏனைய உருக்கு அமைவுகளின் பழுதுபார்ப்பு பணிகளில் முக்கிய செயற்பாட்டுப் பகுதியாக இது செயற்படுகின்றது. கடலகக் கலங்கள் மற்றும் கப்பல் சரக்குகளைக் கையாளும் உபகரணங்களுக்கு தேவையான புதிய உதிரிப்பாகங்களை இயந்திர ரீதியாக உற்பத்தி செய்வதிலும் சீர்படுத்தும் பணியிலும் இப்பகுதி ஈடுபட்டுள்ளது. மேலும் சங்கிலிகள் மற்றும் கொழுக்கிகளின் பரீட்சிப்புகள், கையாளல் தேவைப்பாடுகளுக்காக அள்ளும் வாளி போன்ற உபகரணங்களினது பராமரிப்புகள் தொடர்பிலும் இப்பகுதி பொறுப்பாக இருக்கின்றது.

கொழும்பு எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியின் அபிவிருத்தித் திட்டங்களும் இப்பிரிவின் பொறுப்புக்களில் அடங்கும்.. இதன்படி கொழும்பு துறைமுகத்திலிருந்து கொழும்பு எண்ணெய் களஞ்சியத் தொகுதி வரை தற்போது இருக்கும் எண்ணெய்க் குழாய்களுக்குப் பதிலாக புதிதாக பெற்றொலிய எண்ணெய்க் குழாய்ப் பாதை பதிக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கூடிய தொன் பெற்றோலிய உற்பத்தியை அதிக விசையுடன் கூடியதாக மாற்றும் பொருட்டு இந்த எண்ணெய்க் குழாய் தொகுதியானது 12 அங்குல விட்டம் கொண்ட இரு குழாய்களையும் 10 அங்குல விட்டம் கொண்ட ஒரு குழாயினையும் கொண்டிருக்கும். 2014 ஏப்ரல் மாதத்தில் இத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது

**இவ்வாண்டினுள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இப்பகுதியினால் பின்வரும் பிரதான பணிகளும் நிறைவேற்றப்பட்டன.**

- கிழக்கு கொள்கலன் முனையத்தின் வெளிச்சக் கம்பத்தின் அத்திவாரத்துக்கான சாரம், ஆணிகள் மற்றும் நட்டுக்களை சீர்செய்தல்.
- கிழக்கு கொள்கலன் முனையத்தின் குளிராக்கப்பட்டுள்ள கொள்கலன் தட்டுகளுக்கான கதவு மற்றும் அத்திவார ஆணிகள், தட்டுக்களை சீர்செய்தல்.
- மஹசென் மற்றும் சிங்ஹபாகு இழுவைக் கலங்களின் தண்டுப்பகுதிகளினதும் கட்டமைவுகளினதும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளல்.
- சிவில் மற்றும் பொறியியல் பகுதிகளுக்குரிய குப்பைகளை ஏற்றிச் செல்லும் 03 வண்டிகளை பழுதுபார்த்தல்.
- மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் 1100 மீட்டர் நீளமான வேலியை அமைத்தல்.
- தெவுந்தரை வெளிச்சவீட்டின் பழுதுபார்த்தல் பணிகள்.

- புதிய சமையலறைக்கான வாகனத் தரிப்பிடம் அமைத்தல்.
- தியகொவுலா சேறுவாரும் கலத்தின் தண்டுப்பகுதி மற்றும் குழாய் பழுதுபார்த்தல்.
- ஜய கொள்கலன் முனையத்தின் 02/ 03 நிறுக்கும் பாலத்தின் பிரதான பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளல்.
- ஜய கொள்கலன் முனையத்தின் கென்ட்ரி பாரம்தூக்கி 01 இன் றொலி பீலிகளின் பழுதுபார்த்தல் பணிகள்.
- J-12 மற்றும் J-13 கென்ட்ரி பாரம்தூக்கிகளின் உருக்குப் பாகங்களின் பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல்.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிமாக பிரதான உருக்கிலான பாகங்களின் 60 க்கு மேற்பட்ட பழுதுபார்த்தல்கள், பிரதான இயந்திர உபகரணங்களின் 25 க்கு மேற்பட்ட வேலைகள், பல்வேறு வகையிலான 752 பொருத்தும் பணிகள் , இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளுக்குரிய 32 வார்ப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## மனிதவள அபிவிருத்தி

நிறுவனத்தின் நோக்கங்களை செயற்திறனாகவும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றப்படுவதற்கு பயனான ஊழியர் படையணியைப் பேணிச் செல்வதில் மனிதவளப் பகுதி பிரதான பங்கினை வகிக்கின்றது. மனிதவள முகாமைத்துவ திட்டம் ஊழியர் படையணியை பராமரித்தலில் தேவைப்படும் ஆவணமாக விளங்குகின்றது.

முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் அங்கீகார ஆளணித் தொகை 9,990 ஆகும். நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத, தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத தரங்களின் பணியாளர்கள் அடங்கலாக 2013 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிரந்தர ஆளணித் தொகை 9,493 ஆக இருந்தது. கொழும்பு துறைமுகத்தில் 8,700 பணியாளர்களும் காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் முறையே 373 மற்றும் 420 பணியாளர்களும் இருந்தனர்.

2014 ஆண்டினுள் நிரந்தர அடிப்படையில் நிறைவேற்று தரத்தில் 21 பெரும் நிறைவேற்று அல்லாத தரத்தில் 48 மாக 69 பேர் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டவாறு ஊழியர்களின் செயலாற்றுகை, வருகை தரல் மற்றும் நடத்தையின் அடிப்படையில் அநேக ஊழியர்கள் அண்மித்த உயர் சம்பள முனைகளில் வைக்கப்பட்டனர் . மேலும் நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத மற்றும் தொழில்நுட்ப தரங்களுக்கு உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு திறனடிப்படையில் அவர்களுக்குரிய பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன. ஒரு பகுதியினர் அங்கீகார ஆளணியின் எதிர்கால தேவைப்பாடுகளுக்காக காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டனர்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் உதவியோடு பல்வேறு துறைகளைச் சேர்ந்த 675 ஊழியர்களுக்கு தேசிய தொழில்சார் தகைமையின் 2,3 மற்றும் 4 ஆம் மட்டங்களின் (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களினது மனிதவள தேவைப்பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றிக் கொள்வதற்கு மனிதவள சேவை நிலையம் 2014 அக்டோபர் 16 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நிர்வாகப் பணிகள் பொதுவான வரையறையொன்றினுள் மேற்கொள்ளப்படுவதற்கு பொறியியல் பகுதியின் நிர்வாக நடவடிக்கைகள் மனிதவள பகுதியுடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆண்டினுள் மொத்தமாக 78 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதோடு விபத்துக்குள்ளான வேலையாட்களின் நஷ்டஈடுகளுக்கு ரூபா 100,000/= செலுத்தப்பட்டுள்ளது 35 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்ற 365 ஊழியர்களுக்கு அவர்களின் சேவைகளை பாராட்டும் வண்ணம் தங்கப் பவுண்களும் வழங்கப்பட்டன.

# சட்டம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட அலுவலர்கள், 1979 இன் 51 ஆம் இலங்கை துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விசேட துறைமுகங்களான கொழும்பு, காலி, திருகோணமலை, மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம், காங்கேசன்துறை மற்றும் பருத்தித் துறை ஆகிய துறைமுகங்களின் சட்ட ஆலோசகர்களாக இருப்பதோடு, அவர்கள் பணிப்பாளர் சபை, பணிப்பாளர்கள்,பகுதித் தலைவர்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்

**ஆலோசனைகள்**

2014 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்திற்கு 100 க்கு மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நகல் அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையினைத் தரப்பினராகக் கொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணை முறிகள், உறுதிகள், (கைம்மாற்றல்கள்), குத்தகைகள், பிரகடணங்கள், அடகுவைத்தல்கள் போன்றவை தொடர்புபடுதல் சட்டப் பகுதிக்குரிய பணிகளில் அடங்கும்.

**ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் மற்றும் பிணைமுறி, உறுதிகள்**

2014 ஆண்டில் 57 குத்தகை உடன்படிக்கைகள், உறுதி கைம்மாற்றல்கள் 02, உடன்படிக்கைகள் 02 (PEAGLE 04) ("பீகல் 04" 4000 கியுபிக் மீட்டர் நீரின் கீழ் சேறு உறிஞ்சும் கலம் வழங்கும் ஒப்பந்தம் மற்றும் கிழக்கு கொள்கலன் முனையத்தின் கையாளல் உபகரணங்களுக்கான ஒப்பந்தம்) மற்றும் ஒரு கடன் உடன்பாடு தொடர்பிலான பணிகள் சட்டப்பகுதியினால் அமுல்படுத்தப்பட்டன. இந்த சட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் பிணை ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளின் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- ✦ ஊழியர்களின் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கான சம்பளமற்ற விடுமுறை தொடர்பிலான 05 பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள்.
- ✦ இலங்கையினுள்ளும் வெளிநாடுகளிலும் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பிலான 54 பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள்.
- ✦ முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 40பிணை /ஒப்பந்த உடன்பாடுகள்.
- ✦ சுயவிருப்பில் ஓய்வு பெறும் நடைமுறையின் மீதான 01 பிணை ஒப்பந்தம் -

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தரப்பினராகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் வெளி சட்டத்தரணிகளின் உதவியோடு சட்டப் பகுதியின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

**வழக்குத் தாக்கல்**

2013 டிசெம்பர் இறுதி வரையில் மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதவான் நீதிமன்றம், தொழில் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் நீதிமன்றம், ஆலாட்சி அதிகாரி, ஊழியர் நட்டஈடு ஆணையாளர், தீர்ப்பு மையங்கள் போன்றவற்றில் 282 வழக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

2014 ஆண்டினுள் புதிதாக 56 வழக்குகள், முறைப்பாடுகள், விண்ணப்பங்கள் (அதாவது உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றம் நீதவான் நீதிமன்றம், தொழில் ஆணையாளர், மனித உரிமை ஆணைக்குழு, தொழில் திணைக்களம், தீர்ப்பளித்தல் மற்றும் தொழிலாளர் நட்டஈட்டு விசாரணை சபை போன்றவற்றின் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதில் 11 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் மீதியானவை இலங்கை அதிகாரசபைக்கெதிராகவும் தொடரப்பட்டிருந்தன.

மொத்தமான 338 வழக்குகள் 27 வழக்குகளின் பணிகள் 2014 ஆண்டில் முடிவடைந்துள்ளன. இதில் 24 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராகவும் தீர்ப்புகள் வழங்கப்பட்டும் 12 வழக்குகள் தீர்க்கப்பட்டும் ஏனைய 05 வழக்குகள் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

2014 டிசெம்பர் 31 வரையில் 311 வழக்குகள்/ முறைப்பாடுகள்/ விண்ணப்பங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் முடிவுறாத நிலையில் உள்ளன.

**மீயுயர் நீதிமன்ற வழக்குகள்**

2013 ஆண்டு இறுதி வரை 12 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2014 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக தாக்கல் செய்யப்பட்ட 05 வழக்குகளும் அடங்கலாக 17 வழக்குகளில் 2014 ஆண்டினுள் இதில் 02 வழக்குகள் முடிவடைந்து அதில் 02 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் தீர்ப்பளிக்கப்பட்டன. 2014.12.31 ஆம் திகதி வரை 15 வழக்குகளின் பணிகள் மீயுயர் நீதிமன்றத்தில் முடியுறாத நிலையில் இருந்தன.

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

2013.12.31 வரை 15 வழக்குகள் தீர்ப்பளிக்கப்படாதிருந்தன. 2014 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 05 வழக்குகள் தொடரப்பட்டன. மொத்த 20 வழக்குகளில் 04 வழக்குகள் முடிவடைந்தன. இதில் 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 01 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராகவும் தீர்ப்பளிக்கப்பட்டன. 2014.12.31 வரை 16 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தன.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

2013.12..31 வரையில் உயர் நீதிமன்றில் 10 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன. 2014 ஆண்டினுள் புதிதாக 06 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மொத்த 16 வழக்குகளில் 04 வழக்குகள் முடிவடைந்துள்ளன. முடிவடைந்த 04 வழக்குகளில் 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சாதகமாகவும் 01 வழக்கு எதிராகவும் தீர்ப்பளிக்கப்பட்டன. 2014.12.31 வரை உயர் நீதிமன்றில் 12 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன.

**மாவட்ட நீதிமன்ற வழக்குகள்**

2013.12.31 வரை 11 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2014 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 04 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. (தாய்வானில் தொடரப்பட்ட வழக்கு அடங்கலாக 04 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்க்கப்பட்டருந்தன. 2014.12.31 வரை 09 வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தில் முடிவுறாதிருந்தன.

**நீதவான் நீதிமன்ற வழக்குகள்**

2013.12.31 ஆம் திகதி வரையில் நீதவான் நீதிமன்றில் 06 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2014 ஆம் ஆண்டினுள் அரசாங்க விடுதிகள் (உரிமை கைப்பற்றல்) சட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய விடுதிகளில் சட்டவிரோதமாக வசிப்பவர்களை அகற்றுதல் மற்றும் அரசாங்க காணிகள் (உரிமை கைப்பற்றல்) சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கலாக புதிதாக 09 வழக்குகள் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த 15 வழக்குகளில் 05 வழக்குகள் 2014 ஆண்டில் முடிவடைந்தன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளின் பணிகளுக்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களை தரப்பினர்களாகக் கொண்ட சந்தர்ப்பங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள நீதவான் நீதிமன்றங்களினால் கிடைக்கப்பெறும் நீதிமன்ற அழைப்பாணைகள் தொடர்பிலும் சட்டப் பகுதியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2014.12.31 வரையில் நீதவான் நீதிமன்றங்களில் 10 வழக்குகளின் பணிகள் முடிவுறாத நிலையிலிருந்தன.

**தொழில் நியாய சபை வழக்குகள்**

2013.12.31 வரையில் தொழில் நியாயசபை நீதிமன்றில் தீர்க்கப்படாதிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 26 ஆக இருந்தது. 2014 ஆம் ஆண்டினுள் புதிதாக 05 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டன. தொழில் நியாய சபையின் 31 வழக்குகளில் 05 வழக்குகளின் பணிகள் முடிவடைந்தன. இதில் 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 02 வழக்குகள் விண்ணப்பதாரருக்கு சார்பாகவும் தீர்ப்பளிக்கப்பட்டன. மீதியான 2014.12.31 வரை 26 வழக்குகளின் பணிகள் தொழில் நியாய சபையில் முடிவுறாத நிலையிலிருந்தன.

**மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தொழிலாளர் பிணக்குகள் (தீர்த்தல் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஆலாட்சி அதிகாரியிடமும் ஊழியர் நட்ட ஈடு ஆணையாளரிடமும் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள்.**

2013 டிசெம்பர் 31 வரையில் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட 134 விண்ணப்பங்களினதும், தொழில் ஆணையாளரிடம் தீர்வு காணலுக்கான விண்ணப்பங்கள் 47 ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 17 முறைப்பாடுகளினதும் பணிகள் முடிவுறாத நிலையிலிருந்தன.

2014 ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் 13 புதிய விண்ணப்பங்களும் புதிதான தீர்வு காணல் தொடர்பில் தொழிலாளர் ஆணையாளரிடம் 10 புதிய முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டன..

2014 ஆண்டினுள் 01 மனித உரிமைகள் தொடர்பான 01 விண்ணப்பத்தினதும் தீர்வு காணல் தொடர்பான 02 விண்ணப்பங்களினதும் பணிகள் முடிவடைந்திருந்தன.

அதன்படி 2014.12.31 இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 146 விண்ணப்பங்களினதும், தொழில் ஆணையாளரிடம் தீர்வு காணலுக்கான விண்ணப்பங்கள் 53, ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட 17 முறைப்பாடுகளினதும் பணிகள் முடிவுறாத நிலையில் இருந்தன.

**தீர்வுகள்**

2014.12.31 வரையில் 02 வணிகப் பிணக்குகள் 04 கைத்தொழில் பணிகளின் தீர்வு காணல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தவற்றின் பணிகள் முடிவுறாதிருந்தன. 2014 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 01 கைத்தொழில் பிணக்கு முன்வைக்கப்பட்டது. இதன்படி 2014.12.31 வரை 05 கைத்தொழில் பிணக்குகள் மற்றும் 02 வர்த்தக தீர்வு காணலின் பணிகள் முடிவுறாதிருந்தன. (இலங்கை துறைமுக அதிகாரசபை தீர்வு காணல் நியாய சபைக்கெதிராக மேன்முறையீடுகளை முன்வைத்துள்ளதால் முடிவடைந்துள்ள 02 வர்த்தக தீர்வு காணலின் வழக்குகள் முடிவுறாத வழக்குகளாக) கருதப்படுகின்றன.

## நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

அதிகாரசபையின் ஊழியர்களுக்கு இப்பகுதியினால் நிதிசார் மற்றும் நிதிசாராத பல நலன்புரி வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வசதிகள் ஊழியர்களின் நலன்கள் கருத்திற் கொள்ளப்பட்டு அடிக்கடி திருத்தப்பட்டும் மேம்படுத்தப்பட்டும் 2014 ஆண்டில் உயர் நிலையில் நலன்புரி வசதிகள் வழங்கப்பட்டன. அவை விபரங்களுடன் பின்வருமாறு.

**பணியாளர்களுக்கான இலவச உணவு**

துறைமுக அதிகாரசபையில் முறை மாற்று அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பகல்/ இரவு உணவு பானம் போன்று தேனீர் மற்றும் தின் பண்டங்களும் அலுவலக ஊழியர்களுக்கு இலவசமாக பகல் உணவும் வழங்கப்படுகின்றன. இதற்காக 2014 ஆண்டில் 615.73 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

பகல் உணவு உணவு பெற்றுக்கொள்ளாத ஊழியர்களுக்கு வழங்கப்படும் ரூபா 80 ஐ 2014 சனவரி மாதத்திலிருந்து ரூபா 100 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**ஊழியர்களுக்கான சடுதி விபத்துக்கள் மற்றும் காப்புறுதித் திட்டம்**

2011 ஆண்டிற்கு முன்பிருந்த வைத்திய உதவித் திட்டம் 2011 ஆகஸ்ட் மாதம் 31 ம் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டது. இதன்படி முன்னர் இருந்த வைத்திய உதவித் திட்டத்தை விடக் கூடிய அனுகூலங்களைக் கொண்ட புதிய காப்புறுதித் திட்டம் 2011 செப்டெம்பர் மாதத்தில் செயற்படுத்தப்பட்டது இதன் கீழ் முன்னரை விட கூடிய அனுகூலங்களும் சடுதி விபத்தொன்றின் போது ஒரு மில்லியன் ரூபா கொண்ட காப்புறுதியும் கிடைக்கப்பெறுவதோடு இயற்கையான மரணம் ஏற்படுகையில் ஒரு இலட்சம் ரூபாவுக்கான காப்புறுதியும் உரித்தாகும். இதற்கு மேலதிமாக வெளிவாரியான வைத்திய சிகிச்சைகளுக்கு வருடாந்தம் ரூபா 7,500/= தொகை ஈடு செய்யப்படும். மேலும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைகள் பெறும் செலவினங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா காப்புறுதியும் உரித்தாகும். தனது சுய விருப்பத்தின் மீது ஊழியரொருவருக் தனது குடும்ப உறவினர்களை இக்காப்புறுதியினுள் சேர்த்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல் இதன் விசேடமாகும். இதற்கு தனது மனைவி அல்லது கணவன் தொடர்பில் வருடாந்தம் 2,300/= ரூபாவும் ஒரு பிள்ளைக்கு வருடாந்தம் 1,000/= ரூபாவும் செலுத்துதல் வேண்டும். மேலும் 2012 செப்டெம்பர் மாதம் 01 திகதியிலிருந்து இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இந்த காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி 2014/2015 ஆண்டிலும் இவ்வாறு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இக்காப்புறுதி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு இது தொடர்பிலான பங்களிப்பு கொடுப்பனவாக ரூபா 110,144,142/= தொகை தற்போது செலுத்தப்பட்டுள்ளது.

**வழிகாட்டிகளுக்கான காப்புறுதித் திட்டம்**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதி திட்டத்திற்கு மேலதிகமாக அதிகாரசபையின் கப்பலோட்ட பகுதியில் கடமையாற்றும் வழிகாட்டிகளுக்காக விசேட காப்புறுதி திட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு இதற்கு கப்பலோட்டப் பகுதியில் கடமையாற்றும் அனைத்து வழிகாட்டிகளுக்கும் இக்காப்புறுதித் திட்டத்தினை பெற்றுக் கொள்ளமுடியும்.

இக்காப்புறுதி திட்டமானது 2013/2014 ஆண்டிலிருந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்காப்பறுதி தொடர்பில் வழிகாட்டிகளிடமிருந்து 2014/2015 இல் சுமார் ரூபா 54,590/= அறவிடப்பட்டுள்ளதுடன் மீதித் தொகை துறைமுக அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்படும்.

**வீட்டுக் கடன் திட்டம்**

துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வீடொன்று வாங்குவதற்கு வீடொன்றை அமைப்பதற்கு, புதிதாக ஒரு பகுதியை சேர்ப்பதற்கு அல்லது வீடொன்றை அமைப்பதற்காக காணியொன்றை வாங்குவதற்கு ஆகக் கூடிய தொகையாக ஐந்து இலட்சம் ரூபா வரையிலான கடன் பெற்றுக்கொள்ளும் திட்டம் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஒத்துழைப்போடு செயற்படுத்தப்படுகின்றது. 6% சலுகை வட்டி விகிதம் அறவிடப்படுவதோடு வருடாந்தம் இதற்காக ரூபா 50,000,000/= ஒதுக்கப்படுகின்றது. இவ்வீட்டுக் கடன் திட்டம் தொடர்பில் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு 2014 ஆண்டில் ரூபா 9,525,000/= விடுவிக்கப்பட்டுள்ளது.

**புலமைப் பரிசில் திட்டம்**

அதிகாரசபையின் பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக மற்றும் க.பொ.த உ/த கல்வி பயில்வதற்கான இரண்டு புலமைப் பரிசில் திட்டம் நடைமுறையிலுள்ளது.

இதன்படி க.பொ.த உ/தரம் கற்பதற்காக மாதமொன்றுக்கு தலா ரூபா 750/= வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படுகின்றது. மீளாய்வுக்குட்படும் 2014 ஆண்டில் இப்புலமைப்பரிசில் தொடர்பில் ரூபா 4,572,000/= வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சா/தா பரீட்சையில் சித்திபெற்ற முறையே 246 மற்றும் 262 பிள்ளைகளின் க.பொ.த உயர் தரம் கற்பதற்காக முன்வைக்கப்பட்ட புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் தொடர்பில் அவர்களுக்குரிய நிதியுதவி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக கல்விக்காக தெரிவு செய்யப்படும் அதிகாரசபையின் ஊழியர்களினது பிள்ளைகளுக்கு வருடாந்தம் ரூபா 25,000/= குறித்த கற்கை ஆண்டுகளுக்கமைவாக ஆகக் கூடியதாக 05 வருடங்கள் வரை புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இப்புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 386 மாணவர்களுக்கு 2014 ஆண்டில் ரூபா 9,555,000/= வழங்கப்பட்டுள்ளது.

**நலன்புரி வண்டிகள்**

அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் அவர்களினது குடும் உறவினர்களுக்கும் உல்லாச மற்றும் மத வழிபாட்டு பயணங்களுக்கு சலுகை கட்டணத்தில் பஸ் வண்டிகள் பெற்றுக்கொடுக்கப்படுவதோடு ஊழியர்களின் மரணங்கள் தொடர்பில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இலவசமாக பஸ் வண்டியொன்று வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்பட முடியாத சந்தர்ப்பத்தில் ஆகக் கூடியதாக ரூபா 6,500/= செலவினம் ஈடுசெய்யப்படும்.

மேலும் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு அவர்களின் சேவை நிலையங்களுக்கு இலகுவாக செல்வதற்கு துறைமுகத்தினுள் இலவச போக்குவரத்து சேவை மீளாய்வுக்குட்படும் ஆண்டிலும் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்பட்டுள்ளது. 2014 ஆண்டில் நலன்புரி நடவடிக்கைகளுக்கு பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டதன் மூலம் அதிகாரசபை ரூபா 4,540,529/= வருமானம் ஈட்டியுள்ளது.

2014 ஆண்டில் நலன்புரி பஸ் வண்டிகளில் பயணம் செய்ததன் பின்னர் சுற்றுலா தொடர்பில் மீதமான பணம் மற்றும் எரிபொருளுக்காக செலவாகிய தொகை சுற்றுலா ஏற்பாடுகள் செய்த ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளத்துடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**விசேட விடுமுறை உரித்துக்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளல்**

நோயாளியாக அல்லது சடுதி விபத்தொன்றில் தமக்குரிய அனைத்து லீவுகளும் முடிவடைந்துள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் தகுதியான நிலைமைக்கு வரும் வரை வைத்திய ஆலோசனையின் பேரில் ஆகக் கூடியதாக 06 மாதங்கள் வரை அங்கீகார சம்பளமற்ற நலன்புரி விடுமுறை வழங்கப்படுகின்றது. 2014 ஆண்டில் இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற 85 விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு அதன்படி 3,451 நாட்களுக்கான அங்கீகார சம்பளமற்ற விடுமுறைகளும் 435 நாட்களுக்கான சம்பளமற்ற விடுமுறைகளும் பெற்றுக்கொடுக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டன.

**நலன்புரி உண்டிச்சாலைகள்**

அதிகாரசபையின் வளவினுள் அதிகாரசபையின் ஊழியர்கள் போன்று பல்வேறு விடயங்களுக்காக துறைமுகத்திற்கு வருகை தருவோரின் வசதி கருதி சலுகை விலையில் உணவு பானங்கள் வழங்கப்படுவதற்கு 15 உண்டிச்சாலைகள் நடாத்திச் செல்லப்படுகின்றன. வருடந்தோறும் விலைகோரல்கள் மேற்கொள்ளப்பட்டு குத்தகையாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். 2014 ஆண்டில் குத்தகையாளர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டதன் மூலம் ரூபா 7,825,279/= வருமானம் கிடைக்கப்பெற்றது.

**ஊழியர்களுக்கான ஞாபகார்த்த பரிசுகள் வழங்குதல்**

அதிகாரசபையின் சகல ஊழியர்களுக்கும் தமது 30 வருட சேவைக்காலம் பூர்த்தி செய்ததன் பின்னர் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுகின்றன பரிசுகள் வழங்கும் முறை முற்றாக மாற்றப்பட்டுள்ளது அதன்படி அதுவரை நடைமுறையில்லிருந்த பரிசுகளுக்கான சுற்றுநிருபங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஊழியர்கள் ஓய்வாற்றப்படும் போது நிறைவு செய்யப்படும் சேவைக் காலத்தை அடிப்படையாக வைத்து தங்கப் பவுண்களுக்கான உரித்து அவர்களுக்கு கிடைக்கப்பெறும். 30 வருடங்கள் நிறைவு செய்யப்படும் போது வழங்கப்படும் பரிசும் ஓய்வாற்றப்படும் போது

வழங்கப்படும் தங்கப் பரிசும் மாத்திரம் ஊழியர்களுக்கு உரித்தாகும். இதற்கமைய 40 வருடங்கள் நிறைவு செய்யும் போது அவர்களுக்கு வழங்கப்படும் விசேட பரிசு இதன் பின்னர் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. 30 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்த 301 ஊழியர்கள் இதற்கான தகுதியை பெற்றுள்ளனர்.

**கடலக நூதனசாலை**

துறைமுகம் மற்றும் கப்பலோட்டத் துறையின் வரலாற்றுக் காலங்களை சித்தரிக்கும் உருவ மாதிரிகள், விளம்பர பலகைகள் போன்று பழைய துறைமுக வளவினுள் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமாகியுள்ள இந்த நூதனசாலை துறைமுகங்கள் மற்றும் கப்பலோட்ட நடவடிக்கைகள் பற்றியதில் ஆர்வமுடையோருக்கும் பிரயோசனமுள்ள இடமாகும். 2011 ஆம் ஆண்டில் தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் உதவியோடு விசேட காட்சிகளின் பதாகைகள் பொருத்தப்பட்டுள்ளன. கட்டணமின்றி இதனைப் பார்வையிடுவதற்காக மு.ப.10.00 இருந்து பி.ப.07.00 மணி வரை திறந்து வைக்கப்படும். இந்நிலையத்தில் புத்தகங்கள், பிரசுரங்கள், வரைந்த ஓவிய அட்டைகள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் 2014 ஆண்டில் 354,030/= வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

**நலன்புரி மற்றும் விளையாட்டரங்க வசதிகள்**

நலன்புரி நிலையங்களுக்கு அதிகாரசபையினால் தலா ஒரு விளையாட்டரங்கம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக துறைமுக அதிகாரசபையின் விளையாட்டு சங்கத்திற்கு விளையாட்டு மேம்பாட்டுப் பணிகளுக்காக வருடமொன்றுக்கு ரூபா 712,000/= ஆகக் கூடிய தொகை வழங்கப்படுகின்றது.

**நூலக வசதிகள்**

அதிகாரசபையினது ஊழியர்களின் வாசிப்பு பழக்கம் அதிகரிக்கப்படுவதற்காக ஊழியர்களினால் நடாத்திச் செல்லப்படும் ஒவ்வொரு நூலகத்திற்கும் வருடாந்தம் ரூபா 45,000/= வழங்கப்படும். இவ்வாறான 19 நூலகங்கள் துறைமுக வளவினுள் தற்போது உள்ளன. 2014 ஆம் ஆண்டினுள் 19 நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவதற்காக ரூபா 200,000/= ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 189,500/= விடுவிக்கப்பட்டு 15 நூலகங்களுக்கு மாத்திரம் இத்தொகை பயன்படுத்தப்பட்டன.

**பகல் நேர பராமரிப்பு நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலை**

அதிகாரசபையின் சேவா வனிதா பிரிவினால் அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்காக நடாத்திச் செல்லப்படும் பகல் நேர பராமரிப்பு நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலை இவ்வருடத்தினுள் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. சென்ற வருடங்கள் போன்று பகல் நேர நிலைய பிள்ளைகளுக்கு இலவசமாக பகல் உணவு வழங்கப்படுவதுடன் வேண்டப்படும் சந்தர்ப்பங்களின் போது அவர்களுக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. தற்போது பகல்நேர பராமரிப்பு நிலையத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அதிகாரசபையிக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

## தகவல் முறைமை

துறைமுகத்தின் தகவல் தொழில்நுட்ப தொகுதிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தகவல் முறைமை பகுதியின் பொறுப்பாகும். அத்தோடு துறைமுகத்தினுள் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான சிறந்த நவீனமயமாக்கப்பட்ட தகவல் தொகுதியொன்றை செயற்படுத்தப்படுத்தும் சிற்பியாகவும் இத்தொகுதி விளங்குகின்றது. 2014 ஆண்டில் தகவல் முறைமை தொகுதியினால் மேற்கொள்ளப்படுவதற்கு பொறுப்பேற்கப்பட்ட பணிகள் தற்போதுள்ள தொகுதிகளின் பெயரின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கொள்கலன் முனைய முகாமைத்துவ தொகுதி (CTMS) –ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்கள்**

நேவீஸ் (NAVIS) முனைய முகாமைத்துவத் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் புதிய / மாற்றமடையும் வர்த்தக தேவைப்பாடுகள் காரணமாக எதிர் நோக்கப்பட்ட பல சிக்கல்கள் இப்புதிய முறை தொடர்புபடுத்தலின் மூலம் வெற்றி அடையப்பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. பாரிய எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் மத்தியில் இணையத்தள பிரவேச மொடியூல் வசதிகள் பிரபல்யமாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் பூர்த்தியடைதலின் பின்னர் முகவர்கள் துறைமுகத்திற்கு வரும் தேவைப்பாடு குறைவடைவதுடன் குறைந்த ஆவண நடவடிக்கைகள் ஊடாக தகவல் பரிமாற்றம் துரிதமாக்கப்படும்.

**இலத்திரனியல் தரவு பரிமாற்றத் தொகுதி (EDI)**

கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதியூடாக (CTMS) பின்வரும் இலத்திரனியல் தரவு பரிமாற்ற வசதிகள் 2014 ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வசதிகள் தற்போது முற்றாக செயற்படுத்தப்படுகின்றன.

**முனையத்திலிருந்து வெளியேறும் அறிக்கைகள்** TDR – SAGT/CICT

இலங்கை துறைமுக அதிகாரசபையின் குறைவான மற்றும் பூரணமான கொள்கலன்கள் ஏற்றும் செயற்பாடு இலகுபடுத்தப்பட்டு கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) மற்றும் தெற்காசிய நுழைவாயில் முனையம் (SAGT) ஆகிய முனையங்களில் வெளியேறல் அறிக்கைக் குறிப்புகள் தகவல் தொகுதியினுள் ஏற்றப்படுகின்றன.

**கப்பல் சரக்கு முகாமைத்துவத் தொகுதி (CTMS)**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வாடிக்கையாளர்களுக்கு திறன்மிகுந்த சேவைகளை வழங்கும் நோக்கில் CTMS கப்பற்சரக்கு மொடியூலொன்று 2011 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. கப்பற்சரக்குகள் அகற்றிச் செல்லப்படும் செயற்பாட்டின் போது வாடிக்கையாளர்களின் சேவை வேண்டுகோளை அவர்களின் அலுவலகங்களினாலேயே ஆரம்பித்தல், இலங்கை துறைமுக அதிகாரசபையின் இன்வோயிஸ் படிவங்களை வழங்குதல், இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணம் செலுத்தும் வசதி அல்லது இணையத்தள நிதிப் பரிமாற்ற வசதி மற்றும் எந்தவொரு வங்கியினதும் வைப்பு/ பற்று மூலம் இணையத்தள பயன்பாட்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடியதாக இருத்தல் போன்றவை இதில் கிடைக்கப்பெறும் அனுகூலங்களாகும்.

இவ்வசதி 2014 ஆண்டில் சம்பத் வங்கியின் கணக்கு உரிமையாளர்களுக்கு கிடைக்கப்பெற்றதொடு ஹட்டன் நஷனல் வங்கியும் மக்கள் வங்கியும் 2015 ஆண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் வலையமைப்புடன் தொடர்புபடுத்தப்படும்.

கப்பற்சரக்கு முகாமைத்துவத் தொகுதி மேம்படுத்தப்பட்டதன் பின்னர் குறைய கொள்கலன்களுக்கான (LCL) கப்பற்சரக்குகள் இறக்குமதி மொடியூல், 2014 ஆண்டில் செயற்படுத்தப்பட்டது. எவ்வாறெனினும் பல நாடுகளுக்கான சரக்குகள் திரட்டல், கட்டண பிணைமுறி மற்றும் தொகை பிரிப்பு கொள்கலன்களுக்கான மொடியூலை 2015 நடுப்பகுதியில் செயற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

குறைவான கொள்கலன் / பூரணகொள்கலன் மொடியூலில் 2014 ஆண்டில் பின்வரும் வசதிகள் சேர்க்கப்பட்டன.

- ✦ கொள்கலன் முனைய முகாமைத்துவ தொகுதி மொடியூலுடன் நேரடியாக தொடர்புபடுதலின் மூலம் கப்பல் முகவர்களுக்கும் ஏனைய கப்பற்சரக்கு ஆவணங்களைப் சமர்ப்பிப்பவர்களுக்கும் அவர்களினது பொருட் பட்டியல்களை முன்வைக்க முடியும்.

- சுங்கத் திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் கொள்கலன்களுக்கான "வினியோக அனுமதிப்பத்திரம்" ஊடாக கொள்கலன் சுங்கத்தில் இருக்கும் நிலை சுயமாக முறைப்படுத்தப்படுவதோடு அதனூடாக வினியோக செயற்பாடு விருத்தி செய்யப்பட்டது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் களஞ்சியசாலையில் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) மற்றும் தெற்காசிய நுழைவாயில் முனையத்தில் (SAGT) குறைவான கொள்கலன்களை வைக்க முடியும்.

**ஒரகல் நிதித் தொகுதி**

உச்ச மட்டத்திலான செயலாற்றுகையை நோக்கமாகக் கொண்டு மிகவும் கீழ் நிலையில் சேவை வழங்கிய சேர்வர், பொது பேரேடு, கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள் மற்றும் நிதி முகாமைத்துவ மொடியூல் கூடிய வசதிகளைக கொண்ட புதிய சேர்வருக்கு 2011 ஆண்டில் மாற்றப்பட்டது. இது நடைமுறைப்படுத்தலின் பின்னர் கையினால் செய்யப்பட்டு வந்த அநேக நடவடிக்கைகள் தன்னியக்கமான முறையிலும் நிதிப் பகுதியின் செயற்பாடுகள் எளிதாக்கப்படுதலின் ஊடாகவும் அதன் பணிகள் திறன்மிக்கதாகவும் பிழையற்றதாகவும் நடைபெற்றன. இலத்திரனியல் வர்த்தகங்களின் (E / Business) பட்டியல்படுத்தப்பட்ட மற்றும் கொள்வனவு முகாமைத்துவ மொடியூல் தொடர்பில் புதிய சேர்வரின் கொள்ளளவுகள் முக்கியமானதாகும். பட்டியலிடப்பட்ட பொருட்கள் மற்றும் பெறுகையின் மொடியுல் 2013 நவம்பர் மாதம் செயற்படுத்தப்பட்டது. ஏனைய பிரதான இரண்டு பாகங்களான அதாவது செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் நிலையான ஆதன மொடியூல்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டன.

**புதிய சம்பளப் படிவத் தொகுதி**

புதிய சம்பளத் படிவத் தொகுதி 2011 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொகுதி பிரதானமாக நிதிப்பிரிவின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதற்கு பயனபடுத்தப்படுவதுடன் இறுதிக் கட்டங்களில் இது இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல பிரிவுகளோடும் தொடர்புபடுத்தப்படும். புதிய சம்பளப்படிவத் தொகுதி மனிதவளத் தொகுதியோடு ஒன்றிணைக்கப்படுவதோடு உரிய தொகுதி முற்றாக செயற்படுத்தப்பட்டதன் பின்னர் விடுமுறை/ மேலதிக நேர பராமரிப்பு மற்றும் அவ்வப்போது விண்ணப்பிக்கும் கடன் செயற்பாடு சுயமாக செய்யக்கூடியதாக இருக்கும். தற்போது இதன் சரி பிழை பார்த்தலுக்காக இம்முறையின் சம்பளப் படிவத் தொகுதியோடு பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. புதிய தொகுதியின் பயன்பாட்டில் சம்பளப் படிவங்கள் அச்சிடப்பட்டு இருக்கும் தொகுதியின் உதவியோடு சம்பளப் படிவங்கள் ஊழியர்களுக்கிடையில் வினியோகிக்கப்பட்டன. இது தொடர்பிலான ஊழியர்களின் பிரதிபலிப்புக்கள் மூலம் பிழைகள் தவறுகள் சரி செய்வதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஊழியர்களின் சுகாதார வசதிகள் முகாமைத்துவ தொகுதி (EHMS) மருத்துவ தொகுதி**

வைத்தியப் பகுதியின் தரவுகளை ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகள் கணனிமயப்படுத்துவதற்கான தொகுதியொன்றின் உருவாக்கம் 2012 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. 146 கிகாபைட் (GB) 04 வன் தட்டுக்களுடன் IBM Sever X 3850 $M_2$ கொள்வனவு செய்யப்பட்டு LINUX RED HAT செயற்பாட்டு தொகுதியோடு இணைக்கப்பட்டது.

ஊழியர்களினது சுகாதார வசதிகள் முகாமைத்துவ தொகுதி LINUX செயற்பாட்டுத் தொகுதியின் கீழ் Oracle 10g தரவுத் தளத்துடன் VB. வலையமைப்பின் பயன்பாட்டில் விருத்தி செய்யப்பட்டது. இதுவானது மருத்துவப் பகுதியின் அறிக்கைகள் பேணும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதோடு அதனூடாக நோயாளர்களை பதிவு செய்தல், சிகிச்சைகள், மருந்து வினியோகம், நோயாளர்களினது வைத்திய பரிசோதனை அறிக்கைகள், நோயாளர்களை அனுமதித்தல், ஆய்வு கூட பரீட்சிப்புகள் ECG, x-ray கதிரியல் அறிக்கைகள், ஆலோசனைகள் போன்ற தொடர்புபடும் பணிகளை இலகுபடுத்துகின்றது.

தற்போது இத்தொகுதி ஒப்பீட்டு மற்றும் பரீட்சிப்பு நிலையிலுள்ளது.

**உயிரியல் ரீதியான (Bio Metric) நேர வருகை தரல் மற்றும் பௌதீக ரீதியான பிரவேச கட்டுப்பாட்டுத் தொகுதி (TAPACS)**

இத்தொகுதி 2009 ஆம் ஆண்டில் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டதோடு இது தற்போது கொழும்பு,காலி,மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ போன்ற துறைமுகங்களில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இது மிகவும் வெற்றியளித்துள்ளதோடு இருக்கும் பதிப்பு இயந்திரங்களினதும் இப்புதிய தொகுதியின் பயன்பாட்டில் இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து ஊழியர்களுக்குமான ஸ்மாட் அட்டை தொழில்நுட்பத்தின் மூலம் அடையாள அட்டைகள் அச்சிடல் 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை துறைமுக அதிகார சபையின் தேவைப்பாட்டிற்கேற்ப தயாரிக்கப்பட்ட மென் பொருளை T மற்றும் A இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அனைத்து நிருவாக அலகுகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டும் செயற்படுத்தப்பட்டும் தற்போது ஆறு வருடங்கள் கடந்துள்ளன. வரவு அறிக்கைகள் பேணிச் செல்லும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இதன் அறிக்கைகள் பேணும் பிரிவு மிகவும் பிரயோசனமுள்ளதாகும். இதன் தகவல்களை பாதுகாப்பு, சம்பளப்படிவங்கள் மற்றும் மனிதவள முகாமைத்துவ பிரிவுகள் பயன்படுத்துகின்றன.

2013 ஆம் ஆண்டில் முதலாவது தடவையாக வழங்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்த அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புகைப்படம் கொண்ட அடையாள அட்டைகள் அச்சிடும் பணி நிறைவு செய்யப்பட்டது. செயற்படாத சில இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்கள் பொருத்தும் மற்றும் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் வழமையான பாவனையாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எதிர்காலத்தில் பழைமையான T&A இயந்திரங்களுக்கு (வருகை தருகையின் நேரம் குறிக்கும்) புதிதாக இயந்திரங்கள் பொருத்தப்பட்டு புதிய மற்றும் பழைய இயந்திரங்களுக்கான மென்பொருள்களின் சீர்திருத்தங்கள் நிறைவு செய்யப்பட்டன.

**இருக்கும் தொகுதிகளைப் பராமரித்தல்**

ஈடுபடுத்தும் தொகுதி செயற்படுத்தப்பட்டதன் பின்னர் அதன் மென் மற்றும் துணையான வன் பொருட்களைப் பராமரித்தல் தகவல் தொகுதிப் பகுதியின் பிரதான பொறுப்பாகும் எந்தவொரு தொகுதியும் ஸ்தாபிக்கப்படும் முழுமையான முயற்சியில் 60% அளவு தொகுதிகளைப் பராமரித்தல் தொடர்பிலாக இருக்கும். இதுவானது தொகுதிகளின் அபிவிருத்தி சுற்றின் நீண்டகால செயற்படுத்தும் பிரிவாகக் கருதப்படுகின்றது. தொகுதியின் நடவடிக்கைகள் முடிவடைதலோடு பராமரிப்புக் காலமும் முடிவடையும். தொகுதிகள் ஆரம்பிக்கப்படுதலும் பராமரித்துச் செல்வதும் தகவல் தொகுதியின் பொறுப்பானதால் தகவல் தொகுதி பகுதியிடம் ஒப்படைக்கப்படும் பராமரிப்பு நடவடிக்கைகளின் அளவும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

மென் மற்றும் வன் பொருட்கள் அன்றாடம் பேணிச் செல்லப்படுவது தொடர்பில் தகவல் தொகுதிப் பகுதியினால் மேற்கொள்ளப்படும். சடுதியான செயற்பாடுகள் தகவல் தொகுதி தொடர்ச்சியாகச் செயற்படுவதில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஒத்தாசை வழங்குகின்றது.

மீளாய்வு ஆண்டில் தகவல் தொகுதிப் பகுதியினால் பின்வரும் தொகுதிகள் பராமரித்துச் செல்லப்படுவதற்காக பொறுப்பேற்கப்பட்டன.

**நிறைவான மற்றும் குறைவான தரையிறக்கல் மற்றும் வினியோகத் தொகுதி (FCL/LCL/)**

சம்பந்தப்பட்ட தொகுதிகள் IBM ஆரம்ப சட்டம் கொண்ட இயந்திரங்களினால் செயற்படுகின்றன. தேவைப்படும் பாதுகாப்பு நடைமுறைகளின் மூலம் சிறந்த முறையில் வாடிக்கையாளர்களுக்கு தடையின்றிய சேவைகள் வழங்குவதனை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபை, கட்டுநாயக்க மற்றும் புறக்கோட்டை ஆகிய ஆவணங்களை தயாரிக்கும் நிலையங்களிலுள்ள தரையிறக்கல் மற்றும் வினியோகத் தொகுதிகள் தற்போதும் கூட ஆரம்ப சட்டம் கொண்ட இயந்திரங்களினாலேயே இயங்குகின்றன.

எதிர்காலத்தில் ES 9000 இயந்திரத்தின் பாவனையை நிறுத்தும் நோக்கில் குறித்த இயந்திரம் பராமரிப்பின்றி இருந்ததன் பயனாக மேற்குறித்த இயந்திரம் பாவனையில் இருந்த SAGT மற்றும் CICT தொகுதிகளுக்கு குறைவான கொள்கலன்கள் மற்றும் நிறைவான கொள்கலன்கள் வினியோகிப்பதனை உள்ளடக்குவதற்கு தகவல் தொகுதியினால் இரண்டு நிச்சயமின்றிய தொகுதிகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. இந்த நிச்சயமின்றிய தொகுதிகள் நேவீஸ் கப்பற்சரக்கு முகாமைத்துவத் தொகுதியில் குறைவான கொள்கலன்களின் மொடியூல் செயற்படும் வரை பாவிக்க முடியும்.

**கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் - பேலியகொட**

தொகுதியின் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. உரிய கரும அறிக்கைகளின் வேண்டுகோள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சேர்வர் பராமரிப்பு மற்றும் தரவுகள் பேணப்படும் செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

**பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் தொகுதி**

துறைமுக பாவனையாளர்களுக்கு தொகுதியின் ஒத்துழைப்பு,பயிற்சி மற்றும் காலத்திற்கு தேவையான அறிக்கைகள் வழங்கப்பட்டன. சேர்வர் பராமரிப்பு மற்றும் தரவுகள் பேணப்படும் செயற்பாடு மேற்பார்வை செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது புதிய சேர்வர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு தரவுக் களஞ்சியம் ஒரகல் 8 ஐ (Oracle 8 I) இருந்து 10g வரை திருப்புதல் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

காலி வதிவிட முகாமையாளரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளிற்கமைய காலி துறைமுகத்திற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் முறை தகவல் தொகுதி பகுதியினால் விருத்தி செய்யப்பட்டது. இதனூடாக துறைமுகங்களை பயன்படுத்தும் அனைத்து வெளி நபர்களின் வாகனங்களுக்காக தற்காலின மற்றும் மாதாந்த நுழைவு அனுமதிப்பத்திரங்களும் உள்ளடக்கப்படுகின்றன. அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் வசதிக்கு மேலதிகமாக ஆட்கள் மற்றும் வாகனங்களை தடை செய்யப்பட்டியலில் சேர்க்கும் வசதியும் இத்தொகுயின் ஊடாக கிடைக்கப்பெறுகின்றது. குறித்த தொகுதியூடாக வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்குரிய அன்றாட மற்றும் மாதாந்த வருமான அறிக்கைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

## மருத்துவம்

சிறந்த உள மற்றும் உடல் சுகாதார நிலை பேணப்படுவது தொடர்பில் சேவையில் ஈடுபட்டிருக்கையில் பாதுகாப்பாக இருத்தல், புகைத்தல், மதுபானம் மற்றும் போதைப் பொருட்களின் பாவனை தவிர்க்கப்படும் நோக்கில் விசேட அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதன் ஊடாக கடமை நிலையங்களில் சுகாதார சுற்றாடல் பேணப்பட்டு இதன் மூலம் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டது.

சடுதி விபத்துக்கள், அவசர நிலைமைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகளுக்கு உடனடியாக சிகிச்சைகள் வழங்கப்படுவதுடன் வாழ்க்கை முறை காரணமாக ஏற்படும் நோய் நிலைமைகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதற்காக 24 மணித்தியாலம் பூராகவும் சேவைகளை வழங்கும் அர்ப்பணிப்பும் அனுபவமும் கொண்ட வைத்தியர்கள் இருப்பதனால் நோயாளர்கள் தனித்தனியே வைத்தியர்களை நாடி சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எக்ஸ் கதிர், ஈ.சீ.ஜீ கதிரியல் மற்றும் ஆய்வுகூட வசதிகள் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளன. 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயற்படும் நோயாளர் காவு வண்டிச் சேவையும் உண்டு.

பல் பிடுங்குதல், பற்கள் துப்புரவு செய்தல், நிரப்புதல், நிரந்தர மற்றும் பற்குழிகள் நிரப்புதல் அடங்கலான ஏனைய பல் சம்பந்தப்பட்ட சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபையில் பகுதிரீதியான டெங்கு ஒழிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் பகுதித் தலைவர்களின் மேற்பார்வையில் ஒவ்வொரு பகுதியுடனும் தொடர்புபட்ட டெங்கு ஒழிப்புக்

குழுவினால் கிழமை தோறும் துறைமுக வளவினுள் டெங்கு பெருகும் இடங்கள் பரீட்சிக்கப்படும். ஒவ்வொரு பகுதியினாலும் மாதாந்த அறிக்கைகள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளரிடம் அனுப்பி வைக்கப்படுகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் டெங்கு ஒழிப்பு குழுவினால் டெங்கு ஒழிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் அதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் கலந்துரையாடப்படுவதற்கும் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

வாழ்க்கை  முறை காரணமாக ஏற்படும் நோய்கள் விசேடமாக நீரிழிவு தவிர்ப்பு தொடர்பில் கல்வி வேலை நிகழ்ச்சிகள், பகுதி மற்றும் பிரிவு மட்டங்களில் நடாத்தப்பட்டன.

வைத்திய பகுதியின் வளப் பாவனை மிகவும் உயர் நிலையில் பேணப்பட்டுள்ளது.

## மஹபொல பயிற்சி நிலையம்

துறைமுக ஊழியர்கள், துறைமுக பாவனையாளர்கள், கடலகத் துறையுடன் தொடர்புபட்டுள்ளவர்களுக்கும் பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்குவதனை பிரதான நோக்காகக் கொண்டுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் அறிவின் மைய நிலையமான மஹபொல பயிற்சி நிலையம், செயற்படுகின்றது குறித்த ஊழியர்களினது அறிவு, தேர்ச்சி மற்றும் உளப்பாங்கு விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விரிவுரைகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், செயன்முறை நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டு 2014 ஆண்டின் வருடாந்த பயிற்றுவித்தல் நாட்காட்டிற்கேற்ப நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த நிலையத்தினால் நடாத்தப்பட்டன. துறைமுக ஊழியர்களுக்கான உற்பத்தித்திறன், குழு உணர்வு மேம்பாடு, தொழில்நுட்ப தேர்ச்சி தரமுயர்த்துதல், வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் தர மேம்பாடு நோக்காகக் கொண்ட பல பயிற்சி நிகழ்ச்சிகள் 2014 ஆண்டில் நடாத்தப்பட்டன. ஊழியர்களின் திறன் மட்டம் உயர்த்தப்படுவதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வது வரை துறைமுக ஊழியர்கள் தமது தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதற்காகவும் துறைமுக இயக்கங்களுக்குரிய தெரிவுசெய்யப்பட்ட சேவைகளில் விசேட அறிவு பெறுவதற்காகவும் மஹபொல பயிற்சி நிறுவனம் அமைப்பு ரீதியான வழிகளை ஏற்படுத்துகின்றது.

2014 ஆம் ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் 643,988 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுதலின் ஊடாக சுமார் 5,608 பேர் தொழிலில் ஈடுபட்டிருக்காத பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.. இதற்குப் புறம்பாக பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வோர், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஏனைய தொழில் கல்வி நிறுவனங்களின் 259 பேருக்கும் மஹபொல பயிற்சி நிலையத்தினால் (தொழிலில் ஈடுபட்டிருக்கையில்) பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2014 ஆண்டின் ஒட்டுமொத்த பயிற்சியளிப்பின் செயலாற்றுகை**

| துறைகள் | பயிற்றுவிக்கப்பட்ட தொகை | மொத்த மனித மணித்தியாலங்கள் |
|---|---|---|
| உபகரணங்கள் கையாளுதல் | 1,407 | 361,186 |
| சரக்குகள் கையாளுதல் | 104 | 4,480 |
| முகாமைத்துவம் | 1,672 | 458,947 |
| தகவல் முறைமை | 418 | 423,705 |
| தொழில்நுட்பம் | 500 | 59,445 |
| தீ காப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம் | 901 | 9,706 |
| கடலகம் மற்றும் மாலுமி | 606 | 32,853 |
| தே.கை.ப. அதிகாரசபையின் பயிலுனர்கள், தொ.ப.அ மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் | 150 | 21,000 |
| பல்கலைக்கழக பட்டப் படிப்பு மேற்கொள்பவர்கள் | 109 | 156,960 |

**பதவியுயர்வுகளுக்கான புதிய நடைமுறையின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு தகுதி பெறும் தகைமைகளை பெற்றுக் கொடுத்தல்**

அடிப்படை தகைமையான க.பொ.த (சா/தரம்) தகைமைகள் இல்லாதிருப்பதன் காரணமாக அநேகமான துறைமுக ஊழியர்கள் பதவியுயர்வுகள் பெற முடியாமல் ஒரே பதவியில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. 2014 ஆண்டில் 152 அபேட்சகர்கள் தொடர்பில் இவ்வாறான ஐந்து வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும் நிறைவேற்று அலுவலர்களின் பயன்பாட்டிற்காக, துறைமுக பாதுகாப்பு தொடர்பான டிப்ளோமா வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2014 ஆண்டில் முகாமைத்துவ தகவல் முறைமை தொடர்பிலான டிப்ளோமா பயிற்சிநெறியொன்றும் தயாரிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக சுழியோடிகளினது ஆற்றல்கள் மேம்படுத்தப்படுவதற்கான புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றும் விருத்தி செய்யப்பட்டது.

**ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித் திறன் மேம்படுத்துதல்**

ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித் திறன் மேம்படுத்துவது தொடர்பில் துறைமுக நடவடிக்கைகள் பற்றியதிலான வேறு பயிற்சியளித்தல்களின் மூலம் திறன்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படுகின்றன. அவையாவன;

- ✦ துறைமுக நிதி சார்ந்த விடயங்கள்
- ✦ கணக்காய்வு
- ✦ கொள்வனவு செய்தல் மற்றும் நிர்வாகம்
- ✦ இலிகிதர் திறன் விருத்தி செய்தல் மற்றும் நிர்வாகம்
- ✦ மனிதவள முகாமைத்துவம்
- ✦ நன்நோக்கிலான எண்ணப்பாடுகள்
- ✦ சுகாதாரம் மற்றும் காப்பு வழிகள்
- ✦ துறைமுக மூலோபாய முகாமைத்துவம்
- ✦ தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பொறியியல் பட வரைதல்
- ✦ மோட்டார் கட்டுப்பாட்டு சுற்று
- ✦ மின்சாரவியலாளருக்கான இலத்திரனியல்
- ✦ ஒட்டும் பயிற்சி

2014 ஆண்டினுள் 2,590 பேருக்கு இவ்வாறான 85 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும் கொள்கலன் முனையங்களில் மனித உயிர்களினதும் உபகரணங்களினதும் பாதுகாப்பு மேம்படுத்துதல் தொடர்பில் 992 தனியார் லொறி வண்டி சாரதிகளுக்கு பாதுகாப்பு பற்றியதிலான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. வண்டிகள் திருப்பியனுப்பப்படும் காலம் குறைக்கப்படுதலிலும் முனைய செயற்பாடுகளின் போது பாதுகாப்பின் கவனம் அதிகரிக்கப்படுவதிலும் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் பேருதவி புரிந்தன.

**கப்பலோட்டத் துறைக்கான ஒத்துழைப்பு வழங்கல்**

கப்பலோட்டத்துறை தொடர்பான பயிற்சிப் பாடநெறிகள் வழங்கப்படுதலின் மூலம் மஹபொல பயிற்சி நிலையத்தினால் உலக கப்பலோட்டத் துறைக்கு குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஆயிரக் கணக்கான தொழில் இல்லாது செல்வாக்கற்றிருக்கும் அநேகமான இலங்கை இளைஞர்கள் இந்த வேலைத்திட்டம் ஊடாக சர்வதேச கப்பல் சேவைகளில் தொழில்களை பெறுகின்றனர். 2014 ஆண்டினுள் 1,507 விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறான 81 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன

மேலும் ஓமான் நாட்டின் அரச கடற்படைக்கான கப்பல்களைக் கட்டி வைத்தல் மற்றும் விஞ்சு கையாளல் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

**ISO 9001: 2008 சான்றிதழ்**

கப்பலோட்டிகளுக்கான IMO/STCW பயிற்சிப் பாடநெறி நடாத்தப்படுவதற்கான முக்கிய தரக்கட்டுப்பாடு தொகுதியான ISO 9001-2008 சான்றிதழ் இலங்கையின் பிரதான கல்வி நிறுவனமான மஹபொல பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 2014 ஆண்டினுள் மூன்று முகாமைத்துவ மீளாய்வுகளும் நான்கு உள்ளக கணக்காய்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன. நுகர்வோர் முறைப்பாடுகளை கையாள்வது தொடர்பில் உரிய நடைமுறையொன்றினை மஹபொல பயிற்சி நிலையம் தன்னகத்தே கொண்டுள்ளது. நிறுவனத்தின் முன்னேற்றம் தொடர்பில் மஹபொல பயிற்சி நிலைய ஊழியர்கள் அடிக்கடி அறிவுறுத்தப்படுகின்றனர்.

**நவீன தொழில்நுட்பம் பயன்படுத்துதல்**

மஹபொல பயிற்சி நிறுவனம் அதன் செயற்பாடுகளில் நவீன தொழில்நட்பம் அறிமுகப்படுத்தலின் மூலம் நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தியுள்ளது.

- ✦ நிறுவப்பட்டுள்ள மெகாரொனிக் விஞ்ஞானகூட பயன்பாட்டில் 47 அபேட்சகர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- ✦ துறைமுகத்தின் கெண்ட்ரி பாரம்தூக்கி கையாள்பவர்கள் 229 பேர் பயிற்றுவிக்கப்படுவதற்காக கொள்கலன் தாங்கியின் பயிற்சி மாதிரி பயன்படுத்தப்படும்.
- ✦ Advanced PLC க்காக 08 பயிற்சியாளர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

**பயன்படுத்தப்படக்கூடிய ஊழியர் படையணி**

எதிர்கால தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு மற்றும் புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் துறைமுகங்கள் தொடர்பில் கடமையாற்றக் கூடிய திறனான ஆளணி குழாமொன்றை பேணிச் செல்லும் செயற்பாட்டில் மஹபொல பயிற்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. இப்பணிக்காக 2014 ஆண்டினுள் துறைமுக இயந்திரங்கள் கையாள்பவர்கள் 133 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் தொடர்பில் பல்வித தேர்ச்சிகள் பற்றியதில் 334 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்படுவதற்கான மஹபொல பயிற்சி நிலையத்தின் பயிற்சி நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளது

**மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்படுத்துதல்**

உலகளாவிய வர்த்தகங்களின் போது வாடிக்கையாளர்கள் திருப்திப்படுத்துவது முக்கிய விடயமென்பதால் பாவனையாளர்கள் மிகவும் திருப்தி கொள்வதற்கு ஊழியர்களினது மொழிகளின் தேர்ச்சி அதிகரிக்கப்படுவதற்கும் அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவாற்றல் வழங்குவது தொடர்பிலும் இலங்கை துறைமுக அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது. மஹபொல பயிற்சி நிலையம் இதன் பொறுப்பை ஏற்றுள்ளதோடு அதற்காக 2014 ஆண்டில் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களில் 418 ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் தெரிவு செய்யப்பட்ட 199 அபேட்சகர்கள் தொடர்பில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

**கைத்தொழில் ஒத்துழைப்பு வழங்கல்**

அரச பல்கலைக்கழகங்கள், கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களின் மாணவர்களினது கற்கை பாடநெறிகளை பூர்த்தி செய்து கொள்ளும் கைத்தொழில் பயிற்சி பெற்றுக்கொடுக்கப்படுதலில் ஒத்துழைப்பு வழங்கும் செயற்பாட்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. 2014 ஆண்டினுள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ள 109 பேருக்கும் 55 டிப்ளோமாதாரர்களுக்கும் 95 துறைசார்ந்த வல்லுனர்களுக்கும் அவர்களினது பயிற்சிகள் நிறைவு செய்து கொள்ளப்படுவதற்கான சந்தரப்பங்களை இலங்கை துறைமுக அதிகாரசபை வழங்கியுள்ளது.

**ஈட்டுப்பட்டுள்ள வருமானம்**

வெளி நபர்களுக்காக நிதி அறவிடப்படும் பாடநெறிகளினால் 2014 ஆண்டில் மஹபொல பயிற்சி நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபை ரூபா 11,326,281/= வருமானம் ஈட்டியுள்ளது. ஊழியர்களினது துறைமுக கையாளல் செயற்திறன் அதிகரிக்கப்படுவதற்கு நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களினால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 14,195,250/=. ஆகும் எனவே 2014 ஆண்டில் மஹபொல பயிற்சி நிலையத்தினால் ஈட்டப்பெற்றுள்ள முழு வருமானம் ரூபா 25,521,531/=.ஆகும்.

2014 ஆண்டில் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கான முழு செலவினம் ரூபா 5,142,255/= ஆகும்.

## பாதுகாப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல வர்த்தகத் துறைமுகங்களினது பாதுகாப்பு பற்றியதான பொறுப்பு இப்பகுதியிடம் வழங்கப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றும் பொருட்டு 24 மணி நேரம் பூராகவும் தொடர்ச்சியான திறனான சேவை நடாத்திச் செல்லப்படுகின்றது. அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள்ள கொழும்புத் துறைமுகத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் உயிர்கள் காக்கப்படும் வகையில் நவீன அறிவு, புதிய தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் நுட்பங்கள் பயன்பாட்டில் இப்பகுதியானது மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான சிறந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

செயற்திறனான முறையில் அன்றாட பணிகளை நிறைவேற்றி துறைமுகத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பில் பாதுகாப்புப் பகுதியினால் ஈட்டப்பட்டுள்ள வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஆட்கள் மற்றும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் பெறப்பட்டுள்ள வருமானம் | 83,518,061 |
| தொலைந்த அனுமதிப்பத்திரங்களுக்கு புதிதாக அனுமதிப்பத்திரங்கள் பெறுதலின் தண்டப் பணமாக ஈட்டப்பட்டுள்ள வருமானம் | 44,286 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ வ/ப கொழும்பு டொக்யாட் மற்றும் சீ.ஐ.சீ.ரீ கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதனால் பெறப்பட்டுள்ள வருமானம் | 6,050,103 |
| வருடாந்த அனுமதிப்பத்திரங்களுடன் ரவைகளின் உறைகள் மற்றும் தோள்பட்டிகள் வழங்குதலில் கிடைக்கப்பெற்ற வருமானம் | 75,706 |
| துறைமுகத்தினுள் மீன் பிடித்தல் தொடர்பிலான தனிநபர் மற்றும் வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதலில் கிடைக்கப்பெற்ற வருமானம் | 118,857 |
| **மொத்தம்** | 89,807,013 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனுமதிப் பத்திரங்கள் வழங்குதலின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்திற்குப் புறம்பாக சேவை வழங்கல் என்ற வகையில் தற்காலிக அனுமதிப்பத்திர அலுவலகத்தினால் 2014 ஆண்டினுள் அறவீடின்றி வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் தனி நபர்களுக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை முறையே 37,206 மற்றும் 8,769 ஆகும்.

### துறைமுக ஊழியர்களுக்கான புகைப்பட அனுமதிப்பத்திர அலுவலகம்

2014.01.14 இருந்து 2014.12.31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள புகைப்பட அடையாள அட்டைகளின் எண்ணிக்கைகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| புதிய நியமனங்களுக்கானது | 92 |
| தரவுகள் மாற்றமடைதலின் காரணமாக மீள் வழங்குதல் | 1,886 |
| 2014.01.14 இருந்து 2014.12.31 ஆம் திகதி வரை துறைமுக அதிகாரசபையின் குழாம் வாகனங்களுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 517 |
| 2014.01.14 இருந்து 2014.12.31 ஆம் திகதி வரை துறைமுக ஊழியர்களினது தனிப்பட்ட வாகனங்கள் / மோட்டார் சைக்கிள்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 4,739 |
| அச்சிடப்பட்டுள்ள வழமையான துறைமுக பாவனையாளர்களுக்கான RPU அச்சிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 1,539 |
| மாகம்புர முகாமைத்துவ தனியார் கம்பனிக்காக அச்சிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை (இந்த அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டு மாகம்புர முகாமைத்துவ தனியார் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன) | 295 |

2015 ஆண்டிற்கான அனைத்து துறைமுகங்களினது குழாம் வாகனங்கள் மற்றும் விண்ணப்பிக்கப்பட்ட துறைமுக ஊழியர்களின் தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான எல்லா அனுமதிப்பத்திரங்களும் அச்சிடப்பட்டுள்ளன.

அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் தொடர்பான சட்ட நிபந்தனைகள் மீறப்பட்டதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள ஆட்கள் மற்றும் வாகனங்களின் அனுமதிப்பத்திரங்கள் முறையே 240 மற்றும் 54 ஆகும்.

**மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு மேலதிகமாக**

| | |
|---|---|
| 2014 ஆண்டில் போக்குவரத்துச் சட்டங்கள் மீறப்பட்டதன் காரணமாக அதிகாரசபையினால் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 92 ஆகும். சகல விசாரணைகளும் நிறைவு பெற்றுள்ளன. தண்டப்பணமான பெறப்பட்டுள்ள தொகை | 128,500 |
| 2014 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளுக்காக அறவிடப்பட்டுள்ள தொகை | 3,772,957 |

பாதுகாப்புப் பகுதியின் அனைத்து அதிகாரிகளினது பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பில் கவனத்திற்கொள்ளும் போது சேர் ஜோன் கொத்தலாவள பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பாதுகாப்பு டிப்ளோமா தொடர்பான இரண்டு வருட பாடநெறியை 42 பாதுகாப்பு அதிகாரிகள் பின்பற்றி 12 அதிகாரிகள் அதில் உயர் (Merit) சித்தியடைந்துள்ளனர்.

2014 ஆண்டில் பாதுகாப்பு பிரிவு மற்றும் தொடர்புபடும் நிறுவனங்களின் கடமைகள் தொடர்பு நடாத்தப்பட்ட 34 அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களில் 377 அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு பயிற்சி பிரிவினால் மேலும் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் பயிலுனர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள் 2014.01.29 இருந்து 2014.12.31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டன.

இரண்டு உதவி பாதுகாப்பு அதிகாரிகள் ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கப்பட்டு கதிர்வீச்சுப் பொருட்கள் பரீட்சிக்கப்படுவதிலான பயிற்சி வழங்கப்பட்டது. குறித்த இரண்டு அதிகாரிகளும் மெகாபோட்

பிரிவில் ஈடுபடுத்தப்பட்டு உரிய பணிகளை முறையாக பேணிச் செல்லப்படுவதற்கும் அப்பணிகளில் இலங்கை சுங்கம் மற்றும் அணுசக்தி அதிகாரசபையுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்திச் பேணிச் செல்லப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைமுகங்களும் உள்ளடக்கம் பெறும் வகையில் எல்லா பாதுகாப்பு அலுவலர்களையும் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி பயிற்றுவிப்புகள் உயர் மட்டத்தில் வழங்க பாதுகாப்புப் பகுதிக்கு முடிந்துள்ளது.

மேலும் அவர்களின் சேவைகள் உயர் மட்டத்தில் பேணிச் செல்லப்படுதற்கு தேவைப்படும் பொருட்கள் வழங்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

**பணிகள்**

இலங்கையின் அனைத்து துறைமுகங்களினதும் கையாளல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்குத் தேவைப்படும் எரிபொருட்கள், இயந்திர உபகரணங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் எனைய பொருட்களை கொள்வனவு செய்து (உள்நாடு மற்றும் வெளிநாடு) களஞ்சியங்களில் இட்டு வினியோகம் செய்வது இப்பகுதிக்குரிய பணிகளில் அடங்கும்.

**மீளாய்வாண்டினுள் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள விலைகோரல்களின் எண்ணிக்கை**

| விபரம் | விலைகோரல் சபை கூட்டங்களின் எண்ணிக்கை | விலைகோரல் சபை அங்கீகாரங்களினது எண்ணிக்கை |
|---|---|---|
| அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைகோரல் சபை (அங்கீகார எல்லை – 100 மில்லியன் ரூபாவிற்கு மேல் | இல்லை | இல்லை |
| பணிப்பாளர் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல - 01) (ரூபா 20 மில்லியன் – 100 மில்லியன் வரை) | 12 | 13 |
| மத்திய விலைகோரல் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல – 02 ) ரூபா 250,000 இருந்து 20 மில்லியன் வரை) | 48 | 1,604 |
| “பி” விலைகோரல் சபை (திணைக்கள விலை கோரல் சபை இல – 03) அங்கீகார எல்லை ரூபா 250,000 க்கு குறைந்தது) | 51 | 3,909 |

**2014 ஆண்டின் வெளிநாட்டுக் கொள்வனவுகளின் மொத்த செலவினம் (ஆகுசெலவு மற்றும் கப்பற் கட்டணப் பெறுமதி**

| | |
|---|---|
| மூலதனமற்ற பொருட்கள் | ரூபா 512,269,275/= |
| மூலதன பொருட்கள் | ரூபா 86,000,216/= |

| | |
|---|---|
| திறக்கப்பட்ட கடன் கடிதங்களின் எண்ணிக்கை (D/A மற்றும் (D/P அடங்கலாக) | 128 |
| திறக்கப்பட்ட மின்னஞ்சல் நிதிப் பரிமாற்றக் கட்டளைகளின் எண்ணிக்கை | 32 |

2014 **ஆம் ஆண்டினுள் வாப்புப் பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட பொருட்கள் பற்றியதான விபரங்கள்**

| | |
|---|---|
| கடல் மார்க்க போக்குவரத்து | 100 |
| விமான மூல போக்குவரத்து | 60 |
| பொதித் தபால் | 02 |

**2014.12.31 ஆம் திகதி வரை இருப்புப் பெறுமதி ரூபா** 2,278,558,356/=

**பிரதான களஞ்சியங்களும் மொத்த இருப்புக் கட்டுப்பாடும்**

| | |
|---|---|
| 2014 ஆம் ஆண்டினுள் களஞ்சியசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா 15,231,802,169/= |
| பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா 3,485,793,875/= |

## உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுப் பகுதியின் செயற்பாடுகள் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழிகாட்டப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இதனை கணக்காய்வு குழு பரிந்துரைத்து பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்கள் / பொறுப்புக்கள் வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கமைய உள்ளக பரிசோதனைகள், வழமையான உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**உள்ளக பரிசோதனைகள் - வருகை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளர் தரத்திலல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் பிரசன்னமாக இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள் அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு / பகல் வேலைமுறைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஊழியர்கள் சிறந்த முறையில் தமது சேவை நிலையங்களுக்கு வருகை தரல் இதன் மூலம் நடைபெற்ற பயனுள்ள செயலாகும் .

**நிதி**

காசு மற்றும் கட்டு நிதி தொடர்பில் அடிக்கடி அவசர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

**வருமான கணக்காய்வு**

துறைமுக கட்டணங்கள் ஈடு செய்வது தொடர்பில் அறிந்து கொள்ளக் கூடியவாறு விசேட வேலைத்திட்டமொன்றாக வருடத்துக்கான வருமானம் ஒன்றுசேர்ப்பு தொடர்பில் கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கேற்ப கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுத்து செல்லப்பட்டன. பூர்வாங்க கணக்காய்வுப் பணிகளின் பின்னர் மிகையான செலுத்துதல்களுக்கான மீள் செலுத்துதலும் நடைபெற்றது.

கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் காலாவதியான காசோலைகள் பரிசோதிக்கப்பட்டு அவைகளின் வித்தியாசங்கள் அறிவிக்கப்பட்டன. கட்டுநாயக்க, பியகம

தரையிறக்கல் மற்றும் கையளித்தல் பிரிவுகளிலும் பரிசோதனைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டன.

**செலவினக் கணக்காய்வு**

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களும் களஞ்சிய வவுச்சர்கள் தொடர்பிலும் ஆய்வு பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அங்கீகாரம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொடர்பான தயாரித்தல்கள் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

**களஞ்சியங்கள் பற்றியதான பௌதீக ரீதியான உறுதிப்பாடுகளைப் பரீட்சித்தல்**

கொழும்புத் துறைமுகத்தின் களஞ்சியங்களில் பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு காலி, திருகோணமலை போன்ற துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போது ஒத்தாசைகளும் வழங்கப்பட்டன. பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிக்கப்படுகையில் களஞ்சியங்களில் இருக்கும் அடிக்கடி தேவைப்படாத பொருட்கள் அடையாளங் காணப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக வழங்கல் பகுதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

**பரிசோதனைகள்**

தலைவர் / முகாமைப் பணிப்பாளரின் வேண்டுகோளிற்கிணங்க ஆண்டினுள் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதிக் கணக்குகள்**

அதிகாரசபையின் கணக்குகளின் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப அனுசரித்து நிதிக் கூற்றுக்கள் தயாரித்து உறுதிப்படுத்தும் நோக்கில் அதிகாரசபையின் இறுதிக் கணக்குகள் பரீட்சிக்கப்படுவதில் இப்பகுதி அக்கறை செலுத்தியது.

**முன் கணக்காய்வு**

வைப்புக்களை மீள்செலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களை கைவிடுதல் தொடர்பில் மீளாய்வாண்டினுள் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகங்கள்**

காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## திருகோணமலை துறைமுகம்

**சிவில் பொறியியல்**

- செயற்படுத்தப்பட்ட முக்கிய வேலைகள் - உலர்மலை பிரதேசத்திலுள்ள VIP சுற்றுலா விடுதியின் புதுப்பித்தல் பணிகள்.
- மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் - IV ஆம் இலக்க களஞ்சியசாலையில் சுவர் நிர்மாணித்தல், இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய காணிகளின் எல்லைகளின் அடையாளமிடுதல்கள், சிலோன் ஜெட்டியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் புதுப்பித்தல் மற்றும் கப்பல்துறை 05 ஆம் கட்டையில் இருக்கும் பாதுகாப்புக் கூடத்தை அமைத்தல்.

- நிறைவு செய்யப்பட்ட பிரதான வேலைகள் - உவர்மலையின் VIP உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் எல்லைச் சுவர் நிர்மாணித்தல், TTA வழிகாட்டி அலுவலக கட்டடத் தொகுதியில் நிலக்கரி துகள்கள் உள்வருவதைத் தடுப்பதற்காக ஜன்னல் அறையை மீளமைத்தல், பர்மா முகாமின் புத்தர் சிலைக் கூடத்தை மீள் புதுப்பித்தல், தானியகம ஜீ - 10 உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மட்கோ பிரிவின் அலுவலகங்களைப் புதுப்பித்தல்.

- TTA பகுதியின் உண்டிச்சாலைகளின் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள், நகர துறைமேடையின் தீர்வை வரியற்ற கட்டடத் தொகுதி பிரதேசத்தை முறையாக மீளமைத்தல், உவர்மலையின் VIP விடுதி மற்றும் சிலோன் ஜெட்டி பிரதேசங்களின் நிலங்களை மீளமைத்தல், உவர்மலையின் துறைமுக பொறியியல் விடுதிகளுக்கு மலசல குழிகளை ஏற்படுத்துதல்.

- கப்பல்கள், நங்கூரக்கலங்கள், வண்டிகள் மற்றும் கட்டடங்களுக்கான மர வேலைகளை நிறைவு செய்தல்.

**இயந்திர பொறியியல் வேலைகள்**

- "பொலெறோ" கெப் வண்டி, இசுசு லொறி, மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றின் தண்டுப் பகுதிகளின் தகர மற்றும் வர்ணம் பூசும் வேலைகள், கார்டோ பாரம்தூக்கி, ரோஸா பேரூந்து மற்றும் டனக் கலம் போன்றவற்றின் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- "பொலெறோ" கெப் வண்டிக்கான ஆசனங்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய காணிகளுக்கான பெயர்ப்பலகைகளை தயாரித்தல்.

- மின்சார வினியோகம் திரிபேஸ் மின்சாரத்துக்கு மாற்றம் செய்யப்பட்டு உவர் மலையின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு மின்சாரக் கம்பிகளை இணைக்கும் வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளில் பாதிப்படைந்திருந்த மின்சார குமிழ்களுக்குப் பதிலாக புதிய மின்சார குமிழ்கள் பொருத்தப்பட்டன.

**சர்வதேச கப்பல்கள் மற்றும் துறைமுக வசதிகள் பாதுகாப்புத் தொகுதி**

இலங்கை கடற்படையினால் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டு அதில் பெரும்பாலானவை பூர்த்தி செய்யப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிலம் மற்றும் கடல் பிரதேசங்களில் இலங்கை கடற்படை வீரர்கள் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## காலி துறைமுகம்

| வகை | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|
| **கிளின்கர்** | 42 |
| **சிமேந்து மொத்தம்** | 01 |
| **சிமேந்து பொதி** | **இல்லை** |
| **ஜிப்சம்** | 04 |
| **ஏனையவை** | 83 |

| | |
|---|---|
| **நங்கூரமிடுதல்கள்** | 106 |
| **துறைமுக எல்லைகளுக்கு அப்பாலான கப்பல்கள்** | 11,461 |
| **உல்லாசப் படகுகள்** | 55 |

# நிதி மீளாய்வு

**வருமானம் (சகல துறைமுகங்களினதும்)**

(துறைமுக விடயங்கள் வெவ்வேறாக)
(ரூபா. மில்லியன்)

| விபரம் | 2014 | 2013 மீள்குறிப்பிடப்பட்ட | விபரம் | 2014 | 2013 மீள்குறிப்பிடப்பட்ட |
|---|---|---|---|---|---|
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம் | 32,375 | 30,509 | கப்பலோட்டம் | 5,303 | 4,779 |
| ஏனைய வருமானம் | 5,116 | 4,215 | கப்பற் சரக்கு ஏற்றுதல்/ இறக்குதல் | 19,078 | 18,474 |
| | | | வாப்பு கையாளல் | 3,920 | 3,633 |
| | | | துறைமுக வசதிகள் | 3,278 | 2,851 |
| | | | ஏனைய சேவை இயக்கங்கள் | 797 | 771 |
| **மொத்த வருமானம்** | 37,492 | 34,724 | உப மொத்தம் | 32,375 | 30,509 |

**இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2014 செலவினம் | 2013 செலவினம் மீள்குறிப்பிடப் பட்ட | (அதிகரித்தல்) / குறைதல் | % |
|---|---|---|---|---|
| சொத்துக்களை பராமரித்தல் | 993 | 1,284 | 291 | 23 |
| எரிபொருள், மின்சாரம், தண்ணீர் | 2,225 | 3,703 | 1,478 | 40 |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி | 3,639 | 3,921 | 282 | 7 |
| மேலதிக நேரம் | 3,372 | 3,274 | (98) | (3) |
| தேய்மானம் | 7,151 | 6,418 | (733) | (11) |
| சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் படிகள் | 9,824 | 9,870 | 46 | 0 |
| ஏனையவை | 2,964 | 2,163 | (801) | (37) |
| **மொத்த செலவினம்** | 30,168 | 30,634 | 466 | 2 |
| வெளிநாட்டு நாணய இலாபம் / நட்டம் | (1,574) | 2,518 | 4,092 | 163 |
| சு.வி.மீது ஒய்வு பெறும் திட்டத்தின் மீதான செலவுகள் | - | - | - | - |
| **அந்நிய செலாவணி நட்டம் மற்றும் சு .வி.ஓ. பெறுதல் அடங்கலான மொத்தச் செலவினம்** | 28,595 | 33,152 | 4,558 | 14 |

## துறைமுகங்களுக்கேற்ப செயலாற்றுகை

## கொழும்பு துறைமுகம்

2014 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் 11,988 மில்லியன் ரூபா இயக்க இலாபம் ஈட்டப்பட்டது. 2013 ஆண்டின் வருமானமான 33,881 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடப்படுகையில் 2014 ஆண்டின் வருமானம் 36,396 மில்லியன் ரூபாவாக இருந்தது இது 2,515 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும். வரி அறவிடப்படுவதற்கு முன்னரான மொத்த செலவினம் 27,383 மில்லியன் ரூபாவாக இருந்ததோடு 2013 ஆண்டின் செலவினம் 31,980 மில்லியன் ரூபாவாகும் இது 14% குறைவாகும்.




## காலி துறைமுகம்

2014 ஆண்டில் காலி துறைமுகத்தில் வரி அறவிடப்படுவதற்கு முன்னரான இலாபமாக 95 மில்லியன் ரூபா பதிவாகி இருந்தது. 2013 ஆண்டில் கிடைக்கப்பெற்ற 478 மில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2014 ஆண்டில் 696 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டதோடு இது 218 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும். வரி அறவிடப்படுவதற்கு முன்னர் மொத்த செலவினம் 601 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2013 ஆண்டின் செலவினம் 574 மில்லியன் ரூபாவாகும் இது 5% அதிகரிப்பாகும்.



## திருகோணமலை துறைமுகம்

வரி அறவிடப்படுவதற்கு முன்னரான நஷ்டமாக 211 மில்லியன் ரூபா 2014 ஆண்டில் திருகோணமலை துறைமுகத்தில் பதிவாகி இருந்தது. 2013 ஆண்டில் கிடைக்கப்பெற்ற வருமானமான 366 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2014 ஆண்டில் 400 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது இது 34 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும். வரி அறவிடப்படுவதற்கு முன்னர் மொத்த செலவினம் 611 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2013 ஆண்டின் செலவினம் 598 மில்லியன் ரூபாவாக இருந்ததோடு இது 2% அதிகரிப்பாகும்.



மீளாய்விற்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.
- துறைமுக ஊழியர்களின் சிறார்களின் நலன்புரி தொடர்பிலான பூரண வசதி கொண்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.
- நிலவும் துறைமுக வசதிகள் மற்றும் செயற்பாடுகள் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் சிறந்த முறையில் அறிந்துகொள்ளும் பொருட்டு "தேசத்துக்கு மகுடம்" தேசிய கண்காட்சி" உட்பட பல கண்காட்சிகளில் இலங்கை துறைமுக அதிகாரசபை பங்கேற்றது.
- சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படை அதன் பணிகளில் கொழும்பு நகர சபைக்கும் கொழும்பு மற்றும் அண்டிய பகுதிகளுக்கும் ஏனைய அவசர சந்தர்ப்பங்களிலும் தனது ஒத்துழைப்பை நல்கியது.
- முல்லேரியாவிலுள்ள மனநோயாளர் வைத்தியசாலையின் இல: 09 நோயாளர் விடுதி, இலங்கை துறைமுக அதிகார சபையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது..

நிறுவனமொன்றின் ஊழியர்கள் அதன் உயிர்நாடி போன்றவர்கள், ஒவ்வொரு நபரினதும் தனித்துவ தன்மையில் வழங்கும் ஒத்துழைப்பின் மீது நிறவனமொன்றின் வளர்ச்சிப் பாதையின் வெற்றி மற்றும் உற்பத்தித்திறன் தங்கியுள்ளது. காலத்துக்குக் காலம் அதன் ஊழியர்களுக்கு புத்தூக்கம் அளிக்கப்படுவதன் மூலம் தமது நிறுவனம் தொடர்பிலான ஆர்வமூட்டப்பட்டு அதன் மூலம் அவர்கள் தமது பூரண ஒத்துழைப்பை நல்கின்றனர்.

அனைத்து அங்கத்தவர்களும் தமது சேவைக்காலத்தினுள் அனுபவம் ஊடாக பெற்றுக் கொள்ளும் தேர்ச்சிகள். பல்வேறு துறைகளின் பிரவேசம், பயிற்சியளிப்பு போன்றவற்றின் ஊடாக நிறுவனத்தின் பயன்பெறும் முறையில் அவரின் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்படுகின்றது. நிறுவனம் உற்பத்தித்திறன் மேலும் விருத்திசெய்யப்படுவதில் தமது சேவைக் காலத்தினுள் ஊழியர்களினால் மேம்படுத்திக் கொள்ளப்படும். அறிவு மற்றும் திறன்கள் மனித மூலதனம் எனப்படும். நிறுவனத்தில் இருக்கும் காலத்தினுள் ஒவ்வொரு ஊழியர்களினதும் தமது திறன்கள் மேலும் வலுப்படுத்திக்கொள்ளப்பட முயற்சி மேற்கொள்ளப்படும். நிறுவனத்தின் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்படுகையின் பிரதான பங்கினை வகிக்கும் திறன்கள், குனாம்சங்கள் , அறிவு மற்றும் சகல ஊழியர்களினதும் தேர்ச்சிகள் மனித மூலதனமாக அடையாளப்படுத்தப்பட முடியும். மனித மூலதனமானது நிறுவனமொன்றின் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தி அதிகரிக்கப்படுகையின் முக்கிய பங்கை வகிக்கின்றது. எனவே அனைத்து நிறுவனங்களும் தத்தமது ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காக நிதி மற்றும் வளங்களை முதலீடு செய்கின்றனர்.

உற்பத்தியொன்றின் பிரதான பாகமாக எந்தவொரு வர்த்தக துறையையும் கையாள்வதற்கு மனித மூலதனம் மிகவும் முக்கியமாகும். துறையுடன் தொடர்புபடும் திறன்கள், அனுபவம் மற்றும் கல்வியறிவு கொண்ட நபர்களை அடையாளம் காணப்படுதலின் குறைபாடானது முறையாக திட்டமிடப்பட்ட கம்பனியொன்றாக இருந்தாலும் முயற்சிகள் வீண் போகக் கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு நிறுவனத்தினதும் பிரதான நோக்கம் அதன் ஊழியர்களுக்கு பயிற்சியளித்தலாக இருப்பதோடு பிற்காலத்தில் அவர்கள் செயற்திறனான வளங்களாக மாற்றம் பெறுகின்றனர். மனித மூலதனம் நிர்வகிக்கப்படும் போது நிறுவனமொன்றின் உற்பத்தித்திறன்களில் முக்கிய பணியாற்றும் ஊழியர்கள் மிகவும் முக்கிய வளமாகக் கருதப்படுவர்.

2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத, தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத தரங்கள் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர்த் தொகை 9,493 ஆகும். பல்வேறு தெர்ச்சிகள், அறிவு மற்றும் குணாம்சங்களைக் கொண்டுள்ள அவர்கள் சுறுசுறுப்புடனும் செயற்திறனுடம் நிறுவனத்தின் நோக்கங்களை அடையப் பெறுதலில் ஈடுபடுகின்றனர்.

மனித மூலதனம் எனும் விடயக்கத்திற்கு கொடுத்துள்ள வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்திற்கு பயன்மிகு ஊழியர்கள் உள்ளீர்க்கப்படும் பொருட்டு தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தகைமைகள் உள்ளடக்கப்பட்ட அனைத்து பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை விருத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அநேக ஊழியர்கள் பல்வேறு துறைகளில் உயர் தகைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கு விருத்தி செய்யப்படுவதற்கு உதவும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு இணைந்து தயாரித்துள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் சலுகை ரீதியான அடிப்படையில் மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டன. தற்போது நடைமுறையிலிருக்கும் தொழில்சார் கொடுப்பனவு செய்யும் வழங்கும் நாளுக்கு நாள் மனித மூலதனம் அதிகரிக்கப்படுவதற்கான காரணமாக அமைகின்றது.

ஊழியர்கள் செயற்திறனான முறையில் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மேம்படுத்தும் நோக்கின் செயற்பாட்டிற்கு பங்களிப்பினை பெறுவதற்கு ஊழியர்களின் ஆற்றல்கள் மற்றும் குறைபாடுகளை அடையாளம் காணும் ஊழியர்களின் செயலாற்றுகை மதிப்பீடு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அறிவின் மைய நிலையமான மஹபொல பயிற்சி நிலையம் முன்னர் மேற்கொண்டவாறு தற்போது நிறுவனத்திலுள்ள ஊழியர்களின் அறிவு, உளப்பாங்கு மற்றும் திறன்கள் விருத்தி செய்யப்படும் வகையில் உள்ளக மற்றும் வெளி வளவாளர்களின் உதவியோடு 2014 ஆண்டினுள் பல விரிவுரைகள் . மாநாடுகள், பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

புதிய நடைமுறைகள், தொழில்நுட்பம் மற்றும் குறிப்பாக தொழிலில் ஈடுபட்டிருக்கும் இடத்தில் குழு உணர்வு தொடர்பான நல்லெண்ண நோக்கு போன்றவற்றில் ஊழியர்களின் அறிவு விருத்தி செய்யப்படும் நோக்கில் பகுதிகளில் நூலக வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

அதன் ஊழியர்கள் தேர்ச்சிபெற்ற முகாமையாளர்களாகுவதற்காக உயர் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல தொழில்சார் நிகழ்ச்சிகளுக்கான அனுசரணை வழங்குதலும் தொழில்சார் நிறுவனங்களுக்கு அங்கத்துவக் கட்டணங்கள் செலுத்தலும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டன.

புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்துதலின் மூலமும் கணனித் தொகுதியூடாகவும் அன்றாட பணிகளை தங்கு தடையின்றி மேற்கொள்வதற்கு வழிவகுத்து அதன் ஊழியர்களினது அறிவு மற்றும் திறன் அபிவிருத்தியின் மூலம் அவர்களுக்கு புதிய உலகிற்கு பிரவேசிப்பதற்கான வழிகளையும் ஏற்படுத்தியுள்ளது.

மனித மூலதனத்தில் உச்ச பயன்பெறுவது தொடர்பில் பல்தேர்ச்சி திறன்களிலான பதவிகள் ஏற்படுத்தப்பட்டு ஊழியர்கள் ஒரே கடமைகளில் ஈடுபடும் நிலைமை குறைக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து செயற்பாடுகளும் நல்லெண்ண நோக்கில் அமைந்த பயன்மிகு மற்றும் செயற்திறன் கொண்ட ஊழியர்கள் உருவாக்கப்படுவதில் துணை புரியும்.

வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை. தொடர்பில் அவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் செய்தல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணியாற்றப்படுவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏதாவது வழுகல் நிலையிருப்பின் விசேடமாக கையாளல் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்பார்க்கப்படும் செயற்பாடு எட்டப்படுவதற்காக அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டு அதன் ஊடாக நல்லாட்சிக்கான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

நிதிசார்ந்த மற்றும் கையாளல் செயற்பாடுகள் அறிக்கை செய்யப்படும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் எவ்வகையில் நிறைவேற்றப்படுகின்றதென்பதை முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் உயர் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். இதற்கு உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது. அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- ✦ பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- ✦ உள்ளக கட்டுப்பாடு
- ✦ உள்ளக கணக்காய்வு
- ✦ ஒழுக்காற்று விதிமுறைகள்
- ✦ பொது திறைசேரி, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடனான தொடர்பு
- ✦ சாசனம் மற்றும் நீதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- ✦ அரச தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அரச தொழில் முயற்சி நல்லாட்சிக்கான வழிகாட்டல்களில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு எடுத்த அமைச்சரவையின் தீர்மானம் பின்பற்றப்பட்டு கைத்தொழிலில் உயர் போட்டித்தன்மை மற்றும் செயற்திறன் மிக்க அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் நெகிழ்வுத்தன்மையும், சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிர்வாகம் தொடர்பான யாப்பொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல்படுத்தப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்**

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் கைத்தொழிலின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

- ✦ துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பற்றுறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது, நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்
- ✦ சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.
- ✦ நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.
- ✦ சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும், உப தலைவருக்கும், முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 13-17 பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு**

- ✦ மூலோபாயமான நோக்கம், கொள்கைகள், குறிக்கோள்கள் போன்றவற்றினை ஸ்தாபிப்பதன் மூலம் கட்டளைகளை வகுத்தல்.
- ✦ நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.
- ✦ போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.
- ✦ நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.
- ✦ சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை இனம்கண்டு தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல் இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான குறித்த நிலைமை அறிக்கை செய்யப்படும். மேற்பார்வை செயல்முறை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென்பதில் உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டம் நடாத்துவதோடு குறிப்பிட்ட வருடத்தில் பணிப்பாளர் சபையானது 12 முறை கூடியது. பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் முன்னெடுத்துச்

செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் காலத்திற்கேற்ப பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயற்பாட்டு, சுட்டெண்களை மீளாய்வு செய்தல், பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள் அங்கீகரித்தலும் அடங்கிருந்தது.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்கு கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழுவினையொத்த உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டன.

**முகாமைத்துவக் குழு**

தலைவர், உப தலைவர் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர்.

அன்றாட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் செயன்முறை ரீதியான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழு பல்வேறு பாகங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டது. அதன் கூட்டங்களின் போது சகல கொள்கை சார்ந்த விடயங்கள் போன்று தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துதற்கு முன்னர் அவை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் உடன்பாடு பெறுவதற்கு முன்னரும் துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. தீர்மானங்கள் முன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதத்திற்கு இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் எட்டு (08) கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கணக்காய்வுக் குழு**

பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான பொது திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்களையும் இக்குழு கொண்டுள்ளது.

கணக்காய்வுக் குழுவினால் கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு விதிமுறைகளின் வெற்றிகரமான செயற்பாடு ஆராயப்பட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுக் கடிதங்கள் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு அவைகளின் பரிந்துரைகள் பகுதித் தலைவர்களினால் அனுசரிக்கப்படும்வாறு பணிப்பாளர் சபை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் அதிகாரசபைக்கு நிதியினாலும் இயக்க செயற்பாடுகளினாலும் நிலவும் இடர்பாடுகள் சிறந்த முறையிலான வரைவிலக்கண செயற்பாடுகளினூடாக அடையாளம் காண்பதற்கும் அவ்வாறான இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் செயற்பாட்டை அதிகார சபை கொண்டுள்ளது.,முகாமைத்துவம், ஊழியர்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களினது நலன்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் வளங்களினது உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதற்குமான நிதி மற்றும் கையாளல் தொடர்பில் நிலவும் விதிகள், முறைமைகள் வலுப்படுத்தப்படுவதற்காக நாள் தோறும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் இக்குழுவின் பொறுப்பாகும்.

**உள்ளக கட்டுப்பாடு**

எந்தவொரு அமைப்பிலும் செயற்திறன் மிக்க முகாமைத்துவத்திற்காக திறனாக இயங்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடு முறையொன்று இருப்பது அவசியமாகும். அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் மீளாய்வு தொடர்பான சகல பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சாரும். பின்பற்றப்பட வேண்டிய கொள்கை முறைகள் பற்றியதில் விரிவான ஒழுங்கு விதிகள் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. வர்த்தக ரீதியான நோக்கங்களை அடைவதற்கு இடையூறாக இருக்கும். இடர்களுக்கு முகம் கொடுப்பதற்காக செயற்பாட்டு முறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அதிகாரசபையின் சொத்துக்களை அனுமதியின்றி பாவித்தல், கைமாறுதலைத் தவிர்த்தல், முறையான அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் நிகழும் தகவல்களின் பிழையின்மை தொடர்பாக தேவையான அளவு சான்றுகளையும் இக்குழு வழங்கும்.

அதிகாரசபையின் அமைப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் அதன் திறன் நேர்மைத் தன்மை, சீரிய நிலைமை சூழலை மற்றும் சிறந்த தொடர்பாடல் சூழல் பேணப்படுதலின் அதிகாரசபையின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு உள்ளக கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாகும்.

**உள்ளக கணக்காய்வாளர்**

பூரண தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் கணக்காய்வுப் பகுதியின் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்பகுதி, பூரண சுதந்திரமாக இயங்குகின்றது. தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் நேரடியாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தலைவரினதும் கணக்காய்வுக் குழுவின் அறிவுரைகளுக்கும் இணங்க இப்பகுதிக்குரிய விடய பணிகள் தயாரிக்கப்படுகின்றன. விடய உள்ளடக்கம் சம்பந்தப்பட்ட திருத்தங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. பிரதானமாக முழு உள்ளக கட்டுப்பாடு தொகுதி கணக்காய்வுப் பகுதியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதேபோல் கணக்காய்வுக் குழு தேவையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. உள்ளக கணக்காய்வானது, உள்ளக கட்டுப்பாடு முறைகளின் வினைத்திறன் மற்றும் துரிதத்தன்மை தொடர்பான குறிக்கோள்கள் வெளிக்கொணரப்பட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக செயன்பாட்டுத் திட்டங்கள் மதிப்பிடப்படும்.

**ஒழுக்கச் சட்ட விதிகள்**

ஏற்றுக்கொள்ளக் கூடிய உயர் மட்ட ஒழுக்க நடைமுறை பேணப்படுதலுக்கு வழிகாட்டுவதற்காக ஒழுக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சகல பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களினால் தமது அன்றாட கடமைகள் நிறைவேற்றப்படுகையில் , தமது செயற்பாடுகளிலும் அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கும் தோற்றப்பாட்டிற்கும் பாதிப்பேற்படுத்தும் சந்தர்ப்பங்களில் உயர் நிலையிலான ஒழுக்க நெறியுடன் நேர்மையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதலை அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

**ஒழுக்கச் சட்ட விதிகளின் அடிப்படைகள்**

- சகல நடவடிக்கைகளின் போது நேர்மை நியாயம் மற்றும் பக்க சார்பின்மை பேணுதல்
- சட்டம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு கீழ்ப்படிதல்
- நிறைவேற்றப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அந்தரங்கத்தன்மை.
- அதிகாரசபைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அல்லது தீய விளைவுகள் ஏற்படக்கூடியவாறு செயற்படுவதைத் தவிர்த்தல்.

**அனுகூலமான திட்ட வரம்பு மற்றும் சாசன சட்ட தேவைகளுக்கு உட்படல்**

எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதானது இ.து.அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இந்நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு

அதிகாரசபையானது எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கும் ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு பகுதிகள் ஊக்கத்துடன் செயற்படுகின்றன.. அதற்கு மேலதிகமாக சட்டப் பகுதி அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கருமங்கள் சட்ட நியதிகளுக்கு ஏற்ப இடம்பெற உறுதிப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்,** மற்றும் **கப்பற்றுறை அமைச்சு மற்றும் நிதியமைச்சின் பொது திறைசேரியுடனான தொடர்பு**

உரிய வழியில் மற்றும் மூலோபாயமான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், அமைச்சின் செயலாளர், மூலோபாய தொழில் முயற்சி முகாமைத்துவ (SEMA) நிறுவனத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர். அதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் பொது திறைசேரியின் தேவைக்கேற்ப மூன்றாண்டு காலத்திற்கான வர்த்தகத் திட்டம், நிதி மற்றும் ஏனைய இயக்க செயற்பாட்டு அறிக்கை உள்ளடங்கலான முழுமையான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் அதிகாரசபையினால் முன்வைக்கப்படும்.

**குறிப்பிடப்பட்ட பங்குதாரர் தொடர்பான வெளிப்பாடு**

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் தரப்பினர் சம்பந்தமாகவும் தனிப்பட்ட அக்கறை அல்லது உறவு தங்களிடத்தில் இல்லயென பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி அறிவிக்கின்றது.

**பொறுப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் அதிகாரசபையின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயத் தன்மையினைப், பிரதிபலிப்பதெனவும் அவ்வறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதென்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

**எதிர்காலம்**

உண்மைப் பெறுமதியுடன் ஒட்டுமொத்த திரட்டிய நிர்வாகம் நிலைத்து நிற்பதற்கு கண்மூடித்தனமான திருப்தியடையக்கூடிய முறைகள் மற்றும் கொள்கைகள் போன்றவற்றில் அன்றி உண்மையான முறையில் மக்கள் நம்பிக்கையினை வெல்லக் கூடிய உயர்ந்த செயல்பாட்டுடன் நியாய முறையில் பேணிச் செல்வதன் மூலம் நிலை நாட்டமுடியும் என்பதை இலங்கை துறைமுக அதிகாரசபை நம்புகின்றது.

# துறைமுக புள்ளிவிபரங்கள்

## கொழும்புத் துறைமுகம்

### துறைமுக பரிமாணம்

### துறைமுகப் பிரதேசம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 184.6 ஹெக்டயார் |
| தென் மேற்கு அலைதாங்கியின் நீளம் | 810 மீட்டர் |
| வட மேல் அலைதாங்கியின் நீளம் | 330 மீட்டர் |
| வட கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 230 மீட்டர் x 16 மீட்டர் |
| மேற்கு நுழைவாயில் | 190 மீட்டர் x 13 மீட்டர் |

**சேவைக் காலம்**

வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால சேவை அடிப்படையில் கொழும்புத் துறைமுக வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன

| 2014 இல் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவு | |
|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 89.5% |
| பிரித்த மொத்தம் | 0.8% |
| உலர் மொத்தம் | 3.5% |
| திரவ மொத்தம் | 6.2% |

## புதிய கொழும்பு தெற்கு துறைமுகம்

### துறைமுகப் பிரதேசம்

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 192.0 ஹெக்டயார் |
| தென்மேற்கு அலைதாங்கியின் நீளம் | 5,140 மீட்டர் |
| வடமேற்கு அலைதாங்கியின் நீளம் | 1,550 மீட்டர் |
| பிரதான நுழைவாயில் | 570 மீட்டர் x 18 மீட்டர் |

## காலி துறைமுகம்

துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 15.3593 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் | 140 மீட்டர் |
| நிலப் பிரதேசம் | 16.414 ஹெக்டயார் |
| அங்கீகார உட்பிரவேச கால்வாயின் நீளம் | 130 மீட்டர் |
| அங்கீகார ஆழம் | 7.3 மீட்டர் |

**வேலை நேரங்கள்**

**வேலை நேரங்கள்**

மே தினம் நீங்கலாக வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய வேலை அடிப்படையில் இடம் பெறும். கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே. இடம்பெறும்.

**வழி விலகும் காலம்**

கிழக்கிலிருந்து மேற்கிற்கு விழும் பிரதான கடல் மார்க்கம் மார்க்கத்திலிருந்து எமது பயணக் காலம் எதுவுமில்லை.

**நங்கூர வசதிகள்**

**மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் – 05**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| குளோசன்பேர்க் ஜெட்டி | 420 | 8.9 |
| புதிய பாலம் | 162 | 8.9 |
| புதிய பாலம் (குறுக்காக) | 84 | 8.9 |

**களஞ்சியசாலை வசதிகள்**

| பெயர் | சராசரி உயரம் (அடி.) | பரப்பளவு (ச.அ) | கொள்ளளவு (கியு. அடி) | அடுக்கும் உயரம் (அடி) |
|---|---|---|---|---|
| இல. 01 | 23 | 13,333 | 306,667 | 10 உயரம் |
| இல. 02 | 23 | 40,000 | 920,000 | 10 உயரம் |

## திருகோணமலை துறைமுகம்

### துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 1,630 ஹெக்டயார் |
| உட் பிரவேச கால்வாய் | 500 மீட்டர் |
| நில பிரதேசம் | 2,254 ஹெக்டயார் |

### வேலை நேரங்கள்

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் மாத்திரம் கையாளல் மேற்கொள்ளல் தவிர்ந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால வேலை அடிப்படையில் கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### நங்கூரத்தள வசதிகள்

**இலங்கை துறைமுக அதிகார சபையின் நங்கூரத்தளங்கள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| அஷ்ரப் இறங்குதுறை | 250 | 12.5 |
| பக்க துறைமேடைகள் (அஷ்ரப் இறங்குதுறை) | 90 X 2 | 8.5 |
| மட்கோ துறைமேடை | 45 | 3.5 |
| ரீரீஏ துறைமேடை | 190 | 2.0-4.0 |
| சிலோன் துறைமேடை | 50 | 2.5 |
| நகர துறைமேடை | 50 | 2.5 |
| வீஎஸ்ஓ துறைமேடை | 60 | 3.0 |
| பழைய நகர துறைமேடை | 25 | 1.5 |
| அஷ்ரப் இறங்குதுறை | 60 | 2.0 |

**ஏனைய துறைமேடைகள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| பிரிமா துறைமேடை (உள்ளக) | 122 | 5.9 |
| பிரிமா துறைமேடை (வெளியக) | 227 | 14.3 |
| பிரிமா துறைமேடை (பல்வித) | 170 | 10.3 |
| டோக்கியோ சீமெந்து துறைமேடை | 160 | 9.3 |
| எரிபொருள் துறைமேடை (பெற்றோலியம்) | 200 | 9.75 |

குதங்கள் பற்றிய விபரங்கள் - ரீரீஏ

| குதம் | பரிமாணம் (அடி | சராசரி உயரம் (அடி) | பரப்பளவு (ச.அடி) | அடுக்கும் உயரம் (அடி) | கொள்ளளவு (அடி) |
|---|---|---|---|---|---|
| இல. 01 | 75 X 34 | - | 2,550 | 12 | 30,600 |
| இல. 02 & 03 | 90 X 70 | 15 | 6,300 | 12 | 75,600 |
| இல. 04 | 190 X 95 | 19 | 18,050 | 14 | 252,700 |
| இல 05 A | 150 X 110 | 25 | 16,500 | 15 | 247,500 |
| இல. 05 B | 150 X 80 | 15 | 12,000 | 12 | 144,000 |
| இல. 06 | 300 X 110 | 20 | 33,000 | 15 | 495,000 |
| இல. 07 | 96 X 36 | - | 3,456 | 12 | 41,472 |

## மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் – கட்டம் 1

### துறைமுக பரிமாணம்

### துறைமுகப் பிரதேசம்

| நீர்த் தடாகப் பகுதி | 56.7 ஹெக்டயர் |
|---|---|
| மேற்கு அலைதாங்கியின் நீளம் | 988 மீட்டர் |
| கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 311 மீட்டர் |
| பிரவேச கால்வாய் | 210 மீட்டர் * 16 மீட்டர் |
| திருப்பும் வட்டம் | 600 மீட்டர் |

### துறைமேடையின் நீளம்

| பொதுவான கப்பற் சரக்கு துறைமேடை | 600 மீட்டர் |
|---|---|
| சேவைத் துறை மேடை | 105 மீட்டர் |
| எண்ணெய் துறை மேடை 1 | 310 மீட்டர் |
| எண்ணெய் துறை மேடை 2 | 300 மீட்டர் |
| நீர்த் தடாக ஆழம் | 17 மீட்டர் |
| கப்பல் வடிவம் | 100,000 DWT |

1505 போர்த்துக்கேயரினால் கடற்படைத்தளமாக / துறைமுகமாக உபயோகிக்க ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகிற்கு கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை.

1875 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆந் திகதி தென்மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல்.

1882 கொழும்புத் துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக “ஹாபர் போர்ட்” என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல்.

1885 1285 மீட்டர் நீளமான தென்மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்

1898 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1899 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல்.

1906 814 மீட்டர் நீளமான “ஐலன்ட்” அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1906 உலர் துறைமேடையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்படல்

1909 உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல். (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.)

1912 தற்போது ஜய கொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும் 18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1912 தென்மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல்.

1913 துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல்.

1922 பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல்.

1950 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள், 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அண்மித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1954 தென்மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதனால் அது “எலிசபெத் இராணி இறங்குதுறை” எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய“கோதிக்” எனும் கப்பலாகும்.

1956 17 கரையோர நங்கூரத்தளங்கள் அண்மித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல்.

1958 கொழும்புத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்படல்.

1964 காலி துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1967 துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல்.

1967 திருகோணமலைத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1979 துறைமுக ஆணைக்குழு, துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல்.

1980 ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்புத் துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல்.

1980 எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1982 முதலாவது "கன்ட்றி" பாரம் தூக்கியான "ரன்கோ 80" சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1982 ஜப்பானின் வ/ப பென்றாஓசன் வக்கச்சிக்கு" ஒன்றிணைந்தவியாபாரத்துடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல்.

1983 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 02 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள்வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 ஹிற்றாச்சி வகையின் 04 றான்ஸ்பர்பாரம் தூக்கிகள் எலிசபெத் இராணி இறங்குதுறை நங்கூரத்தளத்தின் சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1985 ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

இலங்கை பொது திறைசேரி,அரசாங்கத்துடன் தொடர்புபடும் நிறுவனங்கள்,உப கம்பெனிகள், துணைக் கம்பெனிகள் மற்றும் முக்கிய முகாமை நபர்கள் அதிகாரசபையுடன் தொடர்புபடும் தரப்பினர்களில் உள்ளடங்கும்

**38.1 பூர்வாங்க முகாமைத்துவ சபையுடனான கொடுக்கல் வாங்கல்**

இலங;கை கணக்கீட்டு LKAS 24 நியமங்களுக்கேற்ப "சம்பந்தப்பட்ட தரப்பினர்களை வெளியிடல்" திட்டமிடுதல் மேற்பார்வை ஏதாவதொன்றின் செயற்பாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிர்வகிக்கப்படுவதற்காக பூர்வாங்க முகாமைத்துவ சபை இதற்கான பொறுப்புக்களை வகிக்கின்றது. இதன்படி நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களைக் கொண்ட பணிப்பாளர் சபை பூர்வாங்க முகாமைத்துவ சபையாக வகையீடு செய்யப்பட்டுள்ளது.

| பூர்வாங்க முகாமைத்துவ சபையுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு | 2014 | 2013 |
|---|---|---|
| | | மீள் குறிப்பிடப்பட்ட |
| சம்பளம் மற்றும் ஏனைய குறுகியகால உழியர்களுக்கான அனுகூலங்கள் | 22,611,050 | 21,423,015 |
| கால எல்லைக்குள் வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணம் | - | - |
| செலுத்தப்பட வேண்டிய மீதிகள் - கடன் மற்றும் முற்பணம் | 1,066,280 | 1,666,400 |

**38.2 சம்பந்தப்படும் தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாரசபையினால் பேணப்பட்டு வரும் விசேட சம்பந்தப்படும்தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு

| நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பணிப்பாளர்களின் பெயர்கள்/ பிரதிநிதிகள் | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | பெறப்பட வேண்டியுள்ள மீதி |
|---|---|---|---|---|---|
| இலங்கையின் பொதுத்திறைசேரி | பிரதான பங்களிப்பு | சேமசிங்க அவர்கள் | வழங்கப்பட்ட கடன் | - | |
| | | | மீள் செலுத்தப்பட்ட கடன் | 5,501,350,515 | |
| | | | கடன் செலுத்தப்பட்ட வட்டி | 1,114,299,162 | |
| அரசுடன் தொடர்புபடும் நிறுவனங்கள் | சம்பந்தப்படுபவை | திரு.ஜகத்.பீ. விஜேவீர | வழங்கப்பட்ட சேவைகள் | 205,406,203 | |
| | | திரு.அனுராத விஜேகோன் | வழங்கப்பட்ட சேவைகளுக்கான உடன்பாடுகள் | 183,287,624 | 317,682,588 |
| | | | பாதுகாப்பு வைப்புக்கள் வைத்தல் | 60,739,961 | 60,739,961 |
| | | | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சலைகள்அமைச்சிற்கான எரிபொருள் வழங்குதல் | 1,199,548 | |
| இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் | தொடர்புபடும் கம்பெனி | கலாநிதி பிரியத் பீ விக்ரம | காப்பாளர் சேவைக்கான செலுத்துதல் | 1,396,720 | |
| | | | சம்பளம் வழங்கல் | 87,955,337 | |
| ஆலோசனைக் கம்பெனி | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 173,130,074 | |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 954,716 | |
| | | | எரிபொருள் வழங்கல் | 97,122.93 | |
| | | | வாகங்களை வாடகைக்கு எடுத்தல் | 586,300 | 48,800 |
| | | | அதிகாரசபையினால் விற்கப்பட்ட அகற்றப்படும் பொருட்கள் | 421,364.45 | |
| ஜய கொள்கலன் முனையம் | தொடர்புபடும் கம்பெனி | கலாநிதி பிரியத் பீ விக்ரம | | | |
| | | திரு.இந்திக கருணாஜீவ | நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கட் | 149,627,448 | (14,849,151) |
| | | கப் நிஹால் கெப்பிட்டிபொல | காப்பாளர் சேவைக்கான கொடுப்பனவு | 2,250,000 | |
| | | திருமதி சிராணி வன்னியராச்சி | எரிபொருள்வழங்கல் | 1,533,379 | |
| | | | வைத்தியக் காப்புறுதி | 56,650 | (62,904.82) |
| வ/ப சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் தனியார் கம்பெனி | துணைக் கம்பெனி | கப் நிஹால் கெப்பிட்டிபொல | கிடைக்கப்பெற்ற வாடகை | 373,682,687 | 28,069,119 |
| | | டாக்டர் சஞ்ஞயசேதர செனரத் | கிடைக்கப்பெற்ற இறைமைக் கட்டணம் | 741,453,587 | 68,062,310 |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 715,770,947 | |
| | | | மெகா துறைமுக உபகரண பராமரிப்பு | 750,000 | |
| வ/ப லங்கா நிலக்கரி கம்பெனி | துணைக் கம்பெனி | கப்டன் ஆர்.ஏ.ஜயவிக்ரம | ஆண்டினுள் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறவில்லை | | |
| கொழும்பு சர்வசே கொள்கலன் முனைய கம்பெனி (CICT) | துணைக் கம்பெனி | கலாநிதி பிரியத் பீ விக்ரம | கிடைக்கப்பெற்ற வாடகை | 997,407,701 | 82,041 |
| | | கப் நிஹால் கெப்பிட்டிபொல | சீ.ஐ.சீ.ரீ யில் கிடைக்கப்பெற்ற நிர்வாக கட்டணங்கள் | 1,687 | |
| | | | மெகா துறைமுக உபகரண பராமரிப்பு | 750,000 | |
| | | | கிடைக்கப்பெற்ற இறைமை வரி | 310,901,076 | 21,284,747 |
| | | | கப்பல் கையாளல் | 7,043,341 | |
| | துணைக் கம்பெனி | கலாநிதி பிரியத் பீ விக்ரம | வாங்கப்பட்ட பங்குகள் | 1,012,500 | |
| மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனி | | திரு.இந்திக கருணாஜீவ | செலுத்தவேண்டியுள்ள முகாமைத்து கட்ட | 408,657,042 | |
| | | கப் நிஹால் கெப்பிட்டிபொல | எரிபொருள்வழங்கல் | 16843.2 | |
| | | திருமதி சிராணி வன்னியராச்சி | | | |
| | | திரு உபாலி சொய்சா | | | |

**நிதி இடர்பாட்டு முகாமைத்துவம்**

நிதிக் கூற்றுக்களின் பாவனை காரணமாக அதிகாரசபைக்கு பின்வரும் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

1. கடன் இடர்பாடு
2. ஒப்புரவு இடர்பாடு
3. சந்தை இடர்பாடு (நிதி மற்றும் வட்டி விகித இடர்நேர்)

அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் சமனான பங்குகளிலான முதலீடுகள் ( ஆவண மற்றும் ஆவணப்படுத்தப்படாத), கடன் முறிகளின் மீதான முதலீடுகள், காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதி மற்றும் நிதிசார் சந்தை முதலீடுகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும். காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதிசார் சந்தைகளிலான முதலீடுகளின் பிரதான நோக்கம் இயக்கங்களுக்கான ஒப்புரவினை அதிகரித்தலும் பேணிச் செல்வதும் ஆகும். சமனான பங்குகளிலான மற்றும் கடன்முறி காப்புறுதிகளிலான முதலீடுகள், மூலோபாய முதலீடுகளாக இருப்பதோடு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் போன்ற வேறு நிதிசார் ஆவணங்களும் அதன் வியாபார நடவடிக்கைகளின் போது நேரடியாக எழும் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவையும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வசமுள்ளன.மேலும் துறைமுக விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ள கடன்களுக்கான வட்டிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

## 1. கடன் இடர்பாடு

கடன் இடர்பாடு என்பது வாடிக்கையாளரொருவர் உடன்படிக்கை மீதான பொறுப்புக்களுக்கு செலுத்தத் தவறும் பட்சத்தில் , அதிகாரசபைக்கு ஏற்படக் கூடிய நிதிசார்ந்த நஷ்டம் கடன்இடர்பாடாகும். இலங்கை படைகள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு கடன் முறிகள் உள்ளிட்ட வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கிடைக்கப்பெற வேண்டியவற்றிலிருந்து பிரதானமாக இது எழுகின்றது.

## வியாபார கிடைக்கப்பெறுதல்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையானது கப்பல் முகவர்கள் மற்றும் அரச நிறுவனங்களோடு பிரதானமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. சென்ற கால அனுபவமும் கப்பல் முகவர்களினது நிதி சார்ந்த சான்றுறுதி போன்ற ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு கப்பல் முகவர்களின் கடன் நிலைமையை முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது. இதற்குப் புறம்பாக முகாமைத்துவ குழுவிலும் பணிப்பாளர் சபை கூட்டத்திலும் இருக்கும் அடிப்படையின் மீது செலுத்துவதற்குள்ள நிலுவைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பில் ஏற்படும் நஷ்ட மதிப்பீடுகளில் காண்பிக்கப்படும் பாதிப்பேற்படுத்துதல்களுக்கான (நிதிசார் கூற்றுக்களின் 2.11 ஆம் குறிப்பு விபரத்தை பார்க்கவும்.)ஏற்பாடுகள் இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. விசேட வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறாக மதிப்பிடப்படுதலில் அவர்களுக்கு தனியாக ஏற்படும் பாதிப்புகளுக்கான நஷ்டங்கள் விசேடமில்லாத வாடிக்கையாளர்களுக்கான ஒட்டு மொத்த பாதிப்புகளின் ஏற்பாடுகள் பிரதான காரணிகளாகும். செலுத்துதல் முறையின் வரலாற்று தரவுகளைக் கொண்டு ஒட்டுமொத்த பாதிப்பு ஏற்பாடுகளின் நஷ்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட பாதிப்பேற்படுத்தும் கொள்கைக்கேற்ப பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்கள் அளவீடு செய்யும் பொருட்டு இலங்கைப் படைகள், ஏனைய அரச நிறுவனங்கள், வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்ட கப்பல் முகவர்கள் மற்றும் விசேட கப்பல் முகவர்கள் தொடர்பில் தனிப்பட்ட வகையில் கலந்தாலோசிக்கப்பட்டன. ஏனையவை ஒட்டுமொத்தமாகவும் கலந்தாலோசிக்கப்பட்டன.. வியாபார கிடைக்கப்பெற வேண்டியவை மற்றும் பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்களுக்கான ஏற்பாடுகளின் விபரங்களுக்கு தயவு செய்து நிதிசார் கூற்றுக்களின் 12 ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

### ஏனைய நிதிசார் சொத்துக்கள்

காலத்திற்கேற்ற வைப்பு நிதி, காசு,காசு சம மதிப்புக்கள் மற்றும் கடன் முறிகளின் மூலதன முதலீடுகளினால் அதிகாரசபை எதிர்கொள்ளும் ஏனைய நிதிசார் சொத்துக்களிலிருந்து எழும் கடன் இடர்பாட்டினுள் இது அடங்கும். இந்த நிதிசார் ஆவணங்களில் முன்கொண்டு வரும் நிதிக்குச் சமனான உச்ச வெளிப்பாட்டுடன் தரப்பினர்களினது உடன்பாடுகளின் புறக்கணித்தல்களின் மீது எழும் கடன் இடர்நேர் நிலைமையினை அதிகாரசபை நிர்வகிக்கின்றது. அரச நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் பிரதானமாக அதில் நிதி ஈடுபடுத்துதலின் மூலம் இந்த நிதிசார் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரசபை அதன் கடன் இடர்நேர் நிலைமையினை முகாமைத்துவம் செய்கின்றது.

### 2. ஒப்புரவு இடர்பாடு

அதிகாரசபைக்குரிய நிதிசார் பொறுப்புக்களை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாமல் போகுதல் ஒப்புரவு இடர்பாடு எனப்படும். பொதுவான மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் பொறுப்பேற்க முடியாத நஷ்டம் எதிர்நோக்காமல் அல்லது அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கு பாதிப்பேற்படுத்தாத முறையில் கவனம் எடுக்க முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் உரிய நேரத்தில் நிதி செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் செலுத்தப்படுவதற்கு போதுமானளவு நிதி வைத்திருத்தல் அதிகாரசபையின் ஒப்புரவு முகாமைத்துவம் செய்யும் முறையாகும்.

வருடந்தோறும் இயக்க காசுப் பாய்ச்சல் மற்றும்( மீண்டு வரும்/ வரவு செலவு) மூலதன வரவு செலவுகளின் முன்மொழிவுகள் தயார் செய்யப்படுகின்றன. இயக்க தேவைப்பாடுகளுக்குப் போதுமான நிதி அதிகாரசபையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீண்டு வரும் வரவு செலவு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டும் ஒப்புரவு தேவைப்பாடுகளும் நிதிப் பகுதியினால் கண்காணிக்கப்படுகின்றது. அறிக்கைகள் தயாரிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் ரூபா (9,552,499,055/= (2013 ரூபா 9,625,791,186) விற்கு அதிகாரசபையினால் காலத்திற்கேற்ற வைப்புக்கள், குறுகிய கால அரசாங்க பிணைமுறிகள் மற்றும் ஏனைய ஒப்புரவு சொத்துக்கள் பேணிச் செல்லப்பட்டன.

உடன்பாடுகளின்படி முதிர்வடையும் திகதியில் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதி நாளின் கால எல்லை அடிப்படையாகக் கொண்ட அதிகாரசபையின் நிதிசார் பொறுப்புக்களினது முதிர்ந்த பகுப்பாய்வுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன. கழிவு கிடைக்கப்பெறாத உடன்பாட்டின் மீதான காசுப் பாய்ச்சல்கள் அட்டவணையின் பெறுமானங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன

| நிதிசார் பொறுப்புக்கள் | 2014 டிசெம்பர் 31 | | | 2013 டிசெம்பர் 31 | | |
|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்குக் குறைந்த | வருடத்திற்குக் கூடிய | மொத்தம் | வருடத்திற்குக் குறைந்த | வருடத்திற்குக் கூடிய | மொத்தம் |
| கடன் பெறுதல்கள் - அரசாங்கம் | 11,431,163,826 | 194,839,738,496 | 206,270,902,322 | 12,135,994,848 | 176,489,531,501 | 188,625,526,349 |
| கடன் பெறுதல்கள் - நிதி நிறுவனங்கள் | 1,986,523,771 | 9,981,938,306 | 11,968,462,077 | 1,654,574,656 | 5,496,655,307 | 7,151,229,964 |
| வர்த்தக மற்றும் ஏனைய கடன் உரிமையாளர்கள் | 388,100,534 | - | 388,100,534 | 1,184,871,332 | - | 1,184,871,332 |
| மொத்தம் | 13,805,788,131 | 204,821,676,802 | 218,627,464,983 | 14,975,440,836 | 181,986,186,808 | 196,961,627,644 |

### 03. சந்தை இடர்பாடு

அதிகாரசபையின் வருமானத்திற்கு அல்லது நிதிசார் ஆவணங்களில் கொண்டு வரப்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள பெறுமானத்திற்கு தாக்கமேற்படுத்தும் வெளிநாட்டு பரிமாற்ற விகிதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் போன்ற சந்தை விலைகள் மாற்றமடையும் நிலை சந்தை இடர்பாடாகும்.

### 3.1 நிதி இடர்பாடு

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் இலங்கை மத்திய வங்கியானது அ.டொலருக்கு சார்பாக இலங்கை ரூபாவினை மிதக்க இடமளித்தலின் பின்னர் இலங்கை ரூபாவிற்கு சார்பாக அ.டொலரின் பெறுமதியின் ஏற்றத்தாழ்வினால் அதிகாரசபைக்கு நிதி இடர்நேர் நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.கம்பனியின் அநேக கொடுக்கல் வாங்கல்கள் அதில் பயன்படுத்தப்படும் நிதி அலகான இலங்கை ரூபாவினால் நடைபெறுகின்றன. ஆனால் துறைமுக விரிவாக்கல் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சில வங்கிகளினது நிலுவைகள்,கப்பல் முகவர்களிடமிருந்து பெறவேண்டியவை (வ/ப APL இலங்கை தனியார் நிறுவனம்) போன்ற வட்டியுடனான கடன் பெறுதல் வெளிநாட்டு நாணய (யப்பான் யென் மற்றும் அமெரிக்க டொலர்) பயன்பாட்டில் நடைபெறுகிறது.

அமெரிக்க டொலர் மிதப்பதன் பயனாக 2013 ஆண்டின் அறிக்கை செய்யப்படும் காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு சார்பாக இலங்கை ரூபா தேய்வடைந்ததனால் கையாளல்களுக்கான தாக்கம் ரூபா 1,573,525,317/= ஆக இருந்ததோடு இதுவானது வ/ப APL இலங்கை தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சேவைகள், இன்வோயிஸ் இடுதல் மற்றும் பெறப்பட்ட கடன் மீள் செலுத்தப்படுதலில் ஈட்டப்பட்டது. ஆனால் ஒரேயோரு நிதி அலகு ஊடாக நடாத்திச் செல்லப்பட்ட நிதி வைப்புக்கள் மூலம் மீள் செலுத்துதலின் பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் மற்றும் நிதியோட்டத்தின் தாக்கம் குறைக்கப்படுவதற்காக அதிகார சபையினால் ஒரேயோரு நிதி அலகு பயன்படுத்தப்படுகின்றது.

வட்டியுடனான கடன் மற்றும் வெளிநாட்டு நாணய மூலம் காட்டப்பட்டுள்ள கடன் பெறுதல் பற்றியதான தகவல்களுக்கு தயவு செய்து நிதி கூற்றின் பக்க இல. 21 மற்றும் 22 ஐ பார்க்கவும்.

### வட்டி இடர்நேர்

அரச முறிகள், வங்கி வைப்புக்கள் நிலையானதும் தொடர் வட்டியுடனான கடன் பெறுதல் தொடர்புபடும் சந்தை வட்டி விகிதத்தின் வித்தியாசங்கள் அதிகார சபையின் வட்டி இடர்நேருக்கு உட்படும்.

ரூபா 52,011,103,246/= (2013: ரூபா 48,716,591,122/=) அதிகார சபையின் வட்டியுடனான கடன் மற்றும் பெறுதல்களின் வட்டிகளினது விகிதங்களுக்கேற்ப கணக்கிடப்படுவதுடன் ஏனைய நிதியான ரூபா 166,228,261,153/= (2013. ரூபா 147,060,165,191/=) இன் வட்டி நிலையான வீகிதத்திற்கேற்ப கணக்கிடப்படும்.

அரச வங்கிகள் மற்றும் அரசுடனான வைப்புக்கள் அடங்கலான நிதி மற்றும் வங்கி மீதிகள் அதிகாரசபைக்கு உண்டு. அதிகாரசபையினால் முனைப்பாக வட்டி விகித நகர்வுகள் மேற்பார்வை செய்யப்படுதலின் ஊடாக வட்டி இடர்பாடு கண்காணிக்கப்படுகின்றது.

-

**2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது**

கடன் வசதி பெறுதலின்விதிகள் மற்றும் நிபந்தனைகள்

| கடன் பெயர் | கடன் வழங்கும் நிறுவனம் | நாணயம் | வட்டி விகிதம் | கடன் தொகை (கடன் நாணயத்தில்) | மீதமாகவுள்ள நிலவை 31/12/2014 ஆம் திகதி வரை) | கடன் பெறுதலின் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JBIC SLP-08 | JAICA | JPY | 3.25% | 2,578,954,670 | 70,756,210 | |
| SLP-12 | | JPY | 2.75% | 1,951,977,748 | 267,820,408 | |
| SLP-23 | | JPY | 2.50% | 5,703,407,055 | 1,721,283,733 | |
| SLP-27 | | JPY | 2.50% | 10,432,338,189 | 3,720,941,970 | |
| SLP-30 | | JPY | 2.60% | 19,962,268,331 | 8,215,437,174 | |
| SLP-33 | | JPY | 2.60% | 6,828,220,432 | 3,372,155,476 | |
| SLP-41 | | JPY | 2.60% | 4,878,185,478 | 2,676,789,542 | |
| SLP-46 | | JPY | 2.60% | 2,644,187,565 | 2,248,923,703 | |
| SLP-67 i | | JPY | 1.80% | 1,354,512,318 | 1,274,151,732 | |
| SLP-67 ii | | JPY | 0.75% | 217,445,997 | | |
| SLP-85 | | JPY | 0.30% | 14,495,000,000 | 516,158,806 | |
| ADB-2316 | ஆசிய அபிவிருத்தி வங்கி | US $ | Libor+0.6% | 300,000,000 | 38,247,921,728 | |
| HSBC | ஹொங்கொங் சங்ஹாய் வங்கி கூட்டுத்தாபனம் | US $ | 06 மாதங்கள் +3.99% | 35,000,000 | 1,400,385,000 | |
| BOC | இலங்கை வங்கி | US $ | 06 மாதங்கள் +4% | 62,512,266 | 3,077,070,672 | |
| EXIM - Malaysia | EXIM வங்கி - மலேசியா | US $ | 1-2 வருடம் 3 Mon. Libor+3.3% மற்றும் 3-5வருடம் 3 Mon. Libor+2% | 4,000,000 | 240,066,000 | |
| கடன் பெறவோரின் கடன் தொகை | Exim வங்கி - சீனா | US$ | 6.30% | 306,726,736 | 37,189,222,499 | |
| து.சேஅ சலுகை கடன் மற்றும் செய்திட்டத்திற்கு உபகரணங்களை வழங்குதல் | Exim வங்கி - சீனா | RMB | 2.00% | 960,000,000 | 17,551,897,225 | 198,457,033 |
| கடன் பேறுவோரின் கடன் எல்லை | Exim வங்கி - சீனா | US$ | 6.50% | 65,094,508 | 8,681,654,519 | |
| கடன் பெறுவோரின் விரும்பும் கடன் எல்லை | Exim வங்கி - சீனா | US$ | 2.00% | 600,000,000 | 76,483,505,586 | 1,086,606,192 |
| கப்பல்களுக்கான எண்ணெய் தாங்கித் தொகுதிக்கான மேலதிக கடன் | இலங்கை வங்கி | US$ | Libor+ 7% | 20,839,037 | 2,627,819,152 | 187,068,141 |
| கிழக்கு கொள்கலன் முனையம | இலங்கை வங்கி | US$ | Libor+ 5.5% | 80,000,000 | 6,263,572,253 | 211,493,346 |
| | | | **மொத்தம்** | | **215,847,533,388** | **1,683,624,712** |
| | | சேர்ந்த வட்டி | | | 2,773,671,011 | |
| | | கொடுக்கல் வாங்கலின் ஆகுசெலவு/ ஹம்பாந்தோட்டை தறைமுக கட்டம் 11 இன் முகாமைத்துவ செலவுகள் | | | (381,840,000) | |
| | | | | | **218,239,364,399** | |
| | | குறிப்பு 21 | கடன் பெறுதல் இலங்கை அரசாங்கம் | | 206,270,902,322 | |
| | | குறிப்பு 22 | கடன் பெறுதல் நிதி நிறுவனங்கள் | | 11,968,462,077 | |
| | | | | | **218,239,364,399** | |


மொத்த வருமானம்
25,000
20,000
15,000
10,000
5,000
-
2013
2014
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக கையாளல் வசதிகள்
ஏனையவை


சேவைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் - 2014
2%
10%
16%
12%
60%
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக கையாளல் வசதிகள்
ஏனையவை


இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள்
ரூபா மில்லியன்
40,000
35,000
30,000
25,000
20,000
15,000
10,000
5,000
0
-5,000
2014 செலவினம் ரூபா மில்லியன்
2013 செலவினம் ரூபா மில்லியன் (மீள் குறிப்பிடப்பட்ட)
அதிகரிப்பு/ (குறைவு
%
வேதனங்கள், சம்பளங்கள் கொடுப்பனவுகள்
மேலதிக நேரம்
எரிபொருள், மின்சாரம்,நீர்
சொத்துக்களின் பராமரிப்பு
ஏனையவை
வெளிநாட்டு கடன் மீதான வட்டி
அந்நிய செலாவணி பரிமாற்றம்
தேய்மானம்
பரிமாண அளவுக்கான கொடுப்பனவு
வரிக்கு முன்னரான மொத்த செலவினம்
செலவினம்


பகுதி வாரியாக கையாளப்பட்டவை (மெ/ தொன்) சரக்குகளுக்கமைய கொழும்பு துறைமுகம் (இ.து.அ.சபை+ எஸ்.ஏ.ஜீ.ரீ)
பிரித்த மொத்தம், மற்றும் திரவம் 15%
மாற்றியேற்றல் கொள்கலன் 68%
உள்நாட்டு கொள்கலன் 17%
மாற்றியேற்றல் கொள்கலன்
உள்நாட்டு கொள்கலன்
பிரித்த மொத்தம், மற்றும் திரவம்


இயக்க வருமானம் பற்றிய பகுப்பாய்வு (மூன்று துறைமுகங்களிலும்
ஏனையவை 40%
மாற்றியேற்றல் கொள்கலன் 17%
பிரித்த மொத்தம், மற்றும் திரவம் 8%
உள்நாட்டு கொள்கலன் 35%
மாற்றியேற்றல் கொள்கலன்
உள்நாட்டு கொள்கலன்
பிரித்த மொத்தம், மற்றும் திரவம்
ஏனையவை

பீஒஸ்/ஏ/எஸ்எல்பீஏ/எப்ஏ/2014 2015 திசெம்பர் 14

தலைவர்
இலங்கை துறைமுக அதிகாரசபை

**இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) சீ பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) சீ பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2015 செப்தெம்பர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமகாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால்

பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்திலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வுவு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வுநோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் லெக்க நிதியதிகாரச் சட்டத்தினந் 13 ஆம் பிரிவினது (3 ) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றிணை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 துணை மற்றும் இணைக் கம்பனிகள்

இலங்கை துறைமுக அதிகாரபைக்குச் சொந்தமான துணைக்கம்பனியாக வரையறுக்கப்பட்ட ஜய கொள்கலன் கையாளல் கம்பனியும், இணைக் கம்பனியாக வரையறுக்கப்பட்ட துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைக் கம்பனியும் காணப்பட்டதுடன் அவைகளின் உரித்து முறையே 100 சதவீதம் மற்றும் 39.97 சதவீதம் ஆகக் காணப்பட்டன.

இந்த இரண்டு கம்பனிகளினதும் கணக்காய்வு பிரசித்த கணக்காளர் தொழிற் தகைமையில் ஈடுபட்டுள்ள இரண்டு பட்டயக் கணக்காய்வுக் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.5. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

#### 2.1.1 கம்பனியின் அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையுடம் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கூட்டிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.2 அதிகாரசபையின் அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01**

ரூபா 1,711,023,046 பெறுமதியான ஏனைய ஒதுக்கம் மற்றும் ரூபா 403,049,712 தொகையான விற்பனை செய்வதற்குள்ள நிதிச்சொத்துக்கள் ஒதுக்கமாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சரியாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்ட முறை மற்றும் நோக்கம் தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

1. சொத்துக்கள் மீள் மிப்பீடு செய்யும் போது அமுல்படுத்துகின்ற திகதி, சுயாதீன மிதிபீட்டாளர் ஒருவரை வருவித்து மீள் மதிப்பீடு நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யும் போது பயன்னடுத்தப்பட்ட முறை மற்றும் எடுகொள்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. கொள்வனவு விலை ரூபா 865,696,689 தொகையானது 558 முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு எஞ்சிய பெறுமதி ரூபா 149,507,685 ஆக கணக்குகளில் கணிப்பிடப்பட்டிருந்தபோதிலும் அந்த சொத்துக்கள் மேலும் செயல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தமையால் நியமங்களின் படி அந்த சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடத்திற்கு ஒரு தடவை மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடுகள் தொடரடபாக ரூபா 314,437,380 தொகையான வட்டிக் கிரயம் மற்றும் ரூபா 135,091,717 தொகையான தற்போதைய சேவைக் கிரயத்தை போன்று ஊழியர்களின் சேவைக்காலத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற கட்டுப்பாடுகளின் அடிப்படையில் இலாபம் (Actuarial Gain) ரூபா 125,283,635 தொகை விரிவான வருமானக் கூற்றில் தனித்தனியாக வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரிசை அமைச்சின் பிரதி அமைச்சரொருவரின் பதவியணியினருக்கு பாவனைக்கென வழங்கப்பட்ட ரூபா ஒரு மில்லியன் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய வாகனமொன்று விபத்திற்கு உட்டபட்டமையின் காரணமாக, மீண்டும் பாவனைக்கு எடுக்க முடியாத வகையில் அழிவடைந்து 8 வருட காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 1,000 எஞ்சிய பெறுமதி மற்றும் ரூபா 999,000 திரண்ட பெறுமானத் தேய்வைக் கொண்ட அந்த வாகனம் புத்தகங்களிலிருந்து அகற்றுதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சூரியவெவ சர்வதேச கிரிகெட் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக இலங்கை கிரிகெட் நிறுவனத்திலிருந்து அதிகாரசபைக்கு கிடைத்த ரூபா 1,200 மில்லியன் தொகையில் நிர்மாணக் கம்பனிக்கும் பெறுமதி சேர் வரியாகவும் செலுத்தப்பட்ட தொகைகள் கழிக்கப்பட்டு எஞ்சிய தொகையான ரூபா 71,934,708 பெறுமதியொன்று இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்குச் செலுத்தவேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் ஒரு பகுதியாக சூரியவெவ சர்வதேச கிரிகெட் விளையாட்டரங்கு நிர்மாணிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மேலும் நிர்மாணக் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,998,633,762 தொகை மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,926,699,054 பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் படி மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ஆதனவரி மற்றும் வாடகை ரூபா 137,549,928 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருநத்தது.

(ஈ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,228,666,551 பெறுமதியொன்று மிள வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கணக்குகளில் போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுருக்கவில்லை.

(உ) நடைமுறையில்லாச் சொத்துக்களில் உள்ளடப்பட்ட அரச வங்கியொன்றில் முதலீட்டு வைப்புக்களில் குறைவு ரூபா 224,988,966 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக தொழிற்பாடு மூலதன வேறுபாட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

(அ) கடன்பட்டோர்கள்

ரூபா 1,269 மில்லியன் பெறுமதியான கடன்பட்டோர் மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விடயம் | காலவீச்சு | | |
|---|---|---|---|
| | பெறுமதி | வருடம் 1 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட | 5 ற்கு மேல் |
| | ரூபா | ரூபா | ரூபா |
| கப்பல் முகவர் கடன்பட்டோர் | 56,706,399 | 314,190 | 40,350,286 |
| அரசாங்க நிறுவனங்கள் சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக | 350,251,598 | 99,401,390 | 245,113,393 |
| ஈடுபடுத்தப்பட்ட கப்பல் முகவர் | 630,722,882 | 10,419,856 | (6,069,396) |
| கப்பல் முகவர் முற்பணம் | 83,079,473 | 22,230,577 | 12,092,638 |
| வியாபார ரீதியற்ற கடன்பட்டோர் - மின்சாரம் | 1,184,990 | - | 1,184,990 |
| வியாபார ரீதியற்ற கடன்பட்டோர் வளாக வாடகை | 72,144,489 | 8,299,746 | 55,374,614 |
| கப்பல் முகவர் கடன்பட்டோர் - திருகோணமலை | 13,698,085 | 1,285,512 | 737,746 |
| கப்பல் முகவர் கடன்பட்டோர் - காலி | 61,225,488 | 8,968,850 | 9,368,582 |

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 1 - 5 வருடங்களுக்கிடையிலான கால வீச்சில் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 150,920,121 ஆக இருந்ததுடன் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 371,101,645 இருந்தது.

(ஆ) **வைப்பு மற்றும் முற்பணம்**

ரூபா 26,474 மில்லியன் பெறுமதியான வைப்பு மற்றும் முற்பணம்தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விடயம் | காலவீச்சு | | |
|---|---|---|---|
| | பெறுமதி | வருடம் 1 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட | 5 இற்கு மேல் |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வெளிநாட்டுக் கொள்வனவு முற்பணம் | 228,222,208 | 163,542,176 | - |
| சுங்கவரி | 74,133,425 | 57,696,739 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 4,227,334 | - | 1,529,963 |
| ஒப்பந்தத்திற்கான முற்பணம் | 26,102,927,390 | 26,014,777,597 | - |
| அரசாங்க நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட முற்பணம் | 64,558,502 | 2,572,198 | 61,986,304 |

2014 திசெம்பர் 31 ஆந்திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 1 - 5 வருடங்களுக்கிடையிலான கால வீச்சில் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,238,588,710 ஆக இருந்ததுடன் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 63,516,267 இருந்தது.

### 2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்ளநாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 111 (அ) பிரிவு | உழைக்கும் போது வரி செலுத்துதல் தனிப்பட்ட சம்பளத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பொதிலும், இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தயோகத்தர்களினால் சம்பளம் மற்றும் ஏனைய உழைப்புகளுக்காக 2008 அம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை 321 மில்லியன் கூட்டுத்தெகையான உழைக்கும் போது செலுத்தும் வரி அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிருவாக்க் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக உத்தயோகபூர்வ வாகனங்களுக்காக உரித்தற்ற 32 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 40,000 படி மாதாந்த படி ரூபா 15,360,000 தொகையும் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக உரித்துடைய 5 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 30,000 தொகையான மாதாந்தப் படிக்குப் பதிலாக ரூபா 40,000 படியும் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா |

| | |
|---|---|
| | 600,000 கூட்டுத்தொகையும் மேலதிமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 20 உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட வாகனங்களுக்காக மாதாந்தம் 150 லீற்றருக்கும் 180 லீற்றருக்கும் இடைப்பட்ட எரிபொருள் அளவு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் வழங்கப்பட்ட எரிபொருளின் பெறுமதி ரூபா 13,487,480 ஆகும். |
| (இ) 2014 நவம்பர் 22 ஆந் திகதிய PRE/2015/43 ஆம் இலக்க மற்றும் 2014 நவம்பர் 26 ஆந்தி திகதிய PRE/2015/4/C ஆம் இலக்கதேர்தல் திணைக்களத்தின் சுற்றிக்கை | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஊவா மாகாண சபைத்தேர்தல் மற்றும் 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல்களுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிரந்தர பதவியணியினர்களில் 573 பேர் வழமையான கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு முழு நேர அரசியல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக அந்த ஊழியர்களுக்கு 2014 திசெம்பர் மாதத்தின் போது மாத்திரம் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 41,174,267 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் காண்பிக்கப்படாமை மற்றும் அகற்றப்பட வேண்டிய சொத்துக்கள் அகற்றப்படமையின் காரணமாக சொத்துப் பதிவேடு உரிய பிரகாரம் பராமரிக்கப்படமையால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களிலும் காணப்படுகின்ற நிலையான சொத்துக்களின் பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாய்ண்டிற்கான தொகுதியின் நிதி விளைவுகள் ரூபா 7,948 மில்லியன் தேறிய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 1,626 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது தேறிய இலாபம் ரூபா 6,322 மில்லியனால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று வருடங்களுக்கான தொகுதியின் ஒப்பிடப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
| ஒரு மெற்றிக் தொன்னுக்கான செயற்பாட்டு இலாபம் ரூபா. மில்லியன் | 235.44 | 167.9 | 61.59 | 3.13 | (28.48) |
| மொத்த வருமானம் ரூபா மில்லியன் | 37,492 | 34,724 | 35,526 | 31,287 | 28,506 |
| மொத்த செலவினம் ரூபா மில்லியன் | 28,595 | 33,152 | 31,913 | 30,965 | 29,702 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) ரூபா மில்லியன் | 8,897 | 1,572 | 3,613 | 329 | (1,196) |
| வருமான வரி ரூபா மில்லியன் | - | (1) | (1,185) | (207) | 157 |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) ரூபா மில்லியன் | 8,897 | 1,571 | 2,478 | 122 | (1,032) |

அதிகாரசபையின் மொத்த வருமானம் முன்னைய ஆண்டில் முறையாக அதிகரித்திருந்ததுடன் மொத்தச் செலவினம் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தமை குறிப்பாகக் காணப்படுகின்ற நிலைமையாகும். அதற்கு முக்கியமாக மின்சாரம், எரிபொருள் மற்றும் ஏனைய செலவினங்கள் குறைவடைந்திருந்தமை காரணமாக இருந்தது. வரிக்கு முன்னர் மற்றும் பின்னரான இலாபம் முன்னைய 04 வருடங்களில் சீராக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது வேறுபடுத்திக் காண்பிக்கும் வகையிலான அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. அதற்கு பிரதான காரணம் வெளிநாட்டு நாணயம் மாற்று விகிதம் அதிகரித்ததன் மூலம் வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் ஏற்பட்டமையாகும்.

மீளாய்வாண்டினதும் கடந்த மூன்று ஆண்டுகளினதும் தொகுதியின் ஒப்பிடப்பட்ட விகிதமும் சில சதவீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
| புரள்விற்கு வரிக்குப் பின்னரான இலாபம்/(நட்டம்) சதவீதத்தில் | 21.19 | 20.04 | 11.16 | 0.39 | (3.62) |
| நீண்டகால கடன்களுக்கு உரிமை மூலதனம் சதவீதத்தில் | 2.43 | 2.29 | 1.79 | 1.55 | 1.33 |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் புரள்வு சதவீதம் | 0.13 | 0.14 | 0.15 | 0.14 | 0.14 |
| தொழில்படு மூலதன விகிதம் | 1:2.15 | 1:2.51 | 1:2.25 | 1:.19 | 1:1.34 |
| விரைவு விகிதம் | 1:2.04 | 1:2.41 | 1:1.06 | 1:.78 | 1:1.13 |
| கடன் உரிமை மூலதனம் விகிதம் | 1:2.46 | 1:2.45 | 1:1.89 | 1:1.64 | 1:1.21 |

புரள்வு மற்றும் வரிக்கு பின்னரான இலாபம் கடந்த சில வருடங்களில் சீராக அதிகரித்திருந்ததுடன் தொழிற்படு மூலதனம் மற்றும் விரைவு விகிதம் என்பன உச்ச நிலையில் காணப்பட்ட போதிலும் கடன் உரிமை மூலதன விகிதம் சீராக வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கொழும்பு துறைமுகத்தில் கப்பல் வருகை தொடர்பாக முன்னைய மூன்று வருட செயலாற்றலை பரீட்சித்த போது 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது கொள்கலன்களுடனான கப்பல்களின் வருகை 1.61 சதவீத்தினாலும் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் கொள்கலன்களுடனான கப்பல்களின் வருகை 3.08 சதவீத்தினாலும் அதிகரித்திருந்தது. அவ்வாறே பாரம்பரிய கப்பல்களின் வருகை 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது 26.92 சதவீதத்தினாலும் குறைவடைந்துருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு துறைமுகத்தில் ஆழமான இறங்கு துறையொன்றை நிர்மாணித்து செயற்பாடுகள் மேற்கொண்டு கையளித்தல் அடிப்படையில் (Built operator and Transfer) . அதிகாரசபையினால் 35 வருட காலத்திற்காக தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த வாடகையாளரினால் ஆதனவரி செலுத்த வேண்டியதற்கான நிபந்தனையொன்று உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்தமையால் குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலத்தின் அளவு மற்றும் அந் நிலத்தில் பொருத்தப்பட்ட உபகரணங்களுக்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 6,776,000 தொகையான ஆதன வரி அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டம் 2010 ஒக்தோபர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த திகதியின் பின்னர் 2 சந்தர்ப்பங்களின் போது செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்ற கால எல்லை நீடிக்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 110.78 மில்லியன் கடன் முழுமையாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த போதிலும் அதற்காக 1.2 சதவீத வட்டியொன்று கடன் பிணைமுறிக கட்டணமாகச் ( Commitment Charges ) செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் இலக்கிடப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்காக முடியாதிருந்தமையின் காரணமாக இந்த செலவினங்களை செய்ய வேண்டியேற்பட்டிருந்தது.

(இ) இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய காங்கேசன்துறை துறைமுகத்தை ஆழமாக்குவதற்காக துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் அமைச்சிலிருந்து 2009 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 25 மில்லியன் நிதி உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பாடாது 5 வருட கால துறைமுக அதிகாரசபையின் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 4.3. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான காலத்தின் போது கொழும்பு துறைமுகத்தில் அதிகாரசபையின் கொள்கலன் கையாளலின் இயலளவை மொத்த கொள்கலன் கையாளலின் சதவீதமாகக் கருத்திற் கொள்ளும் போது 81 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான துரிதமாக வீழ்ச்சியொன்று. எவ்வாறாயினும் கொழும்பு துறைமுகத்தில் போட்டியாளராக செயற்படுகின்ற தனியார் கம்பனியொன்று அக்காலத்தினுள் கொள்கலன் கையாளலின் இயலளவில் துரித அதிகரிப்பை உரித்தாக்கிக் கொண்டிருந்ததுடன் அதற்காக அதிகாரசபையின் கடந்த பன்னிரண்டு வருடங்களில் பின்வரும் முறையில் ஒழுங்குமுறையாக கொள்கலன் கையாளல் வீழ்ச்சியடைந்திருந்தது.

| ஆண்டு | தனியார் கம்பனியினால் கொள்கலன்களைக் கையாளும் இயலளவு | சதவீதம் | அதிகாரசபை யினால் கொள்கலன் களைக் கையாளும் இயலளவு | சதவீதம் | ஆண்டின் போது கொள்கல ன் கையாளல் களின்மொ த்த இயலளவு |
|---|---|---|---|---|---|
| 2001 | 329,670 | 19 | 1,396,946 | 81 | 1,726,616 |
| 2002 | 558,025 | 32 | 1,206,694 | 68 | 1,764,717 |
| 2003 | 624,439 | 32 | 1,334,900 | 68 | 1,959,339 |
| 2004 | 899,720 | 41 | 1,320,845 | 59 | 2,220,565 |
| 2005 | 931,526 | 38 | 1,523,794 | 62 | 2,455,300 |
| 2006 | 1,335,411 | 43 | 1,743,669 | 57 | 3,079,078 |
| 2007 | 1,546,497 | 46 | 1,834,734 | 54 | 3,381,231 |
| 2008 | 1,739,668 | 47 | 1,747,670 | 53 | 3,687,338 |
| 2009 | 1,749,809 | 51 | 1,714,488 | 49 | 3,464,297 |
| 2010 | 1,970,268 | 48 | 2,167,173 | 52 | 4,137,441 |
| 2011 | 1,963,441 | 46 | 2,299,446 | 54 | 4,262,887 |
| 2012 | 1,870,270 | 45 | 2,316,849 | 55 | 4,187,120 |
| 2013 | 1,746,802 | 41 | 2,501,863 | 59 | 4,248,655 |
| 2014 | 1,661,940 | 39 | 2,559,339 | 61 | 4,221,279 |

அதன் பிரகாரம் துறைமுகத்தின் பிரதான பணியான கொள்கலன்கையாளல் செயற்பாடுகளில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பங்களிப்பு கடந்த கிட்டிய 06 வருடங்களில் 49 சதவீதம் முதல் 61 சதவீதத்திற்கிடையிலான வீச்சில் காணப்பட்டது. அந்நிலைமை ஏற்படுவதற்கு 35 வருட காலத்திற்காக நிர்மான நடவடிக்கைகளை மேற்கொண்டு கையளிக்கும் (Built Operator and Transfer) முறையின் கீழ் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு கொழும்புத் துறைமுகத்தில் உள்ள மிகவும் சிறந்த ஆளமான 06 கப்பல் தரிப்பிடங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் வழங்கப்பட்டமை காரணமாக இருந்தது.

(ஆ) திருகோணமலை மற்றும் காலித் துறைமுகத்தில் செயல் நடவடிக்கைகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டமை மற்றும் குறைந்த எண்ணிக்கையில் கப்பல் வந்தமை தொடர்ச்சியாக நட்டமடைவதற்குக் காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், கடந்த சில வருடங்களில் பெறப்பட்ட நட்டம் முறையாக குறைந்து காணப்பட்டது.

| ஆண்டு | நட்டம் ரூபா மில்லியன் | |
|---|---|---|
| | திருகோணமலை துறைமுகம் | காலித் துறைமுகம் |
| 2007 | (405) | (275) |
| 2008 | (379) | (279) |
| 2009 | (319) | (399) |
| 2010 | (383) | (345) |
| 2011 | (318) | (147) |
| 2012 | (240) | (47) |
| 2013 | (232) | (96) |
| 2014 | (211) | 95 |

(இ) எண்ணெய்த் தாங்கி தொகுதியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மதியுரையாளர் ஒருவரைச் சேர்ந்த மீளாய்வாண்டின் போது அந்த மதியுரையாளருக்கு ரூபா 2,319,723 தொகை மதியுரைப்படியாகச் செலுத்தப்பட்டிருக்கும் போது சர்வதேச சந்தையில் எண்ணெய் விலைகளின் தளம்பல்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் எண்ணெய்

களஞ்சியப்படுத்தப்பட்டமையின் காரணமாக இருப்பு இழப்பீடு நட்டமாக ( Impairment of Bunkering Oil )ரூபா 823,384,990 தொகையும், அவ்வாறே எண்ணெய் இருப்புக்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட கடனுக்கான வட்டியாக ரூபா 97,039,050 தொகையுமாக ரூபா 915,329,490 கூட்டுத்தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**4.4. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கோள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும்போது கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக இலங்கை துறைமுக முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைச் சேவைக் கம்பனியின் ஊடாக நடவடிக்கைகளை மேறகொள்வதற்காக தரகாக ரூபா 22,712,982 தொகையான மேலதிக செலவினம் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் கொழும்புத் துறைமுகத்தை செயற்தினாக்குவதற்காகவும் துறைமுகத்தை விரிவாக்குவதற்காகவும் ஆலோசனைச் சேவை ஒப்பந்தத்திற்காக ரூபா 1,199 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியும் அதிகாரசபையும் சேர்ந்து செலவிடப்பட்டிருந்தது அதில் ரூபா 399 மில்லியன் கொழும்புத் துறைமுகத்தை செயற்திறனாக அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டதன் பின்னரும் திட்டங்களை அமுல்படுத்துதல் மீளாய்வாண்டின் போது கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பெறப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் தவணைப்பணம் தெடர்ந்தும் செலுத்தவேண்டியிருந்தது.

(இ) தெற்காசிய இறங்குதுறை தனியார் கம்பனிக்கு கையளிப்பட்ட பாரந்தூக்கிகளுக்காக கிடைக்கவேண்டிய ரூபா 141,632,944 தொகையான பங்கு அதிகாரசபைக்குக் கிடைக்கப் பெறாதிருந்தமையால் பல வருடங்களாக கிடைக்க வேண்டிய பங்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கொழும்புத் துறைமுக இறங்குதுறைகளிற்கிடையில் கொள்கலன்களைக் கொண்டு செல்ல / இடமாற்றுதல் தனியார் போக்குவரத்துக் கொள்கலன் கம்பனியொன்றிற்கு கையளித்திருக்கும்போது இலங்கை துறைமுக அதிகாரச பையின் அங்கீகாரத்துடன் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைக் கம்பனியால் மேலும் ஒரு தனியார் கொள்கலன் கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் அந்த உடன் படிக்கையின் படி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இறங்கு துறைகளுக்கிடையே கொள்கலன்களைக் கொண்டு செல்வதற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டமையினால் அக்கம்பனி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. இதனால் குறித்த தனியார் கொள்கலன் போக்குவரத்துக் கம்பனிக்கு இழப்பீடு செலுத்துவதற்கு ஏற்படுகின்றமையினால் துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 275 மில்லியன் தொகை செலுத்த வேண்டிய இழப்பீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**4.5 அத்திகாரசபையின் வளங்களின் முறையற்ற பாவனை**

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் ரூபா 113,061 பெறுமதியான நுகர்வுபொருட்கள், உபகரணங்கள் மற்றும் 3 லொறிகள் என்பன பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.6 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீள் ஏற்றுமதிக்காக கப்பல் முகவரால் எடுத்துச் செல்லப்பட்ட 04 படகுகள் 112 நாட்காளாக துறைமுகத்தில் வைக்கப்பட்டதற்கான துறைமுகக் கட்டண விபரத்தின் (Tariff) பிரகாரம் களஞ்சியம் / நிலக் கட்டணமாக ரூபா 67,233,290 தொகை அறவிட வேண்டியிருந்த போது

ரூபா 12,019,8825 தொகை மாத்திரம் அறவிடப்பட்டமையின் காரணமாக துறைமுக அதிகாரசபைக்கு ரூபா 55,213,465 தொகையாக நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை துறைமுக அதிகார சபையினால் மீள் ஏற்றுமதி மற்றும் ஏனைய கொள்கலன் கையாளல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கப்பல் முகவர் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளுக்கு இணங்க இயலளவின் படி நலன்கள் வழங்கலில் காணப்பட்ட அறவீட்டுத் திட்டப் பதவேட்டிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் 2011 முதல் 2014 வரையான காலத்தில் கீழே காண்பிக்கப்பட்ட பிரகாரம் ரூபா 1,139,321,593 கூட்டுத்தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

| ஆண்டு | நிதிரீதியான நட்டம் |
|---|---|
| | ரூபா |
| 2011 | 300,309,229 |
| 2012 | 333,295,278 |
| 2013 | 255,009,524 |
| 2014 | 250,707,562 |
| **மொத்தம்** | **1,139,321,593** |

### 4.7 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2008 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையால் ரூபா 444,008,467 தொகை செலவில் 02 "லெவல் லைன் போடல்" பாரந்தூக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பாரந்தூக்கிகளைச் செயற்பாடுத்துவதற்குத் தேவையான பீலி தயாரிக்கப்படாமையால் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. இது தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக் காட்டியதன் பின்னர் பாரந்தூக்கிகளைச் செயற்படுத்துவதற்காக தேவையான இரும்பு பீலிகளுடன் ஓடக் கூடிய பாதை தயாரிக்கப்பட்ட போதிலும் இவ்வாறான வகையிலான பாரந்தூக்கிகளின் தேவை தொடர்பாக சாத்தியவள ஆய்வு அதிகாரசபையால் மேற்கொள்ளாமல் கொள்வனவு செய்யாமையினால் இந்த பாரந்தூக்கிகள் தற்போது செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் தூரநோக்கின் (Vision) பிரகாரம் 2015 அளவில் ஆசியாவில் பிரதானமான கப்பல்களைக் கையாளும் துறைமுகமாக இலங்கை துறைமுக அதிகாரசபை நியமிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதிகாரசபையின் நிதி நிலைமை, கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள் மற்றும் கப்பல்களின் வருகை தொடர்பான தரவுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்துபார்த்தபோது செயற்திறனை மேலோங்கச் செய்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் உன்னத நோக்கின் கீழ் காண்பிக்கப்படுகின்ற காலி துறைமுகத்தை பிராந்திய துறைமுகமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் கையாளப்படுகின்ற வணிகரீதியான கப்பல் சரக்குகளைக் கையாள்வதற்கான மாற்றுவழித் துறைமுகமாக அபிவிருத்தி செய்தல் காண்பிக்கப்பட்டிருந்தும் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான தரவுகளை இணக்கஞ் செய்தபோது காலித் துறைமுகத்தில் கப்பல் வருகை குறைவடைந்தமையாலும் தொடர்ச்சியாக நட்டத்தை பெற்றதன் காரணமாகவும் இந்த உன்னத நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(இ) சொத்துக் கட்டுப்பாடு



**எச் எம் காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**பெயர்**

இலங்கை துறைமுக அதிகாரசபை

**நிறுவனத்தின் நிலைமை**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பல் சரக்கு கூட்டுச்சபை துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றிணைத்து 1079 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்**

தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தினை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நிலையிலுள்ள நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பான தொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ✦ நிலைத்திருக்கும் தன்மை
- ✦ காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
- ✦ சாதனைக்குரிய உத்தரவாதம்
- ✦ குழு உணர்வு
- ✦ அர்ப்பணிப்பு
- ✦ உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
- ✦ பூரணமான செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள் தொடர்பிலும் பராமரித்துச் செல்லல் பிரதான நிறைவேற்றுநராக முகாமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேட்ட முகாமைத்துவ ஆளணியினரினதும் பொறுப்பாகும்.

**தலைமை அலுவலகம்**

**கொழும்பு துறைமுகம்**

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு – 01
தொ.பே.இல : (+94 11) 2421201, 2421231
தொ . நகல் : (+94 11) 2440651

**காலி துறைமுகம்**

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல (+94 91) 2232213, 2234936

**திருகோணமலை துறைமுகம்**

புதிய நிர்வாக கட்டடம்
சீனக் குடா
திருகோணமலை
தொ.பே.இல : (+94 26) 2222460

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல:306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்**

**www.slpa.lk**